திகன, தெல்தெனிய கலவரம் 10

யார் அந்தக் கறுப்பாடு?



09

இந்நூற்றாண்டின் கொடிய குற்றவாளிகள்

தம்பர அமில தேரர்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

07



கண்டி கலவரம் ராஜபக்ஷ வின் அரசியல் சூழ்ச்சி






# மீள்பார்வை

මීල්පාර්වෙ


Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 390 • 16 மார்ச் 2018 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் ஆகிர் 1439 • விலை 40.00







# பிரதமரின் வாக்குறுதி நிறைவேறவில்லை

## தாக்குதல் நடத்தியவர்களுக்கும் நஷ்டஈடு



இனவாதிகளின் கண்டி தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று (16) வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நஷ்டஈடுகள் வழங்கப்படுவதாக பிரதமர் அறிவித்திருந்த போதிலும் இதுவரை அதற்கான எந்த ஏற்பாடுகளும் நடைபெறவில்லை என கண்டியில் இயங்கும் தொண்டு நிறுவனங்கள் பலவும் தெரிவிக்கின்றன. (பக். 02)





## 885 கோடி அழித்தொழிப்பு

(அஷ்ரப் ஏ. ஸமத்)

நடந்து முடிந்த கண்டித் தாக்குதல்களின் போது சேதமாக்கப்பட்ட முஸ்லிம்களின் சொத்துக்களின் மதிப்பீடு 885 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள், பள்ளிவாசல்கள் என சேதமாக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள் 885 கோடி (பக். 02)

## ஆவணப்படுத்தும் பணிகள் ஆரம்பம்



இலங்கை முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் இனவாதத் தாக்குதல்கள் வரிசையில் அண்மைய அத்தியாயமான கண்டியத் தாக்குதல்கள் தொடர்பான விபரங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் முஸ்லிம் சமூக அமைப்புக்கள் இறங்கியுள்ளன.

கண்டிய அனர்த்தத்தில் பாதிக்க்கபட்ட முஸ்லிம்களது முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் வேலைகள் பெரும்பாலும் பூரணமடைந்திருக்கின்றன. தற்பொழுது இங்கு நடந்த சம்பவங்களையும் இழப்புக்களையும் ஆவணமயப்படுத்தலுக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. (பக். 14)

## அப்படி ஒரு மருந்தே கிடையாது:

### உலக சுகாதார நிறுவனம்



அம்பாறை மற்றும் கண்டி கலவரங்களை தொடர்ந்து ஆண்மையிழக்கச் செய்யும் மருந்துகள் குறித்த இலங்கைச் சிங்களவர்களின் நம்பிக்கை சர்வதேச சமூகத்தையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.
(பக். 02)

## சமூக ஊடகடங்கு: அரசுக்கு இலாபம்


facebook

சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதாக இளைஞர் விவகார, தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். தொழில் நுட்பம், ஈ வர்த்தகம், சுற்றுலாத்துறை போன்றன இதனால் பாதிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடை நீடிக்குமானால் இலங்கையின் பொருளாதாரமும் நாட்டின் நன்மதிப்பும் பின்னடையும் என அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் அதுல் கேஷாப் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களுக்கு தற்பொழுது விதிக்கப்பட்டுள்ள தடையின் பின்னர், இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவுக்கு (பக். 02)

## சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள் அரசாங்க நிதியில் திருத்தப்படும்



இனவாதிகளின் கண்டித் தாக்குதல்களில் சேதமாக்கப்பட்ட 24 பள்ளிவாசல்களையும் அரசாங்க செலவில் திருத்தம் செய்து தருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அப்துல் மலிக் தெரிவித்தார்.

இவற்றின் சேதமதிப்பீடு தொடர்பாக குறித்த பிரதேசங்களின் அரசாங்க அதிபர்களிடம் கோரியிருப்பதாகவும் அவை கிடைத்த பின்னர் அவற்றுக்குத் தேவையான நிதியினைக் கோரி அரசாங்கத்திடம் விண்ணப்பிக்க (பக். 14)

## மதத்தலங்கள் அமைப்பதற்கு இனி புதிய கட்டுப்பாடுகள்



புதிதாக மதஸ்தலங்களை நிர்மாணிப்பதற்கும், மதத்தலங்களின் ஒலிபெருக்கிச் சப்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் தேசிய ரீதியான கொள்கை வகுக்கப்படவுள்ளதாக புத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புத்திஜீவிகள் அடங்கிய குழுவொன்று இந்தக் கொள்கைகளை வகுக்கும், புதிதாக ஒரு மதஸ்தலம் நிர்மாணிக்கப்படும் போது அதற்கான குறைந்த பட்ச நிலப்பரப்பு, ஆகக் குறைந்த குடும்பங்கள், தூரம் என்பனவும் கவனத்தில் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (பக். 02)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன, மத மோதல்களை தணிப்பதற்கான மனித உரிமை அடிப்படையிலான அணுகுமுறை

- அனஸ் அப்பாஸ்

மனிதப் பிறவி என்ற பயனால் ஒவ்வொரு உரிமைகள் உடைய தனித் தனி மனிதரும் மற்றவர்களின் உரிமைகளை மதிக்கவும், பாதுகாக்கவும் வேண்டிய பொறுப்புடையவர்கள். இந்த வகையில் மதங்கள், சனசமூக நிறுவனங்கள், சிவில் சங்கங்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்கள், தனியார் கம்பனிகள், ஊடகங்கள், ஊர் மட்ட குழுக்கள், வீட்டுத்துறை என்பன இந்த தார்மீகக் கடமையை தன்னகத்தே சுமந்துள்ளது. அத்தோடு அரசும் சட்டரீதியாக தார்மீகக் கடமைப் பொறுப்புடையவர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான (மனித உரிமைகளை அவர்கள் மதிக்கின்றனர் என்பதை உறுதி செய்தல்) பொறுப்பை தன்னகத்தே கொண்டுள்ளது.

சம வாய்ப்பு அடிப்படையில் பங்குபற்றல், நியாயமாக பொறுப்புக் கூறல், பாரபட்சமின்மை, உரியவருக்கான அதிகாரமளித்தல், மனித உரிமைகளுக்கான நேரடித் தொடர்புகள் மூலம் மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையின் பிரிவுகள் பட்டியலிடப்படுகின்றன.

மனித உரிமை அடிப்படையிலான அணுகுமுறையில் மோதல்தணிப்புக்காக,

- முரண்பாட்டுக்கான பல்வேறு அடிப்படைக் காரணங்களை நிவர்த்தி செய்தல்.
- பின்தங்கிய குழுக்கள் மீது கவனம் செலுத்தல்.
- முரண்பாட்டு தணித்தலில் பெண்களின் அர்த்தமுள்ள பங்களிப்பை உறுதி செய்தல்
- பின்தங்கிய குழுக்களுக்கும் அரசுக்குமிடையிலான தொடர்பை நிறுவனமயப்படுத்தல்.
- முரண்பாட்டை கையாள்வதற்கும், தீர்ப்பதற்குமாக சட்டவிதிகளை ஒப்புக்கொள்ளல்.
- குழுக்களிடையே உள்ள வித்தியாசங்களை இணைக்கக்கூடிய பொதுவான மதிப்புகளின் மூலம் ஒன்றை வழங்கல்
- குழுக்களிடையிலான சாத்தியமான பதட்டங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை தகவல் வழங்கல்

போன்ற விடயங்கள் கவனம் செலுத்தப்படுகின்றன.

இலங்கை தற்போது எதிர்கொண்டு வருகின்ற இன முரண்பாட்டு சூழல் சர்வதேச காரணிகள் / சக்திகள், உள்நாட்டு அரசியல் காரணிகள், டயஸ் போராக்கள், வளர்ச்சிசார் பொறாமைகள், தனிப்பட்ட குரோதங்கள் போன்ற பல்வேறு வகுதிகளின் விளைவுகளாகவே நோக்கப்படுகின்றன.

இவை அனைத்தையும் முறியடிக்கும் இன, மத முரண்பாட்டு தணிக்கை பொறிமுறையில் அர்த்தமுள்ள விதத்தில் சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும். குறிப்பாக இளைஞர்கள், பெண்கள், ஊடகத்துறை, தீர்மானம் எடுக்கும் பொறுப்புடையோர், மதத் தலைவர்கள் உள்வாங்கப்பட வேண்டும். இவர்களிடையே வினைத்திறனான தொடர்பாடல் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பாகிஸ்தானில் மிகுந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் 15,000 உறுப்பினர்களுடன் போராளி குழுக்களுக்கு எதிராக ஆதரவு திரட்டலிலும், சகிப்புத் தன்மையையும் சமய பாரபட்சமின்மையை நிறுத்துவதற்கும் பேரணிகள் மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திவரும் ''றுவன்டரி தெஹ்ரீக்'' அமைப்பையும், மியன்மாரில் முஸ்லிம் வெறுப்புணர்வு, கொலைகளுக்கு எதிராக செயற்படும் ''பஞ்ஷாகர்'' (மலர்ப் பேச்சு) அமைப்பையும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் முரண்பாட்டுத் தணிப்புக்கான வழிகாட்டியாக குறிப்பிட முடியும்.

''இராணுவ ஆட்சியின்போது கருத்து சுதந்திரத்துக்காகப் போராடினோம். தற்போது கருத்துச் சுதந்திரம் ஓரளவிற்கு உள்ளதென நாம் கூறமுடியும். ஆனால், பேச்சு சுதந்திரத்துடன் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் வருகின்றன. சில வெறுப்பூட்டும் பேச்சுக்கள் சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஆபத்தானவையாக உருவெடுத்துள்ளன'' என மியன்மாரின் பஞ்ஷாகர் தலைவரொருவரான நேய் போனி லாட் கூறுகின்றார்.



**''இராணுவ ஆட்சியின்போது கருத்து சுதந்திரத்துக்காகப் போராடினோம். தற்போது கருத்துச் சுதந்திரம் ஓரளவிற்கு உள்ளதென நாம் கூறமுடியும். ஆனால், பேச்சு சுதந்திரத்துடன் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் வருகின்றன. சில வெறுப்பூட்டும் பேச்சுக்கள் சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஆபத்தானவையாக உருவெடுத்துள்ளன'' என மியன்மாரின் பஞ்ஷாகர் தலைவரொருவரான நேய் போனி லாட் கூறுகின்றார்.**

முரண்பாடு வளர்கின்றது என்பதன் குறிகாட்டி வன்முறை இடர் அதிகரிப்பாகும். முரண்பாடுகளின்விளைவுகளாகத் தோன்றும் இழப்புக்களின் போது உணர்ச்சி மேலீடு, அக்கறை, பரிதாபத்தின் அடிப்படையில் சமூக அமைப்புக்கள், தனி நபர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரண பகிர்வை மேற்கொள்வதை அவதானிக்கின்றோம். இது வரவேற்கத்தக்கது என்றாலும் முறையாக அரசாங்க இழப்பீட்டை பெறவோ, அநீதியை விசாரிக்கும் பொறிமுறை (நீதித்துறை)க்கு சவாலாகவோ அவை அமைந்துவிடலாகாது.

இன்று நாட்டில் இன, மத ரீதியாக ஒரு இழப்பு ஏற்படும்போது மனித உரிமை வகுதிக்குள் அடங்கும் பெண்கள் அமைப்புக்கள், இளைஞர் விவகார குழுக்கள், இதர உரிமை சார் அமைப்புக்கள் அதனை எந்தளவு உரிமை சார்ந்த விடயமாக கவனத்திற்கொண்டு போராடுகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது. தனியார் சட்டத் திருத்த கோரிக்கைகள், வேலையில்லா திண்டாட்டம், துஷ்பிரயோகங்கள் போன்றவற்றில் கவனத்தை குவிக்கும் உரிமை சார் அமைப்புக்கள் இன, மத முரண்பாட்டு விளைவுகளான இழப்புக்களின்போது குறித்த வகுதிகளான பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் மற்றும் குரலற்றவர்களின் மன வலிகளை, உரிமை மீறல்களை நொடியில் மறந்துவிடுகின்றனர். ஆரோக்கியமான கருத்துப் பரிமாறல்களை ஊக்குவிப்பதோடு, சம்பவக் கற்கைகள் ஊடான மீளாய்வுகளையும் மனித உரிமைகள் சார் அணுகுமுறையில் பயன்படுத்த நாம் முன்வர வேண்டும்.

இலங்கை அரசு CAT, CAT-OP, CCPR, CCPR-OP2-DP, CED, CEDAW, CERD, CESR, CMW, CRC, CRC-OP-AC, CRC-OP-SC, ஆகிய சர்வதேச பொருத்தனைகளில் கையெழுத்திட்டுள்ளதன் மூலம் இலங்கை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் கடப்பாட்டில் உள்ளது. தவிரவும் 2015 ஆம் ஆண்டு இலங்கை அரசானது, நல்லிணக்கம் தொடர்பான தனது அர்ப்பணிப்புக்கு புதிய தோற்றப்பாடொன்றை வழங்கி, தேசிய நல்லிணக்கத்திற்கான முயற்சியையும் முன்னெடுத்தது. அத்துடன், நல்லிணக்கம் பற்றி வலியுறுத்துகின்ற பரந்துபட்ட தேசிய கொள்கையொன்றுக்கானஅவசியம் இன்னமும் நிலவுவதுடன் ''2017 ஆண்டு உருவாக்கப்பட்ட நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை'' ஊடாக அக்குறிக்கோளை அடைந்துகொள்ள கருதுகின்றது. இத்தேசிய கொள்கையை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் அலுவலகமான ONUR (Office for National Unity and Reconcilliation), தேசிய கலந்துரையாடல் மற்றும் சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீளக்குடியமர்த்தல் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, நல்லிணக்க பொறிமுறைதொடர்பான ஒருங்கிணைப்பு செயலகம் என்பன செயற்படுத்துகின்றன.

மேலும், 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் வெளியிட்ட 56 ஆம் இழக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுகு (கு.அ.உ.ச.உ) சட்டம், 2014 - 2016 நல்லிணக்க ஊக்கு விப்பு கருத்திட்டத்திலிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட பாடங்களும் மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகு முறையொன்றைப் பயன்படுத்தி முரண் பாட்டைத் தணித்தலை ஊக்குவிக் கின்றது. ■

## அப்படி ஒரு... (01 ஆம் பக்கத் தொடர்)

அம்பாறையில் முஸ்லிம்களின் உணவகத்தில் ஆண்மையிழக்கச் செய்யும் மருந்து கலந்த உணவு வழங்கப்பட்டதாகக் கூறி சிலர் அந்த உணவகத்தை தாக்கியதுடன் முஸ்லிம்களுக்கு சொந்தமான ஏனைய சொத்துக்கள், பள்ளிவாசல் ஆகியவற்றையும் தாக்கினர். இதனைத் தொடர்ந்தே கண்டியிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனையடுத்து அவ்வாறு ஆண்மையிழக்கச் செய்யும் மருந்து இருக்கிறதா இல்லையா என்பது குறித்த விவாதமும், ஆய்வும் இங்கு இலங்கை மட்டத்தில் தொடங்கியிருந்தது.

அரசாங்கத்தின் பகுப்பாய்வுகள், அம்பாறை உணவகத்தில் அப்படியான மருந்து கலக்கப்படவில்லை என்று அறிவித்தன. அதேவேளை உள்ளூர் மட்டத்தில் ஆண்மையை நிரந்தரமாக இழக்கச் செய்யும் மருந்து எதுவும் கிடையாது என்று சுகாதார திணைக்களமும் அறிவித்தது. மருத்துவர்களான அமைச்சர்களும் கூறினார்கள். இப்போது உலக சுகாதார நிறுவனமும் இப்படியான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆண்மையை நிரந்தரமாக இழக்கச் செய்யும் வகையிலான மருந்தோ மாத்திரையோ இதுவரை கிடையாது என்றும் அப்படியான ஒன்று புழக்கத்தில் இல்லை என்றும் அது கூறியுள்ளது. ஆகவே உணவில் ஆண்மையை இழக்கச் செய்யும் மருந்து கலந்து கொடுக்கப்பட்டதாக கூறப்படுவது ஆதாரமற்ற தகவல் என்று இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர். ரஷியா பெண்டஸி ஊடகங்களிடம் தெரிவித்தார்.

பொய்யான குற்றச் சாட்டின் அடிப்படையிலேயே அம்பாறைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## குப்பை மேடாக மாறிவரும் கொழும்பு

கொழும்பு மாநகர சபைக்குள் பல பிரதேசங்களில் குப்பைகள் அகற்றப்படாமல் வீதியெங்கும் வீசப்பட்டு, துர்நாற்றம் வீசுவதினால் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடு வேண்டியுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கொழும்பு நகர பகுதியில் மட்டக்குளி, மோதர, தெமட்டகொட, ஜெம்பட்டா வீதி, மாளிகாவத்தை, மருதானை, வெள்ளவத்தை போன்ற பிரதேசங்களிலும் வத்தளை பகுதிகளிலும் பல நாட்களாக குப்பைக்கூளங்கள் அகற்றப்படாமல் காணப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில நேரங்களில் குப்பை கூளங்களை அகற்றவரும் பணியாளர்கள் உரிய நேரத்தில் வருவதில்லையென தெரிவிக்கும் பொதுமக்கள் அவ்வாறு வரும் வேளையில் பொது மக்களுக்குடன் முரண்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் மழை நீர் குப்பைக்கூளங்களில் காணப்படும் பொலித்தீன் பைகளில் நீர் தேங்கி நின்று மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் உருவாகியுள்ளதாகவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## 885 கோடி... (01 ஆம் பக்கத் தொடர்)

ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது என தமது அலுவலகத்தின் அதிகாரிகள் மதிப்பிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக மனிக்ஹின்ன பிரதேச செயலாளர் சமந்தி நாகதென்ன தெரிவித்திருக்கிறார். சிங்களக் கடைகளுக்கு எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்படாத வகையில் முஸ்லிம் கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தாக்கியழிக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டவதற்கு மேலுள்ள படம் போதுமானது.

## மதஸ்தலங்கள்... (01 ஆம் பக்கத் தொடர்)

இதற்கு மேலதிகமாக கிராம மட்டத்திலான கமிட்டிக் கூட்டங்களும், பிரதேச செயலாளர்கள் தலைமையிலான மாதாந்த கமிட்டிக் கூட்டங்களும் நடத்துவதற்கும், இதற்கென மதத் தலைவர்கள், பிரதேசத்தின் முக்கியஸ்தர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வமத அறநெறிப் பாடசாலைகள் உருவாக்குவதற்கும், இந்த அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்துவதற்கும், இந்தக் கல்விக்கென பல்கலைக் கழக அனுமதியின் போது புள்ளிகள் வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமூக... (01 ஆம் பக்கத் தொடர்)

ஒரு நாளில் 200 மில்லியன் ரூபாவை சம்பாதித்துள்ளது என ஜப்பானில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதேவேளை தற்பொழுது விதிக்கப்பட்டுள்ள சமூக ஊடகடங்கு இன்று (16) உடன் நிறைவு செய்யப்படுவதாக தொலைத்தொடர்பு, டிஜிட்டல் கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேஸ்புக் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைப் பிரஜைகளால் ஆரம்பிக்கப்படும் பேஸ்புக் கணக்குகள் பற்றி விஷேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும், பேஸ்புக்கில் தகவல்களை கண்காணிக்கப் போவதாகவும், இனவாதத்தைப் பரப்பும் கணக்குகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## பிரதமரின்... (01 ஆம் பக்கத் தொடர்)

இனவாதக் கும்பல்கள் தமது தாக்குதல்களை முடித்துக் கொண்ட பின்னர் கடந்த 10 ஆம் திகதி பிரதமர் சேதங்களைப் பார்வையிடுவதற்காக கண்டிக்குச் சென்றிருந்தார். தாக்குதலில் சேதமடைந்த உடைமைகளின் விபரங்களை அடுத்த ஒரு வாரத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்ட போது அதிகாரிகள் வெள்ளிக்கிழமை (16) க்கு முன்னர் தருவதாகக் கூறியுள்ளனர்.

இதன்படி உயிரிழந்தவர்களின் மூன்று குடும்பங்களுக்கும் கடந்த திங்கட்கிழமை (12) க்கு முன்னர் 100,000 ரூபா உடன் காசாகவும் வழங்குவதற்கு அவர் உத்தரவிட்டதோடு, உயிரிழந்தவர்களுக்கு வழங்கப்படும் உச்சபட்ச நஷ்ட,டு இது வென்பதால், மேலும் 400,000 ரூபாவை அமைச்சரவை அங்கீகாரத்துக்கு விட்ட பின்னர் கிடைக்கச் செய்வதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதன்படி உயிரிழந்த அப்துல் பாஸித் குடும்பத்தினருக்கான நிதி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. உயிரிழந்த அடுத்த இருவரில் லொறிச் சாரதியான குமாரசிங்கவுக்கும், தாக்குதலுக்கென வந்த போது பூஜாபிட்டியவில் குண்டு வெடித்து உயிரிழந்த நபருக்கும் நஷ்டஈடு வழங்குமாறு பிரமதர் உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை சேதமடைந்த வீடொன்றுக்கு 50,000 ரூபாவும், வர்த்தக நிலையமொன்றுக்கு 100,000 ரூபாவும் ஆரம்பத் தொகையாக வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுவரை வர்த்தக நிலையங்களும் வீடுகளுமாக 445 கட்டடங்களும், 24 பள்ளிவாசல்களும், 65 வாகனங்களும் சேதமடைந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் இவர்களுக்கான நஷ்டஈடு வழங்கும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என களத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


**SUBSCRIPTION FORM**

Name :..........................................

Address :..........................................

..........................................

Tel :..........................................

Amount : Rs. .................... Sing: ....................

Publication: மீள்பார்வை ☐ வைகறை ☐ பயணம் ☐ சர்வதேசப் பார்வை ☐

| வருட இதழ்கள் | 24 | 04 | 04 | 04 |
|---|---|---|---|---|
| உள்நாடு | 1100/- | 300/- | 300/- | 300/- |

உங்கள் பணத்தை காசோலை மூலமாகவோ அல்லது வங்கியில் வைப்புச் செய்வதன் மூலமாகவோ அனுப்பலாம்.

Meeparvai Publishers, Bank: People's Bank, A/C No.: 056100153078164,
Branch: Sri Sangaraja Mw, Colombo 10.
No 49, Sri Mahinnda Dhamma Mawatha Colombo 09 T.P 0777581661


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னே வரும் மணியோசை

• நேசன்

2014 ஜூனில் அளுத்கம அனர்த்தம். மூன்று வருடங்களின் பின்னர் 2017 நவம்பரில் கிந்தொட்ட அனர்த்தம். அதிலிருந்து மூன்று மாத இடைவெளியில் அம்பாறை அனர்த்தம். தொடர்ந்து ஒரு வாரத்தில் கண்டிய அனர்த்தம். முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியிருக்கின்ற பேரழிவை நோக்கிய அனர்த்தங்களின் கால இடைவெளி குறைந்து கொண்டே வருவது பேரழிவு அண்மித்திருப்பதைக் காட்டுகிறது.

முதலில் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பான வெறுப்பை விதைப்பதற்காக ஐந்து வருடங்கள் (2009-2014). பின்னர் முஸ்லிம் கிராமம் (அளுத்கம) மீதான தாக்குதல். ஆட்சி மாற்றத்தின் பின்னர் சட்டபூர்வமாக முஸ்லிம்களின் இருப்பைப் பறிப்பதற்கான ஏற்பாடுகள். தொடர்ந்து சிங்களப் பெரும்பான்மை மாவட்டத்துக்குள் வசிக்கின்ற கிந்தொட்ட முஸ்லிம் கிராமம் மீதான வன்முறைகள். அதனைத் தொடர்ந்து சிங்களப் பெரும்பான்மைக் கிராமமான அம்பாறையில் வசிக்கும் குறுந்தொகை முஸ்லிம் உடைமைகள் மீதான தாக்குதல். கடைசியாக சிங்களப் பெரும்பான்மை மாவட்டமான கண்டியில் சிங்களக் கிராமங்களுக்கிடையே இருக்கின்ற முஸ்லிம் கிராமங்கள் மீதான இன வன்முறைகள்.

இந்தத் தாக்குதல் தொடர்களைக் கவனமாக அவதானிக்கின்ற போது நுணுக்கமான ஒரு திட்டத்தின் அடிப்படையில் இவை செயற்படுவது புலனாகிறது. கண்டி வன்முறைகள் நடந்திருக்கின்ற விதத்தைப் பார்க்கும் போது இது மேலும் நிரூபணமாகிறது.



மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த தேர்தலின் போது, முஸ்லிம்கள் தொடர்பான வெறுப்புப் பேச்சுக்கள் உச்ச கட்டத்தை அடைந்திருந்தன. தனிச் சிங்கள வாக்குகளினால் மட்டும் அவரை வெல்ல வைக்கக் கூடிய அளவுக்கு தேர்தல் களம் வடிவமைக்கப்பட்ட பின்னர் இரண்டு வருடம் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் குறித்த தேர்தல், தனிச் சிங்கள வாக்குகளை ஓரிடத்தில் திரளச் செய்வதற்கு மேலும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியது.

இதனால் மஹிந்த அரசு தோற்கடிக்கப்பட்ட பின்னரும் கூட சிங்கள வாக்குகளை ஓரிடத்தில் திரளச் செய்வதற்கான முயற்சிகள் கைவிடப்படவில்லை. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் அதனை அளவிடுவதற்கான அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டது. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், மஹிந்தவின் தோல்விக்குப் பின்னரும் சிங்கள மக்களின் வாக்குகளைத் தனியாகப் பிரித்தெடுப்பதிலான அவர்களின் முயற்சி வெற்றி பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இம்முறைய தேர்தலில் 45 வீதமான வாக்குகள் மஹிந்த தரப்பிலான மொட்டு சின்னத்துக்குக் கிடைத்திருக்கிறது. இது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது விதைத்தவைகளின் அறுவடையாகவே கருத வேண்டியிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இல்லாத போதும் இத்தகைய விகிதாசாரத்தில் அவருக்கு சிங்கள வாக்குகளை ஒன்று திரட்ட முடிந்திருக்கிறது என்பதைத் தான் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

2020 ஆம் ஆண்டின் தேர்தலில் ராஜபக்ஷ கம்பனியில் இருந்து கோதபாய ராஜபக்ஷ வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சிறிசேன போட்டியிடுவாரா இல்லையா என்பது பேசுபொருளாக மாற்றப்பட்டிருந்தாலும், நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்பட்ட ஒரு ஜனாதிபதியாக அவர் தொடர்ந்தும் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

இந்த நிலையில் அடுத்த தேர்தலின் பின்னர் பிரதமரே நாட்டின் தலைவராக வருவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அந்தப் பதவி சுதந்திரக் கட்சியின் ஒருவருக்குத் தான் கிடைக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதியிடம் மாற்றுக் கருத்தில்லை. இந்த இடத்தை ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷவுக்குத் தான் வழங்குவார் என்பது நாட்டில் பரவலாக நிலவி வரும் நம்பிக்கையாகும்.

ஜேவிபி பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க பிபிசிக்கு வழங்கிய செவ்வியிலும் இதனைக் குறிப்பிட்டிருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் மஹிந்த ராஜபக்ஷவிடம் உள்ளன என்பதை ஜனாதிபதி நன்கு அறிவார். அதனால் தான் மீண்டும் அவர்களை இணைத்துக் கொண்டு அதிகாரத்தை தக்கவைக்க முயற்சித்து வருகின்றார் என்பது தெளிவாகத் தெரிவிகின்றது. ராஜபக்ஷ குடும்பத்தின் சிலரை, குறிப்பாக கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்களை தன்னுடன் இணைத்துக்கொண்டு செல்லவே அவர் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து ஆட்சியைக் கொண்டு செல்ல அவர் திட்டமிடுகின்றார் என்று அவர் அந்தப் பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

நாட்டின் அடுத்த தலைவர் தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வந்த ஹேஷ்யங்களை இதுவரை மறுத்து வந்த கோதபாய ராஜபக்ஷ தற்போது அது தொடர்பில் சார்பான கருத்துக்களை வழங்கி வருகிறார். சிலோன் டுடே பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியின்போது, ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டால் நான் ஒரு இலங்கையன், இல்லாவிட்டால் நான் ஒரு அமெரிக்கன் என்று தெரிவித்துள்ளார். நான் ஒரு அமெரிக்கன், நான் எப்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்று தனது அமெரிக்கப் பயணத்தை முடித்துவிட்டு வரும் வழியில் விமான நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்து வழங்கும் போது தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு மாற்றமாக இந்தக் கருத்து அமைந்திருக்கிறது. எப்படியும் கோதாபய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது உறுதியாகி வருகிறது.

அடுத்த தேர்தலில் அவர் வெல்வதற்குத் தேவையான வாக்குகளைப் பெற வேண்டுமென்றிருந்தால், போட்டியிடும் கட்சிகளுக்குப் பிரிந்து செல்லுகின்ற சிங்கள வாக்குகளை ஒன்று திரட்ட வேண்டிய தேவை இருக்கிறது. கூர்மையடைந்துள்ள இனவாதச் சூழலில் ஒரே நேரத்தில் முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தி முஸ்லிம் வாக்குகளையும், சிங்களவர்களைத் திருப்திப்படுத்தி சிங்கள வாக்குகளையும் பெறுவதென்பது சாத்தியமில்லாதது.

இம்முறை தேர்தலில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 45 வீத வாக்குகளுடன் இன்னும் 20 வீத சிங்கள வாக்குகளை யாவது அடுத்த தேர்தலில் பெற்றால் தான் தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான ஒரு சூழலே அடுத்த தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் கோதபாயவுக்கு இருக்கிறது.

(பக்.14)

# அம்பாறையிலும் கண்டியிலும் முஸ்லிம்கள் மீது தாக்குதல்

• அ. மார்க்ஸ்

**ஒன்று:**

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து விட்டது எனச் சொலப்பட்டாலும் தமிழர்களின் மீதான அடிப்படை மனித உரிமைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாததும், முஸ்லிம்களின் மீதான தாக்குதல்களும் தொடர்கிறது.

நான் சென்ற பெரவரி 26-2018) அன்று இலங்கையிலிருந்து புறப்பட்டேன். அதே நாள் அம்பாறையில் முஸ்லிம் உணவு விடுதி தாக்கப்பட்டதைப் பின்னர் அறிந்தேன். முஸ்லிம் உணவு விடுதி ஒன்றுக்குள் நுழைந்த சிங்கள இன வெறிக் காடையர்கள், அந்த உணவகம், உணவில் கருத்தடை மருந்துகளைக் கலந்து கொடுப்பதாகக் குற்றம் சாட்டித் தாக்குதல் நடத்தியுள்ளது.

அப்படியெல்லாம் உணவில் எதையும் கலந்து கருத்தடையை ஏற்படுத்த முடியாது என்பது ஒரு புறம். இன்னொரு பக்கம் அதை உடனடியாக மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி விளம்பரம் செய்ய வேண்டிய மைத்ரிபால அரசு அதைச் செய்யவில்லை.

இப்படியான இஸ்லாமிய வெறுப்பைச் செய்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என அறிவிக்கவும் இல்லை. எனினும் நீதிமன்றத்தில் இலங்கை அரசின் காவல்துறை,

'இச்சம்பவம் இனவாதம் மற்றும் இனங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட வன்செயல். எனவே இது சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் என்பதன் கீழ் வருவன. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்று கூறியபோது சற்று ஆறுதல் ஏற்பட்டது. ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாறாக, 'இந்த சம்பவங்கள் தனிப்பட்ட தகராறினால் ஆரம்பமானவை. அதனால் முன்னர் கூறிய சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுப்பதற்கு காரணிகள் எவையும் இல்லை. நாட்டின் பொதுவான நீதியின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என மீண்டும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆக மைத்ரிபால அரசின் நோக்கம் தெரிந்துவிட்டது. இன வெறியர்கள் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்க அது தயாராக இல்லை என்பதுதான்.

அதன் விளைவு அடுத்த வாரம் கண்டியில் முஸ்லிம்கள் மீதான வன்முறை. இப்போது முஸ்லிம்களின் கடைகள் தாக்கப்படுதல், வணக்கத் தலங்கள் சேதப்படுத்தப்படுதல் என்பதைத் தாண்டி ஒரு கொலையும் நடந்துள்ளது. அரசு ஊரடங்குச் சட்டம், நெருக்கடி நிலை முதலியவற்றை அறிவித்த போதும் இனி வன்முறை தொடராது என்கிற உத்தரவாதமில்லை.

போர் முடிவுக்குப் பின் முஸ்லிம்கள் மீதான வெறுப்புப் பிரச்சாரங்கள் தொடர்கின்றன. Islamophobia இன் பல்வேறு வடிவங்களில் ஒன்றுதான் முஸ்லிம் கடைகளில் உணவில் கருத்தடை மாத்திரை கலக்கிறார்கள் எனும் பொய்ப் பிரச்சாரம். ஆனால் முந்தைய ராஜபக்ஷ அரசோ, ஒரு மாற்று அரசாகத் தன்னைக் காட்டிக் கொண்ட மைத்ரிபால அரசோ இத்தகைய இனவெறுப்புப் பிரச்சாரத்திற்கு எதிராக என்ன செய்தன? பொது பல சேனா முதலான இனவாத அமைப்புகளுக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

இல்லை. இல்லை. இல்லை.

சரி அரசுகள் கிடக்கட்டும். இன்றைய வன்முறைகள் தொடர்பாக இலங்கைப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் படித்துப் பார்த்தேன். எல்லாவற்றிலும் இப்போதைய பிரச்சினையில் முஸ்லிம்கள் victims மட்டும்தான், அவர்கள் வன்முறைகளுக்குக் காரணமில்லை என்பது ஏற்கப்பட்டுள்ளது. நல்லது. ஆனால் இதற்குக் காரணமான 'பொதுபல சேனா' முதலான அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாராவது எழுதட்டுமே... என் கண்ணில் பட்டவரை அப்படி யாரும் எழுதவில்லை. மாறாக தண்டனைகளை அதிகரிக்க வேண்டும் என்பது போன்ற ஆலோசனைகள்தான் வழங்கப்படுகின்றன.

சிங்கள இனவாதத்தைப் பொதுச் சமூகமும், அதை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகங்கள், மனித உரிமை அமைப்புகள் முதலானவும் வெளிப்படையாகக் கண்டிக்காதவரை இந்த இன வன்முறைகள் தொடரத்தான் போகின்றன.

**இரண்டு:** Top of Form

இலங்கையில் 1971 முதல் 2011 வரை நெருக்கடி நிலை அமுலில் இருந்தது. ஏழாண்டுகளுக்குப் பின் இப்[illegible] மறுபடி கண்டியில் முஸ்லிம்களுக்கு



எதிரான தாக்குதல்களை ஒட்டி அப் பகுதியில் நெருக்கடி நிலை, சமூக ஊடகங்கள் மூலம் இனவெறுப்பும் வன்முறையும் தூண்டப்படுகிறது என பத்து நாட்களுக்கு அவை முடக்கப்படுதல் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 71 பேர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஒரு செய்தி பார்த்தேன். கண்டியில் மட்டும் 31 பேர்கள். மஹாசேன பலகாய எனும் தீவிரவாத அமைப்பின் தலைவர் அமித் ஜீவன் வீரசிங்கவும் கைதானவர்களில் அடக்கம்.

பொதுபலசேனா, சிங்கள ராவய, மஹாசேன பலகாய, சிங்ஹலே முதலான சிங்கள இனவாத அமைப்புகள் 2012 க்குப் பின் முஸ்லிம்களைக் குறி வைத்து இயங்குகின்றன. 2012 இல்தான் ராஜபக்ஷ குடும்ப ஆதரவுடன் பொதுபல சேனா உருவாக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளை வீழ்த்திய வெற்றிப் பெருமிதம், அதனூடாக இனி பெரும்பான்மையினரின் அதிகாரமே செயல்பட வேண்டும் எனும் இனவாதம் ஆகியன இப்போது ஒரு புதிய 'எதிரி' யைத் தேடின. போர் சிங்கள இன [illegible]

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்க வெறுப்பு அரசியலின் துணை சிங்கள இனவாதத்துக்குத் தேவைப்பட்டது. இப்போது அவர்கள் இலக்காக நிறுத்திய எதிரி, மக்கள் தொகையில் 9 சத அளவில் உள்ள இலங்கை முஸ்லிம்கள்.

முதல் நடவடிக்கையாக தம்புள்ள எனும் இடத்தில் கட்டப்பட்ட பள்ளி வாசல் இடிக்கப்பட்டது. பௌத்த ஆலயம் ஒன்றின் இடம் ஆக்கிரமிக்கப்படுவதாகக் குற்றம்சாட்டி இதைச் செய்தனர். 2013 இல் ஒரு முஸ்லிம் முதலாளியின் துணிக்கடைக் குடோன் தாக்கி அழிக்கப்பட்டது. 2014 இல் மேற்குக் கடற்கரை நகரமான களுத்துறையில் மூண்ட கலவரத்தில் நால்வர் கொல்லப்பட்டனர். 80 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பொதுபல சேனா 'ஹலால் சான்றிதழ்' அளிப்பதை எதிர்த்தும், பர்தா அணிவதை எதிர்த்தும் தொடர்ந்து வெறுப்பு அரசியலைச் செய்துகொண்டே இருந்தது. 2013 முதல் 2015 வரைக்கும் இவ்வாறு சிறிதும் பெரிதுமாக சுமார் 538 தாக்குதல்கள் தங்கள் மீது நடந்தன என ஒரு முஸ்லிம் அமைப்பு தொகுத்துள்ளதாக நிருபமா சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

போரில் சலித்துப் போயிருந்த மக்களின் ஆதரவுடந்தான் ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு மைத்ரிபால கூட்டணி அரசு உருவானது. ஆனால் அது எதிர்பார்த்தது போல இன ஒற்றுமைக்குச் சாதகமாக எதிர்பார்க்கப்பட்ட நடவடிகைகள் எதையும் நிறைவேற்றாத சூழலில் இன்று அந்த அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டு மீண்டும் ராஜபக்ஷே அதிகாரத்திற்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய கலவரத் தலைவர்கள் ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள் எனச் சொல்லப்படுகிறது.

இதில் இன்னொரு ஆபத்தான அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். போருக்குப் பின் இலங்கையில் உருவாகியுள்ள இந்த பௌத்த தீவிர இனவாதம் இலங்கைக்குள் முடங்கிக் கொள்ளாமல் அது இலங்கையைத் தாண்டியும் தன் உறவுகளை வளர்த்துக் கொள்ள முனைகிறது. இன்னொரு தேரவாத பௌத்த நாடாகிய மியான்மாரில் இன்று உருவாகியுள்ள பௌத்த தீவிரவாதத்தை முன்னின்று செயல்படுத்தும் பிக்கு அஷின் விராத்துவின் 969 இயக்கத்துடன் அது நெருக்கமாக இருக்கிறது. மியான்மாரிலிருந்து அஞ்சி ஓடிவந்த சிலர் இலங்கைக் கடலில் பிடிபட்டு ஐ.நா.வின் பாதுகாப்பில் கொழும்பில் உள்ள மவுன்ட் லாவினாவில் உள்ள ஒரு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். அந்த முகாம் தாக்கப்பட்டது. 2014 செப்டம்பரில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பொதுபலசேனா நடத்திய மாநாடு ஒன்றுக்கு சிறப்பு விருந்தினராக அஷின் விராத்து அழைக்கப்பட்டார். பௌத்தர்களைக் காக்கத் தான் பொதுபல சேனாவுடன் கைகோர்த்துக் கொள்ளத் தயார் என விராத்து அந்த நிகழ்ச்சியில் முழங்கினார்.

இந்த மாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து ஆர்.எஸ்.எஸ் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்து பின் மறுக்கப்பட்டது நினைவிருக்கலாம். முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு கூட்டணியாக இப்படி ஒரு இணைவு ஏற்படும் ஆபத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## புலனாய்வுத் துறைக்கான சவால்

கண்டிய அனர்த்தம் நாட்டின் மற்றுமொரு கறைபடிந்த அத்தியாயமாக பதிவு செய்யப்பட்டு விட்டது. இலங்கையின் பேரினவாதம் நாட்டிலுள்ள இரண்டு சிறுபான்மைகள் மீதும் தனது அத்துமீறலை வெளிக்காட்டி விட்டது. சுற்றுலா நகரமான கண்டியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்கள் சர்வதேச அளவில் நாட்டுக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது என்பதில் ஐயமில்லை.

கண்டிய அனர்த்தங்கள் லொறிச் சாரதியின் மரணத்துடன் சம்பந்தப்பட்ட உடனடி நிகழ்வல்ல. இது ஒரு திட்டமிடப்பட்ட இன வன்முறை என்பது தாக்குதல்களின் வடிவத்தைப் பார்க்கும் யாருக்கும் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த வகையில் இவ்வளவு கச்சிதமாகத் திட்டமிடப்பட்ட ஒரு நெடுந் தாக்குதலை கீர்த்தி மிகு இலங்கையின் புலனாய்வுத் துறை முன்கூட்டியே அறிந்து கொள்ளவில்லை என்பதை நம்புவதற்கு மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

தாக்குதல்களின் பின்னர் பல தடவைகள் ஊரடங்கு உத்தரங்கு பிறப்பிக்கப்பட்ட பொழுதெல்லாம் கூட தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஒரு படையாகத் திரண்டு வந்து தாக்குதல் நடத்திய கும்பலை ஒரு ட்ரோன் கமெரா மூலம் கண்காணித்து, ஊர்வலமாக வந்ததையும் தாக்குதல் நடத்தியதையும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நமது புலனாய்வுத் துறை பலவீனமானது என்பதை மக்களால் நம்ப முடியவில்லை.

தாக்குதல் நடத்துவதற்கான அழைப்பு, ஒழுங்குபடுத்தல்கள் எல்லாமே சமூக ஊடகங்கள் மூலமாகவே நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு அசாதாரண சூழலில் சமூக ஊடகங்களைக் கண்காணித்து, தாக்குதல் ஒன்றுக்கான திட்டமிடல் நடைபெறுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடிய தொழில்நுட்பம் இலங்கையில் இருக்கவில்லை என்பதும் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

குறித்த சிங்கள இளைஞனின் மரணச் சடங்கில், அந்த இளைஞனுடன் எந்தவிதத் தொடர்பும் இல்லாத, வெறுப்புப் பேச்சு மற்றும் நடவடிக்கைகளுக்குப் பேர் போன ஞானசார தேரரும் மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதியும் வந்து விட்டுப் போகும் போதே, மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படலாமோ என்ற முன்னெச்சரிக்கை உணர்வு பிரதேசத்திலுள்ள சாதாரண முஸ்லிம் பொதுமகனிடமும் எழுந்திருக்கிறது. அளுத்கம தாக்குதல் தொடர்பில் நன்கறிந்து வைத்திருந்த புலனாய்வுப் பிரிவுக்கு இந்தச் சந்தேகம் வரவில்லை என்றால், புலனாய்வுப் பிரிவினரின் தரத்தில் மக்கள் நம்பிக்கை வைப்பது தப்பென்றாகிறது.

இதேவேளை, யுத்த காலத்தில் உளவுப் பிரிவு முஸ்லிம் அதிகாரிகளினாலேயே இயக்கப்பட்டது எனவும், முஸ்லிம் சமூகம் எப்போதுமே எம்முடன் இருந்து எம்மைப் பாதுகாத்துள்ளனர் எனவும் இராணுவத் தளபதி விஜே குணவர்தன சிலாகித்துப் பேசியுள்ளார். தமது உயிரையும் துச்சமாக மதித்தே முஸ்லிம் அதிகாரிகள் யுத்த களத்துக்குச் சென்று தகவல் திரட்டினர். வடக்கில் வாழ்ந்த முழு முஸ்லிம் சமூகத்தினதும் இருப்பை முஸ்லிம்கள் இதற்கு விலையாகக் கொடுத்தனர். இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்தின் மீதான சிங்கள இனவாதிகளின் தாக்குதல்களை முன் கூட்டியே கண்டு பிடித்து, நாட்டைப் பாதுகாத்த முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதற்கு இலங்கையின் புலனாய்வுத் துறை முன்வராதது ஏன் என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. உதட்டளவிலான பாராட்டுகளை விடுத்து உண்மையான நன்றியுணர்வை வெளிப்படுத்த வேண்டிய தருணத்தில் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி விட்ட கதையாகவே இது அமைகிறது.

எனவே, காய்தல் உவத்தல் இன்றி இந்தப் பாரிய சதிக்குப் பொறுப்பான சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தி, புலனாய்வுப் பிரிவு தனது தரத்தையும் முஸ்லிம்கள் மீதான நன்றியுணர்வையும் வெளிப்படுத்த வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# போலிக் கருத்துக்களுக்கு ஏமாந்து அழிவுக்கு வழியமைத்தல்

• திஸரணீ குணசேகர

இனவாத யுத்தத்தால் 3 தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட இந்த நாட்டை மீண்டும் மதவாத யுத்தத்தில் தள்ளும் முயற்சிகளை கடந்த வாரங்களில் அவதானிக்க முடிந்தது. முஸ்லிம் நபரொருவருக்குச் சொந்தமான ஹோட்டலில் கருத்தடை மாத்திரை கலந்த உணவு வழங்கப்பட்டதாகக் கூறி அந்த ஹோட்டலுக்கும் அருகிலிருந்த பள்ளிவாசலுக்கும் மற்றும் சில இடங்களுக்கும் தாக்குதல் நடாத்தப்பட்டன.

சிங்கள, பௌத்தர்களை மலடாக்குவதற்கு முஸ்லிம்கள் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக 2012-2013 காலப் பகுதியில் பொதுபல சேனாவைச் சேர்ந்த தேரர் ஒருவர் குற்றம் சுமத்தியிருந்தார். முஸ்லிம் கடை உரிமையாளர்கள் மலட்டுத் தன்மையை உண்டாக்கும் உள்ளாடைகளை விற்பனை செய்வதாகவும் சிங்கள யுவதிகளை இஸ்லாமிய மார்க்கத்தை தழுவச் செய்து அந்தப்புரங்களில் சிறைப்படுத்துவதாகவும் பொதுபலசேனா உள்ளிட்ட கடும்போக்குவாதிகள் குற்றம் சாட்டினார்கள்.

இலங்கையின் பெரும்பான்மையான வைத்தியர்களின் மௌன நிலைப்பாட்டின் காரணமாக மலட்டு மாத்திரை என்னும் போலி நம்பிக்கையை சமூகத்தில் பரப்பி நாட்டை மீண்டும் யுத்தத்தில் தள்ள கங்கணம் கட்டும் தீய சக்திகளுக்கு இந்த விடயம் சாதகமாய் போயுள்ளது. இது நாட்டின் எதிர்காலத்திற்கு பாதிப்பாக அமைவதுடன், மருத்துவ துறைக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் விடயமாகவும் அமைந்துள்ளது.

மறுபுறத்தில் அரசாங்கத்தின் இயலாமையும் இந்தப் போலி நம்பிக்கை பரவலடைய உந்துசக்தியாய் அமைந்துள்ளது. மலட்டு மாத்திரை என்றொரு விடயம் இலங்கையிலோ உலகத்திலோ இல்லை என்பதை நாட்டிற்கு தெளிவுபடுத்த அரசாங்கம் சார்பில் ஒருவரும் முன்வரவில்லை.

மலட்டு மாத்திரை சம்பவம் இடம்பெற்றவுடன் ஊடகங்களை கூட்டி மலட்டு மாத்திரை என்றொன்று இல்லை என்பதை சுகாதார அமைச்சு அல்லது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை.

சிறிசேன விக்ரமசிங்க அரசாங்கத்தில்



பல்வேறு தவறுகள் காணப்பட்ட போதிலும் அது இன, மதவாத அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. என்றாலும் அரசாங்கம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இன, மதவாதத்திற்கு எதிராக தெளிவான நிலைப்பாடுகளை எடுக்கத் தவறியுள்ளது. கலகொட அத்தே ஞானசார தேரரின் சட்ட விரோத செயற்பாடுகளுக்கு இடமளித்து விட்டு அரசாங்கம் கண்டும் காணாமலுமுள்ளது. 2013 இல் அளுத்கம பகுதியில் தீமூட்டியவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

பொதுபல சேனாவுக்கும் ராஜபக்ஷ அரசாங்கத்திற்குமிடையில் நெருங்கிய உறவுகள் காணப்பட்டமையினால் இந்தக் கட்டுக்கதைகளின் யதார்த்தத்தை அம்பலப்படுத்துவதற்கு பலர் அச்சப்பட்டார்கள். ஆனால் இன்று அவ்வாறானதொரு சூழல் இல்லை. இதனால் மலட்டு வில்லை (கருத்தடை மாத்திரை) என்ற ஒன்று உலகில் எங்காவது உள்ளதா? இல்லையா? என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக இந்த விடயத்தில் வைத்திய நிபுணர்களுக்கு மிக முக்கிய பொறுப்புள்ளது.

மலட்டு மாத்திரை தொடர்பில் இணையத்தளத்தை பரீட்சித்துப் பார்க்கும் பொழுது அவ்வாறானதொரு கண்டுபிடிப்பு இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்ற விடயம் ஊர்ஜிதமானது. ஆண்கள் அல்லது பெண்களை அல்லது பிறிதொரு விலங்கினத்தை உடனடியாக மலட்டுத் தன்மையடையச் செய்யக்கூடிய மாத்திரையோ குடிபான வகையோ இதுவரையில் உற்பத்திசெய்யப்படவில்லை. மனிதன் உள்ளிட்ட விலங்குகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற சத்திர சிகிச்சைகளினூடாகவே அந்த விடயத்தை செய்ய முடியும்.

மலட்டு மாத்திரை, மலடாக்கும் உள்ளாடைகள் பற்றிய மூடநம்பிக்கைகள் தொடர்பில் நாட்டிற்கு உண்மையைச் சொல்லும் பொறுப்பு வைத்தியர்களுக்கு உள்ளது. எனினும் மலட்டு மாத்திரை என்றொரு விடயம் இல்லை என்பதை தெரிவிப்பதற்கு ஒரு சில வைத்தியர்களே முன்வந்துள்ளனர். அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தில் (GMOA) உப தலைவர் ஒருவர் இருந்தும் கூட அந்தச் சங்கத்தினாலோ மருத்துவ சபையினாலோ உத்தியோகபூர்வ கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அம்பாறை பிரதேசத்தில் மதக் கலவரம் இடம்பெற்ற போதிலும் கலவரக்காரர்கள் மருத்துவ விஞ்ஞானத்துடன் தொடர்பான விடயமொன்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தார்கள். இதனால் மலட்டு மாத்திரையின் உண்மைத் தன்மை குறித்து நாட்டிற்கு விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பு மருத்துவ துறைக்கு உள்ளது. இந்த விடயம் இடம்பெறாத வரை மருத்துவத் [illegible] மூடநம்பிக்கை நாட்டில் பரவுவதை தடுக்க முடியாமல் போகும்.

### மலட்டு மாத்திரையும் போலிச் செய்திப் பரவலும்

1999 இல் அமெரிக்காவில் உருவான அநாமதேய ஈமெய்ல் செய்தியொன்றின் மூலமே மலட்டு மாத்திரை விடயம் ஆரம்பித்தது. பெண்களை மானபங்கப்படுத்தி துஷ்பிரயோகம் செய்வதற்கு ஒரு சில துஷ்பிரயோகிகள் progesterex என்னும் மாத்திரையை பயன்படுத்துவதாகவும் இதன் மூலம் பெண்கள் நீண்டகால மலட்டுத் தன்மைக்கு உள்ளாவதாகவும் அந்த ஈமெயில் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. குதிரைகளை மலடாக்குவதற்கு மிருக வைத்தியர்கள் இந்த progesterex மாத்திரையை பயன்படுத்துவதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மருத்துவ மற்றும் மிருக வைத்திய அமைப்புக்கள் இந்தக் கதை போலி என்பதை அம்பலப்படுத்தியிருந்தன. அம்பாறை சம்பவத்திற்கு அடிப்படையாக அமைந்த மலட்டு மாத்திரையின் வரலாறே இது.

மலட்டு மாத்திரை என்பது நிஜ உலகில் காணக்கூடியதொன்றல்ல. அது அறிவியல் ரீதியான உண்மையுமல்ல. இதுவொரு உண்மையான செய்தியுமல்ல. இது Fake news வகையைச் சார்ந்ததாகும். செய்தி எனும் பெயரில் போலியை சமூகமயப்படுத்துவதே போலிச் செய்தியாகும். 2016 ஆம் ஆண்டு டிசம்பரில் உருப்பெற்ற pizzagate சம்பவம் இதற்கு சிறந்த உதாரணம்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் அமைந்துள்ள Comet ping pong என்னும் பீட்சா உணவகத்திற்குள் ஹிலரி கிளின்டனுக்குச் சொந்தமான சிறுவர் துஷ்பிரயோக நிலையமொன்று இருப்பதாக சமூக வலைதளங்களில் ஒரு செய்தி பிரசாரம் செய்யப்பட்டது. இந்தச் செய்தியை நம்பிய 'எடியா வெல்ச்' என்னும் 28 வயதையுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை வட கரோலினாவிலிருந்து 350 கிலோமீற்றர் தூரத்தை கடந்து வொசிங்டன் வந்து Comet ping pong பீட்சா உணவகத்திற்கு துப்பாக்கிச் சூடு நடாத்தினார். ஆனால் இந்த உணவகத்தில் சிறுவர் துஷ்பிரயோக நிலையமொன்று காணப்படவில்லையென பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்தது. போலிச் செய்தி காரணமாக வன்முறை உருப்பெறும் விதத்தை இந்த pizzagate சம்பவத்தினூடாக விளங்க முடிகிறது.

மலட்டு மாத்திரை / மலட்டு ஆடை போன்ற மூட நம்பிக்கைகளைப் போன்று இந்நாட்டில் சிங்கள இனமும் பௌத்த மதமும் அழிந்து செல்வதாக மற்றுமொரு போலிச் செய்தி சமூகமயப்படுத்தப்பட்டிருப்பதை காண முடிகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக இணையதளமொன்றில் கடந்த மார்ச் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த செய்தியொன்றை குறிப்பிட முடியும்.

'சிங்கள பௌத்தர்கள் 67 வீதமாகக் குறைவு, சிங்களவர்கள் பயந்து தோல்வியுற்ற சமூகமாக மாற்றம்' என்ற தலைப்பிலான செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. 'சில தசாப்தங்களுக்கு முன்பு 72 சத வீதமாக காணப்பட்ட இந்நாட்டின் சிங்கள பௌத்த சனத்தொகை தற்பொழுது 67 சத வீதமாக குறைந்திருப்பதாக தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணாயக்கார தெரிவித்துள்ளார். வெளிநாட்டு சக்திகள் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுத்தியுள்ள மிகப் பெரியளவிலான திட்டத்தின் காரணமாக இந்த நிலை உருவாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.'

நாட்டின் சனத்தொகை தொடர்பில் உண்மையான தகவல்களை குடித்தொகை தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 1881ஆம் ஆண்டிலேயே இலங்கையில் முதலில் சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இறுதியாக 2012 இல் இடம்பெற்றது. பொதுவாக 10 வருடங்களுக்கு ஒரு முறையே சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறுவதால் அடுத்த கணிப்பீடு 2022 இல் இடம்பெறும். இதனால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட 2012ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பை எமக்கு ஆதாரமாக கொள்ள முடியும்.

2012ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின் படி இந்நாட்டின் சிங்களவர்களது மொத்த சனத்தொகை 74.9 வீதமாகும். இந்தத் தொகை 1881ஆம் சனத்தொகை கணக்கெடுப்பு முதல் 2012 வரையில் மேற்கொள்ளப்பட்ட சகல கணக்கெடுப்பிலும் பதிவான அதிகூடிய தொகையாகும். (பார்க்க அட்டவணை 01)

| சனத்தொகை வருடம் | சனத்தொகை (சிங்களம்) | சனத்தொகை (பௌத்தம்) |
|---|---|---|
| 1881 | 66.91 | 61.53 |
| 1891 | 67.86 | 62.4 |
| 1901 | 65.36 | 60.06 |
| 1011 | 66.13 | 60.25 |
| 1921 | 67.05 | 61.87 |
| 1931 | 65.45 | 61.55 |
| 1946 | 69.41 | 64.51 |
| 1953 | 69.36 | 64.33 |
| 1963 | 71.00 | 66.18 |
| 1971 | 71.96 | 67.27 |
| 1981 | 73.95 | 69.3 |
| 2012 | 74.9 | 70.71 |

இந்தத் தரவுகளின் மூலம் சில விடயங்கள் தெளிவாகின்றன. ஒன்று 1881ஆம் ஆண்டு முதல் 2012 வரையில் இந்நாட்டின் சிங்கள சனத்தொகை 1.89 வீதத்தினாலும் பௌத்தர்களின் சனத்தொகை 8.57 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. இரண்டாவது, 1881 முதல் 1946 வரையில் சிங்கள மற்றும் பௌத்த சனத்தொகை சிறியளவில் குறைந்து கூடியிருந்தாலும் 1953 முதல் 2012 வரையில் அந்தத் தொகை தொடர்ந்தேர்ச்சியான அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன வெறுப்புக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவது யார்?

## அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுமா



றவூப் ஸெய்ன்



பெப்ரவரி 25 இரவு அம்பாறை நகரில் தொடங்கிய இனவாத ஊழித் தாண்டவம் கண்டி திகன பிரதேசத்திற்குத் தாவி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியதால் முஸ்லிம் சமூகம் சில நாட்கள் அச்சத்தில் உறைந்து போனது. இனவாதிகளின் தாக்குதல் அம்பாறை, திகன, தெல்தெனிய, தென்னக்கும்புர, மெனிக்ஹின்ன, எலுகொட, பெனிதெனிய, ஹேன்தெனிய, கடுகஸ்தொட, அக்குரணை, அம்பதென்ன, வத்தேகம, மடவளை, குறுந்துகொல்ல... என கண்டி மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கும் குளியாப்பிடிய, மெல்சிறிபுர, தம்பதெனிய ஹாலியெல, ஆனமடுவ போன்ற குருநாகல் மாவட்ட பிரதேசங்களுக்கும் தர்காநகர், பூகொட போன்றவற்றுக்கும் பரவியது.

திட்டமிட்ட வகையில் 465 அழிவுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. கடைகள், வீடுகள், பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள், அஹதிய்யா கட்டடங்கள் என்று வன்முறையாளர்களால் முஸ்லிம்களின் சொத்துக்கள் துவம்சம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 87 முழுமையாகவும் 196 பகுதியாகவும், 182 சிறியளவிலும் சேதமாக்கப்பட்டுள்ளன என அறிக்கைகள் கூறுகின்றன.

அரசியல்வாதிகளும் அரசாங்கத்திலுள்ளோரும் பெரும்பான்மை மதத் தலைவர்களும் முன்வைக்கும் பரஸ்பரக் குற்றச்சாட்டுகள், குற்றவாளிகள் மீதான கவனஈர்ப்புக்களை நோக்கும்போது நடந்து முடிந்து, புகைந்துகொண்டிருக்கும் பேரினவாதிகளின் வெறுப்புக் குற்றங்கள் (Hate Crime) குறித்த சில சந்தேகத்திற்குரிய கேள்விகள் பலமாக எழுகின்றன.

### சந்தேகத்திற்குரிய கேள்விகள்

குற்றவாளிகளை இதற்குப் பின்னரே கண்டு பிடிக்கப் போவதாக அரசாங்கம் கூறுகின்றது. அவ்வாறாயின்,

1. இலங்கையில் கடந்த 6 ஆண்டுகளாக இனவெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்களையும் தர்காநகர், கிந்தோட்டை கலவரத்திற்குக் காரணமானவர்களையும் அரசாங்கம் இதுவரை கண்டுபிடிக்கவில்லையா?

2. 30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இனக்கலவரம் ஒன்று நடைபெறப் போகின்றது என்ற தகவல் முற்கூட்டியே கிடைக்கவில்லையா?

3. பல அமைச்சர்களின் கருத்துப்படி அவ்வாறு கிடைத்தும் அரசாங்கம் முற்கூட்டியே தடுக்கும் நடவடிக்கையிலிருந்து விலகிச் சென்றதேன்?

4. பெரும்பாலான அசம்பாவிதங்கள் பொலிஸார் மற்றும் இராணுவ பிரசன்னத்திற்கு முன்பாகவே நடந்தேறியுள்ளன. அவற்றைத் தடுப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தொடக்கத்தில் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

5. அம்பாறைச் சம்பவத்தில் குற்றவாளிகளுக்கு எதிராக பதிவுசெய்யப்பட்ட குற்றச்சாட்டை வாபஸ் வாங்கிக் கொண்டு வேறொரு சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்து குற்றவாளிகளை பொலிஸார் விடுவித்ததேன்?

6. பொலிஸாரும் இராணுவமும் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளனர். முப்படைகளின் தலைவராக ஜனாதிபதியும் சட்டம் ஒழுங்கு அமைச்சராக பிரதரும் இருந்த நிலையிலேயே அனைத்து வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இப்படி ஒன்றன் பின் ஒன்றாக சந்தேகத்திற்குரிய கேள்விகள் எழுந்தவண்ணமுள்ளன. வெளியாட்களே இவற்றில் ஈடுபடுகிறார்கள் என பிரதமர் ரணிலும், இதுவொரு அரசியல் சூழ்ச்சியென கபீர் ஹாஷிம் மற்றும் முஜீபர் ரஹ்மான் போன்றவர்களும் கூறுகின்றனர். எதிரணியிலுள்ள இரு அரசியல்வாதிகளே இதற்குக் காரணம் என லக்ஷ்மன் கிரிஎல்லவும், கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர் ஒருவரே இதன் பின்னணியில் உள்ளார் என வாசுதேவ நாணயக்காரவும் கூறியுள்ளனர். இதே கருத்தையே பாராளுமன்றத்தில் உரையாற்றிய விமல் வீரவன்சவும் தெரிவித்துள்ளார்.

ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் ஸ்திரமற்ற அரசியல் சூழலை உருவாக்கவுமே இந்த சதித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என றவூப் ஹக்கீம் மற்றும் பைஸர் முஸ்தபா போன்ற நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் கூறிவருகின்றனர்.

உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியதனாலேயே நிலைமை மோசமடைந்தது என ரணில் தனது சுயதோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆயினும், அரசாங்கம் உண்மைக் குற்றவாளிகளை நாட்டுக்கு வெளிப்படுத்துவதும் அவர்களுக்கு தகுந்த தண்டனையை வழங்குவதும் அவசியமாகும்.

இன வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்ற பலர் இவ் எரியும் தருணத்தில் கொழும்பில் இருந்துகொண்டு ஊடகங்களுக்கு வழங்கும் அறிக்கைகளைப் பார்க்கும்போது விபச்சாரிகள் கற்புச் சட்டம் பேசுவதே நினைவுக்கு வருகின்றது.

### சம்பவங்கள் உணர்த்தும் உண்மைகள்

எவ்வாறாயினும், முஸ்லிம்களுக்கு எதிராக சில நாட்களாக கட்டவிழ்க்கப்பட்ட காடைத் தனம் இலங்கை அரசியல் சூழலில் சில முக்கியமான உண்மைகளை உணர்த்தியுள்ளன. இனவாதம் சிங்கள மக்களிடையே நன்கு வேரூன்றியுள்ளது. நடுநிலையாளர்களை விட இனவாதிகள் மிகப் பலமாக உள்ளனர் எனும் கசப்பான செய்தியை இது உணர்த்தியுள்ளது. அதேபோன்று நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் வெறுப்புப் பிரச்சாரகர்களும் இனவெறுப்புக் குற்றவாளிகளும் ஒரு தெளிவான வலைப் பின்னலுடன் எந்நேரத்திலும் செயல்படலாம் என்பதையும் இச்சம்பவங்கள் உணர்த்தியுள்ளன.

இன அழிப்பும் முஸ்லிம்களின் பொருளாதாரம் மீதான தாக்குதல்களும் எதிர்காலத்திலும் தொடரலாம் என்பதற்கான வாய்ப்புள்ளதை இவ்வன்முறைகள் உணர்த்தியுள்ளன. வன்முறையாளர்கள் உண்மைக்குப் புறம்பான பொய்த் தந்திரங்களையும் கீழ்த்தரமான வழிமுறைகளையும் கையாள சிறிதும் தயங்கமாட்டார்கள் என்பதையும் இச்சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.

முஸ்லிம்கள் தொடர்ந்தும் உடனடியாக எதிர்வினையாற்றும் (Immediate reaction) ஒரு சமூகமாகவே உள்ளனர் என்பதையும் தலைமை என்பது ஆன்மீக ரீதியாக மக்களை வழிநடாத்துவது மாத்திரம் அல்ல என்பதையும் இந்தக் கலவரங்கள் காட்டுகின்றன.

கண்டி பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்த வேளையில் இவற்றை எதிர்கொள்வது குறித்த முரண்பட்ட வழிமுறைகள் முஸ்லிம் சமூகத்தில் மேலெழுந்தன. சட்ட ரீதியாக இதனை அணுக வேண்டும், மனித உரிமை விவகாரமாக இதை மாற்ற வேண்டும், சர்வதேசமயப்படுத்த வேண்டும், தற்காப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், பகிரங்கமாக எதிர்த் தாக்குதல் நடத்த வேண்டும், அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பன போன்ற அணுகு முறைகளோடு பொறுமையாக இருந்து குனூத் நாஸிலாவை ஓதி அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும் என்ற வெவ்வேறுபட்ட பார்வைகள் சமூக வலைத் தளங்களில் வலம் வந்தன. முஸ்லிம் சமூகம் இன வன்முறைகளையும் கலவரங்களையும் எதிர்கொள்ளும் தயார்நிலையில் இல்லை என்பதையே இவை உணர்த்தின.

இன்னொரு புறம் முஸ்லிம் சமூகத்தை இத்தகைய இன வன்முறைகளிலிருந்து பாதுகாப்பதற்குத் தகுந்த தலைமைத்துவம் அவர்களுக்கு இருக்கவில்லை என்பதையும் இந்த சம்பவங்கள் தெளிவாக உணர்த்தின.

### யாரை நம்புவது?

காலனித்துவத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியல் கலாசாரம் இன மோதல்கள் மற்றும் பகைமுரண்பாடுகளின் தொகுப்பாகவே இருந்து வருகின்றது. பேரினவாதத்தைப் பாதுகாக்கும் நிறுவனங்களாகவே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் செயல்பட்டுள்ளன. நிருவாகம், நீதி, பாதுகாப்புத் துறை என்பன இத்தகைய அரசாங்கங்களின் எடுபிடிகளாக இருந்து வருகின்றன. 1976 இல் நடந்த புத்தளம் பள்ளிவாசல் படுகொலை, 1915 கம்பளைக் கலவரம் உள்ளிட்ட சமீபத்திய அளுத்கம, கிந்தொட்ட, அம்பாறை, திகன வன்கொடுமைகள் வரை இதற்கான தெளிந்த உதாரணங்களாகும்.

இதில் பாதுகாப்புப் படை இன சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டும் என நம்புவது பெரிய அறிவீனமாகும். திகனயில் நடந்தது போன்றே அளுத்கமயிலும் கிந்தோட்டையிலும் நடந்தது. தம்புள்ளைப் பள்ளிவாயல் சம்பவம் முதல் திகன இன வன்முறை வரை சுமார் 220 இனவாதத் தாக்குதல்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்தேறியுள்ளன.

குற்றவாளிகளை பாராட்சமின்றி தண்டிப்போம். இதற்காக அறிக்கையொன்றைக் கோரியுள்ளோம். இதற்கு மேல் இவ்வாறு நடப்பதற்கு இடமளியோம் என்றெல்லாம் கடந்த ஆறு ஆண்டுகளாகக் கூறி வரும் அரசாங்கங்கள் இது குறித்து உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. அதன் விளைவுகளையே இன்று காண்கின்றோம்.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண பேரினவாத அரசுகள் தவறியதனால் நாடு ஓர் இனப் போரைச் சந்தித்தது. இனப் போரின் முடிவில் சிங்களப் பேரினவாதிகளுக்கு ஒரு புதிய எதிரி தேவைப்பட்டது. முஸ்லிம்கள் எதிரியாக நிறுத்தப்பட்டனர். கடந்த 6 ஆண்டுகளாக சிங்களவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் குறித்த வெறுப்பையும் குரோதத்தையும் விதைக்கும் விஷப் பிரச்சாரத்தை ஞானசாரவும் அவருக்கு ஆதரவான அரசியல்வாதிகளும் முன்னெடுத்தனர்.



முஸ்லிம்கள் குறித்து உலகளாவிய ரீதியில் உருவாக்கப்பட்ட முஸ்லிம் பீதி (Muslimophobia) எனும் வலைப் பின்னலில் தம்மை இணைத்துக் கொண்ட இவர்கள், சிங்கள இனம் அருகி வருவதாகவும் முஸ்லிம்கள் பெருகி வருவதாகவும் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர். முஸ்லிம்களின் பொருளாதாரத்தை குறிவைத்துத் தாக்கினர். முஸ்லிம்களின் உணவகங்களிலும் ஜவுளிக் கடைகளிலும் சிங்கள இனம் பெருகுவதைத் தடுக்கும் கருத்தடை மருந்துகள் பயன்படுத்தப்படுவதாக கட்டுக் கதைகளைப் பரப்பினர். முஸ்லிம்களும் இதற்குத் தகுந்த பதிலடியை வழங்கவில்லை.

போலிக் குற்றச்சாட்டுக்களை பொய் என்று நிரூபிக்கத் தவறிவிட்டனர். மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் தூவப்பட்ட இனவாத நச்சுவிதைகள் இன்று விருட்சமாய் வளர்ந்து நிற்கின்றது. அதன் எதிரொலிப்பே இன்றைய இனக்கலவரங்கள். இன வாதத்தை உமிழும் இயக்கங்களும் அதைத் தூண்டி வளர்க்கும் அரசியல்வாதிகளும் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்கு கச்சை கட்டிக் கொண்டு களமிறங்கியுள்ளனர். ஆனால், அவர்கள் அழிக்க நினைப்பது நாட்டின் தேசிய சொத்துக்கள் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்.

### அரசியல்வாதிகளுக்கு முன்னாலுள்ள பொறுப்பு

அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் நல்லாட்சி அரசாங்கத்தில் இருப்பதற்கு வெட்கப்படுகிறோம் என்று ஒப்பாரி வைப்பதை விட அடுத்த கட்டம் தமது பங்கை சரியாகச் செய்வதற்கு முன்வர வேண்டும்.

நடந்து முடிந்த சம்பவங்களுக்கு தலைமை தாங்கியது யார்? பின்னாலுள்ள குற்றவாளிகள் யார்? இவற்றை துல்லியமாக இனங்காண்பதற்கும் அவற்றை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவும் அரசுக்கு அதிக அழுத்தங்களைக் கொடுக்க இவர்கள் முன்வர வேண்டும். அதன் மூலமே தம் மீதும் தாம் சார்ந்திருக்கின்ற அரசாங்கத்தின் மீதும் முஸ்லிம்கள் இழந்துள்ள நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

### முஸ்லிம் தலைமைகள்

அருவருக்கத்தக்க இனவாதத்திற்கு முன்னால் மக்களை அமைதியாக இருங்கள் என்று ஆலோசனை வழங்குவது மாத்திரம் சமூகத் தலைவர்களின் கடமையாக இருக்க முடியாது. கருத்துச் சுதந்திரம், முன்னிலைப்படுத்தல் போன்ற இஸ்லாத்தின் அப்படை எண்ணக்கருக்களைப் புரிந்து செயல்பட வேண்டும். ஒற்றுமைக்கு கருத்துச் சுதந்திரமே அடிப்படையாக உள்ளது. ஏனையவர்களின் கருத்தை நாம் தட்டிக் கழிக்கும்போது அக்கருத்தைச் சுமந்தவர்கள் எம்மை வெறுப்பார்கள், குரோதம் கொள்வார்கள், தனியாகப் பிரிந்து போவார்கள், அடுத்த சமூகங்களோடும் இணைந்துகொள்வார்கள் என சிந்தனையாளர் உஸ்தாத் மன்ஸூர் குறிப்பிடுவது முக்கியமான விடயமாகும்.

அனர்த்தம் ஏற்படும்போது கூடிக் கலைவதும் குழு அமைப்பதும் அறிக்கை விடுவதுமாக ஜம்இய்யதுல் உலமாவின் பணி சுருங்கக் கூடாது. மக்களை அரசியல் ரீதியிலும் கல்வி ரீதியிலும் சமூகவியல் ரீதியிலும் வழிநடாத்த வேண்டியது தலைமைகளின் பொறுப்பாகும். உடனடி எதிர்வினைக்கப்பால் நீண்டகாலத்தில் மூலோபாய ரீதியில் முன்னெடுக்கக் கூடிய செயற்பாடுகள் குறித்து அறிவார்ந்த ரீதியிலும் நடைமுறைச் சாத்தியமான வழியிலும் முஸ்லிம்ளுக்கு வழிகாட்டும் நிலையில் இன்றைய தலைமைத்துவம் எதுவும் இல்லை.

முஸ்லிம் சிவில் சமூகத்தை நீண்டகாலத்தில் மிகச் சரியான பாதையில் இட்டுச் செல்லக் கூடிய ஒரு கூட்டுத் தலைமைத்துவம் இன்றைய காலத்தின் உடனடித் தேவையாகும்.

ஜம்இய்யதுல் உலமா போன்ற நிறுவனங்கள் இவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் சிங்கள சிவில் சமூகத்துடன் பரந்துபட்ட நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதே நமக்கு முன்னாலுள்ள ஒரே தெரிவாகும்.

பகை முரண்பாடுகள், பரஸ்பர சந்தேகங்கள், இனக் குரோதங்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்ப அமைதியை உருவாக்கவோ உதவப் போவதில்லை. பல்லின சமூக அமைப்பில் ஓரினம் அடுத்த இனத்தவர் மீது சார்ந்து வாழ்வது தவிர்க்க முடியாதது.

எனவே, முஸ்லிம் சமூகத்தின் மூலோபாயக் குறிக்கோள்களில் தேசிய நல்லிணக்கமே முதன்மைக்குரியதாகும். முஸ்லிம்கள் குறித்த சந்தேகங்களை திறந்த நிலையில் கலந்துரையாடி நீக்குவதற்குத் திரட்சியானதும் தொடர்ச்சியானதுமான ஒரு தேசிய வேலைத் திட்டமே இன்றைய உடனடித் தேவையாகும். இதற்கு முஸ்லிம் சமூக நிறுவனங்கள் ஒன்றுபடுமா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் தேசியம் சார்ந்து செயலாற்ற வேண்டும்

அளுத்கமவில் இடம்பெற்ற துரதிஷ்டமான சம்பவத்தை தொடர்ந்து கடந்த தினம் மிகவும் கொடூரமான இன வன்முறை கண்டியில் அரங்கேறியது. தர்காநகர் வன்முறைக்குப் பின்னால் அரசியல் இலாபத்திற்கு இனவாதக் கருத்தியலை பரப்பிய ஏகாதிபத்தியவாத ஆட்சியின் ஆசிர்வாதத்தைக் காண முடிந்தது. 'அப சரணய்' கூட்டத்தை தொடர்ந்து ஊர்வலம் செல்ல அனுமதி வழங்க வேண்டாம் என அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் விடுத்த வேண்டுகோள்களையும் கணக்கில் கொள்ளாமல் அப்போதைய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் 'ஒன்றும் நடைபெறாது' என ஊர்வலம் செல்ல அனுமதியளித்தார். இது மறைமுக அரசியல் சக்திகளின் உத்தரவுப்படி இடம்பெற்றது என்பது தெளிவு.

சட்ட ஆதிக்கம் நிலவும் இலங்கை உதயமாக வேண்டும் என்பதே ஜனவரி 08 ஆட்சி மாற்றத்திற்கு பங்களித்த மக்களின் ஒரே பிரார்தனையாகும். இந்தப் பிரார்த்தனையின் வெற்றியைத் தொடர்ந்து கிந்தோட்ட, அம்பாறை, கண்டி போன்ற சம்பவங்கள் எமது வரலாற்றில் பதிவாகியிருக்கக் கூடாது. கோத்திரவாத சிந்தனை, குறுகிய எண்ணங்களை தோற்கடித்து பெற்றுக் கொண்ட ஜனவரி 08 வெற்றியின் குறிக்கோள்களை கடந்த சில வருடங்களில் பாதுகாக்க இயலாமல் போயிருப்பதன் மூலம் பொறுப்புதாரிகள் பெரும்பான்மை மக்கள் எதிர்பார்ப்புக்களுக்கு அநீதியிழைத்துள்ளனர்.

ஜனநாயம், சுதந்திரம், சமநிலை, சட்டஆதிக்கம், வேற்றுமையில் ஒற்றுமை போன்ற சகல விடயங்களுக்காக வேண்டியும் அணிதிரண்ட பெரும்பான்மை மக்களின் கனவுகள் இன்று சிதைந்து போயுள்ளன. ஜனவரி 08ஆம் திகதி முதல் அண்மைய கண்டிச் சம்பவம் வரையில் ஒரு சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் சுதந்திரமாக பரப்பப்பட்டு வந்த துவேஷக் கருத்துக்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமையின் மூலம் தம்மை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு துரோகம் இழைத்திருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

தர்கா நகர் சம்பவம் முதல் கிந்தோட்டை, அம்பாறை, கண்டி வரையில் இடம்பெற்ற அனைத்து வன்முறைகளும் மிகவும் திட்டமிட்ட அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொறுப்பு வாய்ந்தவர்கள் தெரிவித்து வரும் கருத்துக்களின் மூலம் அறிய முடிகிறது. எனினும் வருடத்தின் 365 நாட்களும் ஊடகங்கள் வாயிலாக கோபாவேஷக் கருத்துக்களை பரப்பி வரும் சக்திகளை அடையாளங் கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது உண்மையில் விநோதமானது.

சில பிரதேசங்களில் முஸ்லிம்களது உடைமைகளையும் மதவழிபாட்டுத் தளங்களையும் பாதுகாப்பதற்கு மதகுருமார்கள் முன்வந்த செய்திகளை நாம் கேள்விப்பட்டோம். அது மகிழ்ச்சிக்குரிய விடயம். என்றாலும் இந்த மக்களின் வாக்குகளைப் பெற்ற தலைவர்கள் தமது கட்சியின் செயற்பாட்டாளர்கள் சகிதம் மக்களது உயிர்களை பாதுகாக்கும் போராட்டத்திற்கு வீதிக்கிறங்கி தலைமைத்துவம் வழங்கியிருக்க வேண்டும். எந்தவொரு தரப்பிலிருந்தும் இதுபோன்ற முயற்சிகளை கண்டு கொள்ள முடியவில்லை. ஊடகங்களின் முன்னிலையில் வெறுமனே வெற்றுப் பேச்சுக்களை மாத்திரமே இவர்கள் தெரிவித்து வந்தார்கள்.

இதுபோன்ற நெருக்கடியான சந்தர்ப்பங்களிலேயே அரசியல் கட்சிகள் பேச்சில் மாத்திரமல்லாமல் செயலிலும் தேசிய கட்சியாக இயங்க வேண்டும். இன்று எமது நாட்டிற்கு இனத்தை மையப்படுத்துகின்ற அரசியல் தலைவர்கள் தேவைப்படுவதில்லை. தேசிய அரசியல் தலைவர்களே அவசியப்படுகின்றனர். அதிகார மோகத்திற்காக வேண்டி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இன மைய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் எழுந்துள்ளது.

அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் இனம் சார்ந்த கட்சிகள், தலைவர்கள் என்றில்லாமல் தேசிய அரசியல் தலைவர்கள் என்பதை செயலில் காண்பிக்க வேண்டும். எமது அரசியல் தலைவர்களும், கட்சிகளும் இந்தச் சரியான பாதையில் செல்லாவிட்டால் அதற்கான நஷ்ட ஈட்டை எதிர்கால சந்ததியினருக்கு இரத்தத்தாலும் கண்ணீராலும் செலுத்த வேண்டியேற்படும்.

1991 இல் பேருவலையில் இடம்பெற்ற சிறியதொரு சம்பவம் இனமோதலாக மாறிய நிகழ்வு என் நினைவுக்கு வருகிறது. அப்போது நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன். இந்தச் சம்பவம் கேள்விப்பட்டவுடன் நான் ஜனாதிபதி பிரேமதாசவை தொடர்புகொண்டு எரிகின்ற நெருப்பை அணைக்க வேண்டியதன் தேவை குறித்து உறுக்கமாகக் கலந்துரையாடினேன். அதற்கவர், பயப்பட வேண்டாம் இம்தியாஸ், தேவையான சகல நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்கிறேன். நாளை காலை 6 மணிக்கு காலி முகத்திடலில் உள்ள இராணுவ மத்திய நிலையத்திற்கு வாருங்கள் என்றார்.

பிரதமர் டீ.பி. விஜேதுங்க, பாதுகாப்பு செயலாளர் சிரில் ரணதுங்க, இராணுவத் தளபதி ஜெனரல் ஆடிகல, பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நெவில் குணரத்ன, மாகாண சபை முதலமைச்சர் சுசில் முனசிங்க உள்ளிட்ட சகலரும் என்னுடன் இணைந்து அன்று காலை பேருவலைக்குச் செல்லத் தயாராக இருந்தார்கள். ஏலவே கூறியது போன்று உரிய நேரத்தில் நாம் அனைவரும் ஹெலியில் பேருவலையைச் சென்றடைந்தோம். எல்லோரும் சேர்ந்து மோதல் இடம்பெற்று வருகின்ற பகுதிகளுக்கு சென்று அவற்றை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தோம்.

இனவாத மோதல் உக்கிரமடைவதைத் தடுப்பதற்கு அரசியல் தலைமைகளிடம் காணப்பட்ட உடனடித் தேவை இந்த நிகழ்வின் மூலம் நிரூபணமானது. பேருவலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கதிரையில் அமர்ந்து கொண்டு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் சிரில் ரணதுங்க இனவாத மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு முழு நாளும் செயற்பட்ட விதம் என் நினைவுக்கு வருகிறது.

எமது தாய் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு மென்மேலும் குறுக்கு வழிகளை கையாள்வதற்குப் பதிலாக சரியான பாதையில் பயணிப்பதற்கு சரியான தலைமைத்துவமொன்றை வழங்க வேண்டிய தேவை உள்ளது. 30 வருடகால யுத்தத்தின் பின்னர் கொலை, காணாமல் போதல், இனவாதம், அச்சம், சந்தேகம் மற்றும் சர்வாதிகாரம் கோலோச்சிய இருள் யுகத்திலிருந்து மீண்ட இலங்கை சமூகத்திற்கு மீண்டும் அந்த விடயங்களின் பால் செல்ல இடமளிக்க முடியாது.

அதனால் கண்டி திகன சம்பவத்தை ஓர் எச்சரிக்கையாக கொண்டு இந்த சிறிய நாட்டில் நாம் எல்லோரும் ஒரு குடும்பமாக சமமாகவும், கௌரவமான முறையிலும் புரிந்துணர்வுடனும் வாழவேண்டும். இதற்கு நாம் அறிவுபூர்வமாக செயற்பட வேண்டும்.

# தண்டிக்கப்படுவோம் என்ற பயம் ஏற்படாத வரை தாக்குதல்கள் தொடரும்

• எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கை, முஸ்லிம்களுக்கு பாதுகாப்பற்ற நாடுகளில் ஒன்றென, லண்டன் நகரை மையமாகக் கொண்டியங்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான, சர்வதேச மன்னிப்புச் சபை, பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி வெளியிட்ட, தனது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தது.

கடந்த காலங்களில், இலங்கை முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் வீடுகள் அடிக்கடி சிங்களவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி வந்தன. கடந்த நவம்பர் மாதம், காலி, கிந்தோட்டையில் சிறு பிரச்சினையொன்றின் காரணமாக, முஸ்லிம்களின் உடைமைகள் மற்றும் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன.

ஆயினும், இலங்கை முஸ்லிம்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற நாடுகளில் ஒன்று என்பதை இலங்கை முஸ்லிம்களாவது கடந்த மாதம் நினைக்கவில்லை.

2012 ஆம் ஆண்டு முதல், 2014 ஆண்டு வரை, அதாவது மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின் இறுதி மூன்று ஆண்டுகளில், இலங்கை முஸ்லிம்களுக்கு, எப்போது எது நடக்குமோ என்ற பீதியில், வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு இருந்தது.

முஸ்லிம் விரோதக் கும்பல்களுக்கு, அப்போதைய அரசாங்கத்தின் ஆதரவு கிடைத்தமையே அதற்கு முக்கிய காரணமாகும். அக்காலத்தில், சர்வதேச மன்னிப்புச் சபை, இந்த அறிக்கையை வெளியிட்டு இருந்தால், முஸ்லிம்கள் மட்டுமல்லாது, வேறு மதத்தவர்களும் அதை நம்பியிருப்பார்கள்.

கடந்த மாத அறிக்கையை, வாசித்தவர்களும் அதைப் பற்றி அறிந்தவர்களும் எவ்வளவு பொருட்படுத்தாமல் விட்டார்கள் என்றால், சிலர் ஓரிரு நாட்களிலும் சிலர் ஒரு சில மணித்தியாலங்களிலும் அதை மறந்து விட்டார்கள்.

ஆனால், அந்த அறிக்கை வெளியிடப்பட்டு சுமார் 10 நாட்களில், அம்பாறையிலும் கண்டி மாவட்டத்தில் திகன, தெல்தெனிய, கட்டுகஸ்தொட்ட மற்றும் தென்னக் கும்புற போன்ற பகுதிகளிலும் முஸ்லிம்களின் வீடுகள், பள்ளிவாசல்கள் மற்றும் கடைகள் பற்றி எரியும்போது, மன்னிப்புச் சபையின் அறிக்கை உண்மையாகி விட்டது.

இன்று நாடெங்கிலும் முஸ்லிம்கள், எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் வாழ வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. அரசாங்கமும் பாதுகாப்புத் துறையினரும் என்னதான் உத்தரவாதம் அளித்தாலும், எந்தவொரு முஸ்லிமுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் மத வழிபாட்டுத் தலத்துக்கும் பாதுகாப்பு என்ற உத்தரவாதமே இல்லாத நிலையே உருவாகியிருக்கிறது. ஆம்! உலகில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லாத நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது, நிரூபணமாகி விட்டது.

அம்பாறையில், பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி, இடம்பெற்ற தாக்குதல்களைப் போல் அல்லாது, கண்டி மாவட்டத்தில் மார்ச் நான்காம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள், பயங்கரமானதும் பல நாட்கள் நீடித்ததுமாகக் காணப்பட்டன.

அரசாங்கம் ஐந்தாம் திகதி, கண்டி மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தையும் மறுநாள், ஒரு வார காலத்துக்கு அவசரகால நிலையையும் பிரகடனப்படுத்தும் அளவுக்கு அவை பயங்கரமாகின.

ஆரம்பத்தில், இரவு நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதிலும், வன்செயல்கள் தொடரவே, பகல் நேரங்களிலும் அச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.


கடந்த நவம்பர் மாதம் காலி, கிந்தோட்டை என்ற இடத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் இடம்பெற்ற போதும், பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், முஸ்லிம்கள் சம்பந்தமான ஒரு விடயத்துக்காக, 103 ஆண்டுகளுக்குப் பின்னரே, அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இதற்கு முன்னர், 1915 ஆம் ஆண்டு, சிங்கள-முஸ்லிம் கலவரம் ஏற்பட்ட போதே, முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட ஒரு விடயத்துக்காக, அவ்வாறான சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அன்று அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கவில்லை. எனவே, 'மார்ஷல் லோ' எனப்படும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில், அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையிலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த வேளையிலும், முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் எவ்வித தடையுமின்றி இடம்பெற்றமையாலேயே அரசாங்கம் தொடர்ந்து, ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிக்க வேண்டியதாயிற்று.

மறுபுறத்தில், அச்சட்டங்கள் பெயரளவில் மட்டுமே இருந்தன என்பதற்கு, அச்சட்டங்களே சிறந்த உதாரணங்களாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால், அச்சட்டங்கள் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தினவேயன்றி, தாக்குதல்களை நடத்திய காடையர்களைக் கட்டுப்படுத்தவில்லை.

அவசரகால நிலையோ அல்லது ஊரடங்குச் சட்டமோ, இலங்கை மக்களுக்குத் தெரியாத அல்லது பழக்கமில்லாத சட்டங்கள் அல்ல. நாடு சுதந்திரமடைந்து கழிந்த 70 ஆண்டுகளில் அரை வாசிக்கு மேல், அதாவது 40 ஆண்டுகளுக்கு மேல் நாடு அவசரகால நிலையின் கீழேயே நடத்தப்பட்டுள்ளது.



1971 ஆம் ஆண்டு, மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது கிளர்ச்சி காரணமாக, அந்த ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம், புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையிலான போர் முடிவடைந்து, இரண்டு ஆண்டுகள் முடிவடையும் வரை, இடைக்கிடையே ஒரு சில மாதங்கள் நீக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி வரை அமுலில் இருந்தது.

அந்தக் காலத்தில், அடிக்கடி நாட்டில் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. அவற்றின் பயங்கரத் தன்மையை, தற்போது 20 வயதைத் தாண்டியவர்கள் நன்கறிவர். அவற்றை மீறினால் ஏற்படும் விளைவுகளையும் அவர்கள் அறிவர்.

அந்தச் சட்டங்கள் மட்டுமல்ல, பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ இருக்கும்போது, ஒரு குப்பைப் பையை வீதியில் தூக்கியெறிவதற்குக் கூட, எவருக்கும் தைரியம் இருக்கவில்லை. செயற்படும் சட்டத்துக்கு அவ்வாறுதான் பயப்படுவார்கள்.

ஆனால், கண்டிப் பகுதி காடையர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அவசரகாலச் சட்டத்தையோ அல்லது பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தையோ மதிக்கவில்லை. அவை, மீறக்கூடியவை என்பதையும் மீறினால் தமக்கு எதுவும் நடக்கப் போவதில்லை என்பதையும் அவர்கள் நன்கறிந்திருந்தனர் போலும்.

பல நூற்றுக் கணக்கான குண்டர்கள், தடிகளோடும் பொல்லுகளோடும் நடமாடுவதை தொலைக்காட்சியில் மக்கள் கண்டனர். ஆனால், சுமார் 280 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதாவது, குண்டர்களில் பலரை, எந்தவொரு சட்டமும் கட்டுப்படுத்தவோ பின் தொடர்ந்து வரவோ இல்லை.

இதற்கு முன்னைய இனக் கலவரங்களின் போது, எதையும் விசாரித்து அறியாது, சிங்கள மக்களின் பக்கத்தை எடுக்கும் ஜாதிக ஹெல உருமயவின் தலைவரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவே, இம்முறை சட்டம் குண்டர்களை கட்டுப்படுத்தவில்லை என்று கூறியிருக்கிறார். பிரச்சினைகள் ஆரம்பிக்கும் போது, பொலிஸார் செயற்படாததன் காரணமாகவே வன்செயல்கள் பரவின என்று அவர் கூறியிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிலைமையைக் கட்டுப்படுத்தச் செய்திருக்க வேண்டிய ஒரே வேலை, சட்டத்தை அமுல் செய்வதே எனக் கூறியிருந்தார்.

பல இடங்களில் சம்பவங்கள் இடம்பெறும்போது, பொலிஸார் வெறும் பார்வையாளர்களாகவே இருந்துள்ளனர் என அரசாங்கத்தின் தலைவர்களின் மிக நெருங்கிய நண்பரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன கூறினார். செயலுருவம் பெறாவிட்டால் அவசரகாலச் சட்டமோ, ஊரடங்குச் சட்டமோ எதற்கு என அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

புலனாய்வுப் பிரிவினர் ஒழுங்காகச் செயற்படவில்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்.

பொலிஸாரின் செயற்பாடுகளில் மந்த நிலை இருந்ததாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கூறியிருந்தார். அவர் தான், தாக்குதல்கள் இடம்பெறும் போது, பொலிஸாருக்குப் பொறுப்பான சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக இருந்தார்.

அம்பாறையில் முஸ்லிம் சாப்பாட்டுக் கடை ஒன்றில், உணவருந்த வந்த சிங்களவர் ஒருவரின் உணவில், கருத்தடை மாத்திரைகளைக் கலந்துவிட்டார்கள் என்ற பொய் வதந்தியைப் பரப்பிவிட்டே, அந்தக் கடையையும் அயலில் இருந்த ஏனைய முஸ்லிம்களின் கடைகளையும் பள்ளிவாசலையும் தாக்கியிருந்தார்கள்.

அது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக, சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஐ.நா ஒப்பந்தத்தின் கீழ், வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஆரம்பத்தில் நடவடிக்கை எடுத்த பொலிஸார், பின்னர் இது இனக்கலவரம் அல்ல எனக் கூறி, சாதாரண சட்டத்தின் கீழ் வழக்கைத் தொடர்வதாக நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, விசாரணை செய்யுமாறு பிரதமர், மட்டக்களப்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரைப் பணித்துள்ளார்.

பொலிஸாருக்கு எதிராக அரசாங்கத்தின் தலைவர்களே இவ்வளவு குற்றஞ்சாட்டும் போதும், பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள், அதற்குப் பதிலளிப்பதாகத் தெரியவில்லை.

அதேவேளை, அவ்வாறு பொலிஸாஸரக் குறை கூறிக் கொண்டு இருக்கும் அரச தலைவர்கள், அந்தப் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவில்லை.

அம்பாறையில் இடம்பெற்ற சம்பவமே, தாக்குதல்கள் திட்டமிடப்பட்டவை என்பதை மிகவும் தெளிவாக, வெளி மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு எடுத்துக் காட்டியது. இரவு ஒன்பது மணிக்குப் பின்னர், அந்தச் சாப்பாட்டுக் கடைக்கு வந்தவர், தமது உணவில் ஏதோ வித்தியாசமான ஒரு பொருளைக் காண்கிறார். அவர் உடனே அது வேறொன்றும் அல்லாது, கருத்தடை மாத்திரையே என முடிவுக்கு வருகிறார். அவரது அலைபேசி அழைப்பை அடுத்து, அங்கு விரைந்து வரப் பலர் தயாராகவும் இருந்துள்ளனர். அவர்கள், கடையின் காசாளரை மிரட்டுகின்றனர். அவர் செய்வதறியாது பயத்தினால் தலையை அசைக்கிறார். அது வீடியோ செய்யப்பட்டு, உடனே சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்படுவதோடு கடைகள் அடித்து நொறுக்கப்படுகின்றன.

இப்போது, உணவில் இருந்தது வெறும் மாஉருண்டை என அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் ஏ. வெலிஅங்ககே முடிவு செய்துள்ளார். அவ்வாறாயின், (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி கலவரம் ராஜபக்ஷவின் அரசியல் சூழ்ச்சி

**தம்பர அமில தேரர்**
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

- **கடந்த தினம் அம்பாறை, திகன, தெல்தெனிய மற்றும் நாட்டின் இதர பிரதேசங்களில் இடம் பெற்று வந்த இனமோதல்களை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இவை முழுமையாகத் திட்டமிட்ட அடிப் படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்கள். மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பம் உள்ளிட்ட அணியினர் கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு குற்றச் செயல்களைப் புரிந்துள்ளார்கள். கொலை, கொள்ளை, ஊழல், ஜனநாயக மீறல், இனவன்முறையை தூண்டியமை உள்ளிட்ட பல் வேறு வழக்குகள் அவர்கள் மீது தொடுக்கப்பட் டுள்ளன. இந்த வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முன்பே அவற்றை நீக்கிக்கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது.

இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதன் மூலமே அவற்றை செய்ய முடிகின்றது. அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமெனில் அரசாங்கத்தை பலவீன மடையச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட வேண்டும். அரசாங்கத்தை ஓரமைப்பில் இருப்பதற்கு இடமளிப்பதில்லை. நாட்டில் அமைதி நிலவ இடமளிப்பதில்லை. பிரச்சினை களை ஒவ்வொன்றாக மேலெழுப்புகிறார்கள். ஆர்ப்பாட்டங்கள், பணிப் பகிஷ்கரிப்பு, உண்ணா விரதம் போன்றவற்றை அன்றாடம் ஏற்படுத்தி வருகிறார்கள். அத்துடன் இனவாத நிகழ்ச்சி நிர லையும் மெல்லக் கவனமாக முன்னெடுக்கிறார் கள். நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கு வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

மறுபுறத்தில் முஸ்லிம்களைத் தாக்கும்போது பெரும்பான்மை சிங்கள, பௌத்தர்களின் ஆதரவு தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ராஜ பக்ஷவுக்கு உள்ளது. இந்த விடயங் களைச் செய்வதன் மூலம் அவர் ஆட்சிக்கு வர முனைகிறார் என்ற சமிக் ஞையையே காண்பித்து வரு கிறார். இதற்காக வேண் டியே மகாசொன் பலகாய உருவாக்கப்பட்டது.



- **தெரிவிக்கும் சிங்கள மக்களை விட இனவாதி களின் கரங்களே மேலோங்கியிருப்பது விளங்குகிறது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

மஹிந்த சொன்னால் எதையும் செய்யக்கூடிய வர்கள் உள்ளார்கள். இதனாலேயே பந்துல குணவர்தண மஹிந்தவுக்காக வேண்டி தேங்காய் மட்டையை சின்னமாக வைத்தாலும் மக்கள் வாக்களிப்பார்கள் என்றார். எனவே மக்கள் கடைகளை கொளுத்துவதற்கோ உடைமைகளை சேதமாக்குவதற்கோ வாக்களிப்பதில்லை. அப்படி யென்றால் மஹிந்தவுக்கு வாக்களித்த ஹோமா கம மற்றும் தெற்கிலுள்ள பெரும்பான்மை மக் கள் முஸ்லிம்களைத் தாக்கியிருக்க வேண்டும். பெரும்பான்மை மக்கள் இனவாதத்திற்கு ஆதர வில்லை. மஹிந்தவிற்கு எதையும் செய்யக் கூடிய சக்திகள் உள்ளன. 44.5 வீதமானவர்களே இம்முறை தேர்தலில் மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். இது பெரும்பான்மையல்ல.

மறுபுறத்தில் அரசாங்கத்தின் பலவீனமும் இந்தச் சம்பவங்களுக்கு காரணமாக அமைந்துள்

லிம் பெண்களைக் காணவில்லை. சகவாழ்வு குறித்த கலந்துரையாடலே இங்கு இடம்பெற்றது. இது ஆரோக்கியமான நிலையல்ல. இவை இன வாதக் கும்பல்களின் செயற்பாடுகளுக்கே சாதக மாய் அமைகிறது.

- **இனவாதத்தை இல்லாமல் செய்வதற்கு நாட்டில் ஒரு நீண்டகாலத் திட்டம் இதுவரை முறையாக முன்வைக்கப்படவில்லை. இதற் குரிய மாற்றுத் திட்டங்கள் ஏதும் உள்ளதா?**

இலங்கையில் இனவாதம் என்றொன்று இல்லை. இது முழுமையானதொரு அரசியல் சூழ்ச்சி. இங்கு இனவாதமொன்று இருப்பின் சிங்கள மக்கள் எல்லோரும் இணைந்து முஸ்லிம் மக்களுக்கு தாக்குதல் நடாத்தியிருக்க வேண்டும். பெரும்பான்மையான சிங்கள மக்கள் இனவாதி கள் என்றால் இலங்கையில் சிறுபான்மைச் சமூ கங்களே இருந்திருக்காது.

முஸ்லிம் மக்களுள் பெரும்பான்மையானவர் கள் இனவாதக் கருத்தில் இல்லை. சிங்களவர் களுடன் இணைந்து வாழவே ஆசைப்படுகிறார் கள். எமது சிறந்த நண்பர்களாகவும் முஸ்லிம் களே உள்ளார்கள். எனவே இனவாதக் கருத்தியல் இலங்கையில் இல்லை. ஆனால் குறுகிய நோக் கங்களை அடைந்துகொள்ள ஒரு சில இனவாதக் கும்பல்கள் வழிநடத்தப்படுவது உண்மை.

இயல்பாகவே இலங்கையின் பெரும்பான் மையான மக்கள் இனவாதக் கருத்துக்களில் இல்லை. சட்டவிரோதமான முறையில் குறுகிய நோக்கங்களுக்காக வேண்டி இனவாதம் என் னும் பயங்கரவாதத்தை விதைக்கின்றார்கள். நாட் டில் சட்டவிரோத விடயங்களை செய்பவர்கள் யாராக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவ ராக இருந்தாலும் சட்டத்தை முறையாக அமுல் படுத்த வேண்டும். இனவாதத்தை பரப் பும் முகநூல்களை தடை செய்ய வேண்டும். இனவாதக் கட்சி கள் மற்றும் அமைப்புக் களை தடைசெய்ய வேண்டும். கோபா வேஷக் கருத்துக்களை தெரிவிப்பவர்களை

கண்டி கலவரத்தை பொதுஜன பெரமுனவில் உள்ளவர்களே வழிநடாத்தியுள்ளனர். மிகவும் திட்டமிட்ட அடிப்படையிலேயே இந்தக் கல வரம் மூட்டப்பட்டுள்ளது. இதுவல்லாமல் முஸ் லிம்களுக்கு எதிராக சிங்கள மக்களின் எழுச்சி யொன்று இடம்பெறவில்லை. அப்படியென்றால் முழு நாட்டிலும் எழுச்சியொன்று இடம்பெற்றி ருக்க வேண்டும்.

பெரும்பான்மை சிங்கள மக்களிடம் இத்த கைய நிலைப்பாடுகள் இல்லை. திகன, தெல் தெனிய பகுதிகளில் முஸ்லிம் மக்களை பாது காத்த சிங்கள மக்களும் உள்ளார்கள். முஸ்லிம் களது உடைமைகளுக்கு தாக்குதல் நடாத்த முயன்ற தீவிரவாதக் குழுக்களை அந்தப் பகுதி யைச் சேர்ந்த சிங்கள மக்கள் துரத்தியடித்துள் ளார்கள். எனவே இங்கு சிங்கள முஸ்லிம் மோத லொன்று இல்லை. வெளியிலிருந்து சென்ற சில குழுக்களே வன்முறையில் ஈடுபட்டிருப்பதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

திட்டமிட்ட அடிப்படையில் ஓரிடத்திலிருந்து இந்தக் கலவரம் வழிநடத்தப்பட்டுள்ளது. 80 இற்கும் மேற்பட்ட இணையத்தளங்கள் ஆரம் பிக்கப்பட்டு, முகநூல் பக்கங்களினூடாக இந்த இனவாத பிரசார நடவடிக்கைகள் சூசகமான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கண்டி கலவரம் முற்றாக மஹிந்த அணியினரின் சூழ்ச்சி யேயன்றி வேறொன்றுமில்லை.

- **இந்தக் கலவரத்தின் பின்னணியில் அரசியல் வாதிகளும் காணப்படுவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து...**

உண்மை. மஹிந்த உள்ளிட்ட பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களே இந்த வன்முறையை கட்டவிழ்த்துள்ளனர். பெப்ர வரி 10ஆம் திகதி ஓரளவு வெற்றியைப் பெற் றார்கள். ஒரு பக்கத்தில் இந்த வெற்றியில் பித்துப் பிடித்துள்ளார்கள். தற்போது தடல் புடலாக அர சாங்கத்தை கவிழ்க்கும் முயற்சிகளை மேற் கொண்டு வருகிறார்கள். இதில் ஒரு கட்டமாகவே கடந்த தினம் இனவன்முறைகளை அரங்கேற்றி னார்கள்.

- **இலங்கையில் சகவாழ்வுக்கு ஆதரவு**

ளது. ஜனாதிபதி பிரதமருக்கு ஏசுகிறார், சுதந்திரக் கட்சியிலுள்ள சில ஆளும் தரப்பு அமைச்சர்கள் பகிரங்கமாகவே அரசாங்கத்தின் குறைகளை விமர்சித்து வந்தார்கள். மக்கள் இதனை வியப் பாகப் பார்த்தார்கள். அரசாங்கத்தின் மீது கொண்ட கோபத்திற்கு மஹிந்த தரப்புக்கு வாக்களித்து பழி தீர்த்துக் கொண்டார்கள். எனவே முஸ்லிம்களை தாக்க மஹிந்தவுக்கு ஆதரவாக மக்கள் வாக்க ளிக்கவில்லை. அரசாங்கத்திற்கு ஒரு படிப்பி னையை கொடுக்கும் நோக்கிலேயே மக்கள் மறுபக்கத்திற்கு வாக்களித்தார்கள்.

- **நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதில் சிங் கள சமூகத்தின் பங்களிப்பு போதாது என்றொரு குற்றச்சாட்டு முஸ்லிம்களிடம் உள்ளது. இது தொடர்பில் உங்களது கருத்தை குறிப்பிட முடியுமா?**

சிங்கள மக்களுள் மாத்திரமல்ல. தமிழ், சிங் கள, முஸ்லிம் மக்கள் மத்தியிலும் சாதாரண மக்கள் என்றொரு தரப்பு உள்ளது. இவர்களிடம் அரசியல் படிப்பறிவு இல்லை. வாக்களிக்கும் படி கூறினால் வாக்களிப்பார்கள். அவ்வளவுதான். இவர்கள் அமைதியாக இருப்பவர்கள். அரசாங் கத்தின் செயற்பாடுகளில் தலையிடாதவர்கள். எனவே இனக்கலவரங்கள் ஏற்படும் போது அதற் கெதிராக வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் மட்டத்தில் இவர்கள் இல்லை. எனவே மௌன நிலைப்பாட்டிலுள்ளவர்கள். ஒரு புறத்தில் இந்த மௌன நிலையானது இனவாதக் கும்பல்களுக்கு பாரிய உந்துசக்தியாக அமைகின்றது.

உண்மையில் எமது நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு இத்தகைய சிவில் சமூக மக்கள் ஒன்றிணைந்து குரலெழுப்புவதில்லை. முஸ்லிம் சமூகத்திலும் அவ்வாறுதான். எந்த வொரு பிரச்சினைக்கு எதிராக குரலெழுப்பு வதற்கும் முஸ்லிம் பெண்கள் வீதிக்கிறங்குவது குறைவு.

கடந்த தினம் வெள்ளவத்தை பள்ளியில் ஏற் பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் முஸ்லிம் பெண் கள் பங்குபற்றியிருக்கவில்லை. சர்வமதத் தலை வர்கள் பங்குபற்றினார்கள். மாற்று மதப் பெண் களும் கலந்துகொண்டிருந்தார்கள். ஆனால் முஸ்

பிடித்து சிறையில் அடைக்க வேண்டும். உயரிய பட்ச தண்டனையை வழங்க வேண்டும். எனவே சட்டம் உடனுக்குடன் அமுலாக்கப்பட வேண் டும். ஆனால் அரசாங்கங்கள் இந்த விடயத்தில் பாராமுகமாகவே இருந்துள்ளன.

நான் அந்தக் காலத்திலிருந்து வலியுறுத்திய விடயமொன்றுதான் இனவாதத்தை அடிப்படை யாகக் கொண்ட பெயர்களை கட்சிகளுக்கு வைக்க வேண்டாம் என்பது. முஸ்லிம் காங்கி ரஸ், ஹெல உறுமய, தமிழ் தேசியக் கூட்ட மைப்பு என்று பெயர் சூட்டாதீர்கள் என்று வாதித்து வந்தேன். எனவே இந்தக் கட்சிகளை சூழ இன அடிப்படையிலேயே மக்கள் அணி திரள்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸிற்கு சிங்கள வர்கள் செல்ல முடியாது என்றொரு கருத்து இதன் மூலம் சொல்லப்படுகிறது. ஹெல உறு மயவுக்கும் அப்படித்தான். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றை பாருங்கள். அதில் சகல இனத்த வர்களும் உள்ளார்கள். இந்த அடிப்படையிலேயே கட்சிகள் உருவாக வேண்டும்.

மதத்தின் பெயரால் எந்தவொரு அமைப்பும் உருவாக்கப்பட முடியாது என்ற சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான சட்டங்கள் கடு மையாக இருக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சி பலப்படுத்தப்பட வேண்டும் என்பதே இது போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையும். பொதுவாக எமது நாட்டிலுள்ள மக்கள் அமைதி யானவர்கள். அப்பாவிகள். அவர்கள் ஒருபோதும் துப்பாக்கி ஏந்த விரும்புவதில்லை. இவர்களை சிதைக்கும் கும்பல்களை கட்டிப்போடும் சட்டங் கள் கொண்டு வரப்பட வேண்டும்.

- **இலங்கையிலுள்ள அஸ்கிரிய, மல்வத்த, ராமக்ஞ, மஜ்ஜிம போன்ற பௌத்த நிகாயாக் களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள் ளது. இந்த நிகாயாக்களில் ஏதாவதொன் றுக்கு அடிபணிந்தே பௌத்த துறவிகள் கருமமாற்றுகிறார்கள். கலகொடஅத்தே ஞானசார உள்ளிட்ட இனவாதத்தை தாண்டும் தேரர்களை கட்டுப்படுத்துவதில் பௌத்த மத பீடங்கள் ஏன் பின்நிற்கின்றன?**

(பக்.14)



## எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

## மாடுகளுக்கு சூடுகள் தேவையில்லை

வேலையில்லாத நாவிதன் பூனையைப் பிடித்துச் சிரைத்தானாம் என்று சொல்வார்கள். மக்கள் இப்படித் தான். தமக்கு வேலை ஏதும் இல்லாவிட்டால் முட்டையில் மயிர் பிடுங்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். இதற்குச் சரியான வழி அவர்களை வேலையில் ஈடுபடுத்துவதுதான்.

முஸ்லிம் சமூகத்துக்கும் ஆயிரம் வருடங்களாக அழிவை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் வரவில்லை என்று தான் சொல்ல வேண்டும். இந்தக் காலப்பிரிவில் மக்களுக்கு பேசுபொருளாக எதுவும் இருக்கவில்லை. அதனால் மார்க்கத்தில் இதுவரை தீர்வுகள் கண்டறியப் படாத விடயங்களை வைத்துக் கொண்டு அவற்றில் மயிர் பிளக்கும் ஆராய்ச்சிகளை தமது அறிவுக்கு எட்டிய மட்டில் நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்தப் பிரச்சினைகளைக் காரணமாக வைத்தே ஊரைப் பிரித்து வேடிக்கை பார்த்து பொழுது போக்கினார்கள். பள்ளிவாசல்களை ஒவ்வொரு கொள்கைகளுக்குமான கொள்கைக் காரியாலயங்களாக வேறுபிரித்தார்கள்.

இந்த நிலையில் தான் கலிமா சொன்னவர்கள் எல்லோரும் ஒன்று தான் என்பதை எதிரிகள் எங்களுக்குப் புரிய வைத்தார்கள். கண்டி மாவட்டத்தில் மட்டும் 26 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. இவை எந்தக் கொள்கையின் காரியாலயம் என்று தாக்கியவர்கள் பார்க்கவில்லை. தனது கூட்டத்தாரை ஒதுக்கி வைத்த பள்ளிவாசல் என்று முஸ்லிம் சமூகம் பிரித்துப் பார்க்கவு மில்லை. பள்ளிவாசல் தாக்குதலுக்கு ஆளானதன் பின்னர், இது அந்தக் கொள்கையின் காரியாலயம், இது உடைக்கப் பட்டதையிட்டு நாங்கள் அலட்டிக் கொள்ளத் தேவை யில்லை என்று யாரும் ஒதுங்கிக் கொள்ளவுமில்லை.

பள்ளிவாசல் தாக்கப்படுவதற்கு முன்னர் இது எங்களது கொள்கைக்கான காரியாலயம், இங்கு வேறு யாரும் வரக் கூடாது, நாங்கள் மட்டும் தான் இங்கு அதிகாரம் செலுத்து வோம் என்று ஆர்ப்பரித்தவர்களின் ஆணவங்களையெல் லாம் இந்தத் தாக்குதல்கள் தவிடுபொடியாக்கியிருக்கின் றன. பள்ளிவாசல் தாக்குதலுக்கு உள்ளாகும் போது ஊரிலுள்ள அனைவரும் தான் ஓடோடி வந்தார்கள். பள்ளி வாசலைப் பாதுகாத்தார்கள். தாக்கப்பட்ட பள்ளிவாசலை மீளவும் கட்டியமைப்பதற்கு உதவி செய்கிறார்கள். இந்த வேளைகளில் எல்லாம் சமூகத்தில் இருக்கின்ற அனைத் துத் தரப்பினதும் பங்களிப்பைப் பெறுவதற்கு பள்ளிவாசல் கள் பின்னிற்பதில்லை. அனைவரையும் அரவணைத்துச் செல்வதற்கு சிறந்த உதாரணமாக பள்ளிவாசல்கள் இந்தச் சந்தர்ப்பங்களில் செயற்படுகின்றன.

இப்படி அமைதியாக இருக்கும் போது பிளவுபட்டு விட்டு அழிவு வரும் போது மட்டும் ஒன்றுபடுவது எமக்கே நியாய மாக இருக்கிறதா ? அழிவு தான் எங்களை ஒன்றுபடுத்த வேண்டுமா ? ஏன் அமைதியாக இருக்கக் கிடைத்த நாட்களில் நாங்கள் ஒன்றுபட்டிருக்கக் கூடாது ? அப்படி நாங்கள் இருந்திருந்தால் இன்று அழிவைச் சந்தித்திருக்க வேண்டிய தேவையே இருந்திருக்காது. நாங்கள் ஒன்றுபடுவதற்கு ஏன் அழிவு வரும் வரை காத்திருக்கிறோம் ?

இந்த இடத்தில் நாங்கள் உணர்வு பெற வேண்டும். மாடு கூட அடிவாங்கிய பின்னர் படிப்பினை பெறுகிறது. அந்தளவுக்கு நாங்கள் இறங்கத் தேவையில்லை. நல்ல நிர்வாகிகளுக்கு ஒரு சூடு போதுமானது. இனியாவது முஸ்லிம்கள் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் வகையில் பள்ளிவாசல் நிர்வாகங்களை அவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். தெல்தெனிய சம்பவத் தின் மூலகாரணம் நான்கு முஸ்லிம்கள் குடிபோதையில் தாக்குதல் நடத்தியமைதான். செய்தி நாடு முழுவதும் பரவியதும் முஸ்லிம்கள் குடிக்கிறார்களா என்ற கேள்வி பரவலாக ஆச்சரியம் மேலிட எழுப்பப்பட்டது. மது அருந் தும் இளைஞர்களை பள்ளிவாசல்கள் திருத்தத் தவறியமை தான் பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கும் என்றும் நம்மில் சிலர் பேசிக் கொள்கிறார்கள்.

எப்படிப் போனாலும் ஊர்களைப் பிரித்து வைத்திருந்த பள்ளிவாசல்கள் மீண்டும் ஊர்களைக் கட்டியெழுப்புவதற் கான மத்திய தலங்களாக இந்த அனர்த்தங்களின் பின்னர் மாறியிருக்கின்றன. ஊர்ப்பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கலந்துரையாடும் நிலையமாக, ஊருக்கான நிவாரணங்கள் வழங்கும், சேகரிக்கும் கஜானாவாக, ஊரின் தகவல்களைத் திரட்டும் தகவல் மையமாக தற்போது பள்ளிவாசல்கள் பல இடங்களில் இயங்குகின் றன. பள்ளிவாசல்களை மையப்படுத்திய செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. நெருக்கடிகள் தான் இஸ்லாமிய சமுதாயம் வளர்வதற்குப் போதுமான உரம் என்ற வகை யில், இந்த நெருக்கடியான சூழலை சமூகத்தின் ஆக்க பூர்வமான விடயங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முயற் சிக்க வேண்டும். மிகுந்த விலை கொடுத்து கிடைக்கப் பெற்றுள்ள இந்த வாய்ப்பைத் தவற விட்டுவிடக் கூடாது.

அடுத்த அனர்த்தத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து, நம்மைப் பலப்படுத்திக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஹிங்யர்களின் நிலங்களில் மியன்மார் இராணுவ முகாம்கள்



ரோஹிங்யர்களின் கிராமங்களில் மியன்மார் அரசாங்கம் இராணுவக் காப்பரண்களை அமைத்து வருகின்றது என சர்வதேச மன்னிப்புச் சபை மியன்மார் அரசாங்கத்தை குற்றம் சுமத்தியுள்ளது. ஆயுத வன்முறை ஊடாக தமது தாயக மண்ணிலிருந்து 7 இலட்சம் ரோஹிங்க முஸ்லிம்களை மியன்மார் அரசு வெளியேற்றியதிலிருந்து அங்கு இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றது.

மியன்மாரின் மேற்கு மாநிலமான ரெக்கைனில் ஆகக் குறைந்தது 3 இராணுவ முகாம்களை அரசாங்கம் நிர்மாணித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது செட்டலைட் புகைப்படங்களினூடாக நிறுவியுள்ளது. இது தொடர்பான அதன் அறிக்கை கடந்த திங்கள் (12) வெளியிடப்பட்டது.

கடந்த ஜனவரியிலிருந்து இந்த இராணுவ முகாம்கள் உருவாக்கப்பட்டு வருவதாக மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது. எஞ்சியிருந்த வீடுகள் இராணுவ புல்டோசர்களால் தரைமட்டமாக்கப்பட்டன. ரோஹிங்ய மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களில் ஈடுபட்ட அதே இராணுவமே தற்போது முகாம்களை அமைத்து வருவதாக மன்னிப்புச் சபையின் செயற்பாட்டாளர் திரானி ஹஸன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்டில் சுமார் 7 இலட்சம் ரோஹிங்ய முஸ்லிம்கள் மியன்மாரிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அரச இராணுவம் மேற்கொண்ட வன்முறைத் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கவே மக்கள் வெளியேறிச் சென்றனர். ரோஹிங்யர்களின் நிலங்களை இராணுவம் கபளீகரம் செய்வதும், புதிய பாதைகள், குடியிருப்புத் திட்டங்களை உருவாக்குவதும் ரோஹிங்யர்களின் எதிர்காலம் குறித்த பாரிய சந்தேகங்களை உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சர்வதேசப் பார்வை

# கிழக்கு கூதா முற்றுகையை உடன் நிறுத்துங்கள்



## சிரிய, ரஷ்ய அரசாங்கங்களுக்கு பாதுகாப்புச் சபை வேண்டுகோள்

டமஸ்கஸ் புறநகர்ப் பகுதியான கூத்தா மீது ரஷ்யா மற்றும் சிரிய அரச படையினர் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதால் கொல்லப்படும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, மக்கள் பாரிய நெருக்கடிக்கு உட்பட்டுள்ளனர். 3 வாரங்களில் 1200 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

2018 பெப்ரவரி 24 இல் ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானம் 2401 இன் படி ரஷ்யா மற்றும் சிரிய அரச படையினர் தமது தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். எனினும், மறுதலையாக வான்வழித் தாக்குதல்களுக்கு மேலதிகமாக தரைவழித் தாக்குதல்களையும் கூர்மைப்படுத்தியுள்ளதால் கூதாவிலிருந்து பொது மக்களை வெளியேற்றுவதும் உதவி நிவாரணங்களை விநியோகிப்பதும் பெரும் தடங்கலுக்கு உட்பட்டுள்ளது.

4 இலட்சம் மக்கள் வாழும் கூதாவுக்கான சர்வதேச நிவாரண உதவிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. உணவு மற்றும் மருத்துவ உதவிகள் அற்ற நிலையில், மக்கள் தாக்குதல்களில் சிக்குண்டுள்ளனர் என ஐ.நா எச்சரித்துள்ளது

பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ரஷ்யாவும் சிரியாவும் கவனத்திற் கொள்ளாமை தனக்கு ஏமாற்றமளிப்பதாக பொதுச் செயலாளர் கவலை வெளியிட்டுள்ளர்.

இதற்கிடையில் ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹெய்னி, பாதுகாப்புச் சபை தீர்மானத்தை ரஷ்யா அமுல்படுத்தத் தவறினால் அமெரிக்கா பதிலடி வழங்குவதற்குத் தயாராக உள்ளதென்று எச்சரித்துள்ளார். 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ''சர்வதேச சமூகம் செயல்படுவதற்கு தவறும் பட்சத்தில் அமெரிக்கா தனது சொந்த செயல்பாட்டை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்படும்'' என்று நிக்கி எச்சரித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ரஷ்யத் தூதுவர், சிரிய மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள அனைத்தையும் அகற்றும் உரிமை சிரிய அரசாங்கத்திற்கு உள்ளதென்று தெரிவித்தார். சிரிய அரசாங்கம் தொடர்ந்தும் சர்வதேச ரீதியில் தடுக்கப்பட்டுள்ள இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# அஸாதின் சிறைகளில் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள் மீது பாலியல் வல்லுறவு



சிரியாவில் அப்பாவிப் பெண்களை தடுப்புக் காவலில் வைத்துள்ள அரச படையினர், அவர்கள் மீது கூட்டுப் பாலியல் வல்லுறவை கட்டவிழ்த்து வருவதாக சிறையிலிருந்து பெரும் தொகை பணம் வழங்கி தம்மை விடுவித்துக் கொண்ட பெண்கள் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

நீண்டகாலமாக இப்பெண்கள் தமக்கு நேர்ந்த இக்கொடுமை குறித்து மௌனம் காத்து வந்தனர். தற்போது நிலைமை தீவிரமடைந்துள்ளதால் அவர்கள் மௌனம் கலைக்கத் தொடங்கியுள்ளனர்.

பிபிசியின் முன்னாள் செய்தியாளர் யுவோன் ரிட்லி, இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களை சந்தித்து அவர்களது வாக்குமூலங்களைப் பதிவுசெய்து வருகிறார். விரைவில் அவரது கள ஆய்வு ஆவணமாக வெளிவரவுள்ளது.

சிரியாவின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் சுன்னி சமூகத்தைச் சேர்ந்த இளம் யுவதிகளும் கணவனை இழந்த விதவைப் பெண்களும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறைக் காவலர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் பலமுறை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக தமது சோகக் கதைகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

அஸதின் சிறைச்சாலைகளில் தொடர்ந்தும் நூற்றுக் கணக்கான பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சவூதி அறேபியாவில் முதன் முறையாக நவ நாகரிக பெஷன் கண்காட்சி



அடுத்த மாதம் சவூதி அறேபியாவின் வரலாற்றில் முதன் முறையாக அறபு பெஷன் கண்காட்சியை நடாத்தப் போவதாக இளவரசி நூரா பின்த் பைஸல் தெரிவித்துள்ளார். இவரே அறப் பெஷன் கவுன்சிலின் தலைவி ஆவார்.

லண்டனில் பத்திரிகையாளர்களுக்கு மத்தியில் உரையாற்றிய நூரா பின்த், சவூதி அறேபியாவின் பொழுதுபோக்கு அதிகார சபையின் கடிதமொன்றை வாசித்தார். அழகுராணிகள் கலந்துகொள்ளும் 'பெஷன் ஷோ' ஏப்ரல் மாதத்தில் சவூதியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சவூதி அறேபியாவிலுள்ள திறமைசாலிகளுக்கு வாய்ப்பளிப்பதும் ஊக்குவிப்பதும் இதன் நோக்கம் என்று நூரா பின்த் பைஸல் தெரிவித்துள்ளார். இது ஆரம்பமே எனவும், எதிர்வரும் காலங்களில் அறபுலகத்தின் பெஷன் ஷோ விரிவான முறையில் நடாத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பெஷன் ஷோவை மதீனாவில் நடாத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு சவூதியின் டுவிட்டர் பாவனையாளர்கள் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். மிஷாரி என்ற இளைஞர் தனது டுவிட்டர் பக்கத்தில், ''மதுபானம் இங்கு சாதாரண குடிபானமாக மாறியுள்ளது. அதேபோன்று சூதாட்டம், ஆடல், பாடல், லஞ்ச ஊழல், அரை நிர்வாண நாகரிகம் அனைத்தும் மலிந்துவிட்டன. மக்கள் ஷைத்தானோடு வாழ்கின்றனர். இரு புனிதஸ்தலங்கள் அமைந்துள்ள மக்கா, மதீனா என்பவற்றிலும் இதுபோன்ற அநாகரிகமான பெஷன் ஷோக்கள் ஏற்பாடாகுவதை நாம் கண்டிக்கின்றோம். இறை தூதரின் நகரத்தில் பெஷன் கலாச்சாரம் ஊடுருவுவது ஆபத்தானது'' என மிஷாரி எச்சரித்துள்ளார்.

# துருக்கி தீமைகளின் அச்சில் உள்ளது

## சவூதி இளவரசர் முஹம்மத்

துருக்கி முக்கோணத் தீமையின் ஒரு பகுதி என சவூதி இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் தெரிவித்துள்ள கருத்தை எகிப்தின் அஷ்ஷுரூக் பத்திரிகை வெளியிட்டுள்ளது. முக்கோணத் தீமையின் ஏனைய பகுதிகளாக ஈரானும் தீவிரவாத இஸ்லாமிய இயக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

உஸ்மானியப் பேரரசு வீழ்ந்து சரியாக 100 ஆண்டுகள் கடந்த நிலையில், அதனை மீள நிலைநிறுத்துவதற்கு துருக்கி முனைவதாக சவூதி இளவரசர் குற்றம்சாட்டியுள்ளார். அர்துகானின் நீதிக்கும் அபிவிருத்திக்கு[illegible] இஸ்லாமிய அரசியலில் வேரூன்றியது. அது கட்டார் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகின்றது. இந்நிலமைகள் குறித்து சவூதி சந்தேகம் கொள்வதாக முஹம்மத் தெரிவித்தார்.



சென்ற முஹம்மதுக்கு யெமன் போரை நிறுத்திக் கொள்ளுமாறு அங்குள்ள வெளிநாட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். இளவரசரை மோசமாகக் காட்சிப்படுத்தி கண்டிக்கின்ற கோசங்களை அவர்கள் எழுப்பியதோடு, யெமனில் சவூதியின் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், முஹம்மத் பின் சல்மான் ஒரு போர்க் குற்றவாளி என்றும் கூக்குரலிட்டனர்.

கடும் பாதுகாப்புக்கு மத்தியிலும் ஒன்றுதிரண்ட வெளிநாட்டவர்கள், யெமனிலிருந்து சவூதி உடனடியாக வெளியேற வேண்டும் என்று கோஷமெழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• முஷாஹிக் அஹ்மத்

வா கொண்டாடுவோம்
இன்று நம்பிக்கையின் மரண விழா
மனித குலம் முற்றிலுமாய் புதைந்து போனது
கருணை இருண்ட மலைகளில் தஞ்சம் புகுந்தது
பகல் - இரவு என்ற தளைகளிலிருந்து
உன்னை நான் விடுவித்தேன்
விடியலின் தூய ஒளி உனக்கல்ல
உறக்கம் உனக்கு நிம்மதியைத் தராது
எனது கத்தி விடுதலையை நேசிக்கும்
கண்கள் அனைத்தையும் தோண்டிவிட்டது
கொத்தாய் மலர்ந்த மலர்களோடு வளையும்
கிளைகளை இனி எங்கும் காண முடியாது
வசந்தம் நெருப்பில் வெந்து நெளியும்
முத்துப் போல் மழை இனிப் பொழியாது
மேகங்களில் முள்ளும் சருகும் ததும்பி வழியும்



# இந்நூற்றாண்டின் கொடிய குற்றவாளிகள்

அதிகாரம் எவ்வளவு கொடுமையானது என்பதை நம்மைக் கடந்து செல்லும் ஒவ்வொரு கணமும் நிறுவிக் கொண்டே இருக்கின்றது. 21 ஆம் நூற்றாண்டில் மனித குலம் நாகரிகத்தின் உச்சியில் உட்கார்ந்து கொண்டிருப்பதாக எக்களிக்கின்றது. ஆனால், நம்மைச் சூழ அன்றாடம் நிகழ்பவை நாம் பண்பட்ட மனித குலத்தில்தான் வாழ்கின்றோமா என்ற ஐயத்தை எழுப்புகின்றன.

அன்றாடம் உலகில் மனிதர்கள் சக மனிதர்களால் வேட்டையாடப்படுகின்றனர். குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்று மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகின்றனர். இரத்த ஆறு பீறிட்டுப் பாய்கின்றது.

இந்த உலகத்தை அழிவில் சிக்க வைத்திருப்பது அருந்ததி ராய் சொல்வது போல் ஒரு சிலர்தான். "அவர்கள் சிலர் தான். நாம்தாம் அதிகம். ஆனால், நமது பலவீனத்தால் அவர்கள் பலமாக உள்ளனர். நாம் நினைத்தால் அவர்களைத் தோற்கடிக்கலாம். ஆனால், நாம் அசமந்தமாகவும் கவனிப்பற்றும் இருக்கின்றோம். அதனால் அவர்களின் ஆட்டம் தொடர்கின்றது."

இன்று உலகின் பல பாகங்களிலும் யுத்தம், கூட்டுப் படுகொலை, பாலியல் வல்லுறவு, நிலக் கொள்ளை என மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றங்கள் மலிந்து போயுள்ளன. இப்னுல் அஸீர் எனும் வரலாற்று ஆசிரியர் ஆதங்கப்பட்டது போல் இவற்றைக் காண்பதற்கு எனதுதாய் என்னைப் பெறாமல் இருந்திருக்க வேண்டுமே என்ற ஏக்கமே நம்மை ஆட்கொள்கின்றது.

மக்களின் மனச்சாட்சியை அவை உறுத்துவதாகவும் இல்லை என்பதுதான் எல்லாவற்றையும் விட துயரம் நிறைந்தது. சுயநலம் கொண்ட சில மனித விலங்குகளின் பேராசையும் அளவு கடந்த அதிகார மோகமும் உலகில் அன்றாடம் நடக்கும் அழிவுகளுக்குப் பின்னால் இருக்கின்றன. இதனால் அமைதி இழந்து, நிம்மதி இழந்து, அடிப்படை வசதிகள் இல்லாமல் அபலைகளாகவும் அகதிகளாகவும் தட்டழிந்து திரியும் மனிதர்களின் கண்ணீர்க் கதை தொடர்கின்றது. பலஸ்தீன், காஷ்மீர், மியன்மார், சிரியா, யெமன் என்று உலகம் முழுவதிலும் இந்தச் சோகம் தொடர்கின்றது.

உலக அகதிகளில் 60 வீதத்திற்கும் அதிகமானவர்கள் முஸ்லிம்கள் என்பதும், அவர்களுள் சுமார் அரைவாசிப் பேர் பெண்களும் குழந்தைகளும் என்பதும் மிகத் துயரம் நிறைந்த செய்திகள். ஊடகங்களைத் திறந்தால் ஆப்கானிலும், ஈராக்கிலும், யெமனிலும், இன்னும் பல நாடுகளிலும் கொல்லப்படும் முஸ்லிம்கள் பற்றிய செய்திகளே நம்மை அடைகின்றன.

இன்று மனிதப் படுகொலைகள் சர்வ சாதாரணமாகியுள்ளன. ஜனநாயக விரோத செயல்கள் நடைபெறுவதும் சகஜமாகியுள்ளது. மிகக் குறைந்த பெறுமதியுள்ள அல்லது பெறுமதியே இல்லாத குருதி முஸ்லிம்களுடையது என்பது போலவே உலகெங்கும் முஸ்லிம்களுக்கெதிரான கொலைவெறி தாண்டவமாடுகிறது.

சமகால உலகை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், பெரும்பாலான அழிவுகளுக்குப் பின்னால் ஏழு கொடிய குற்றவாளிகள் இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். இன்னும் ஆழத்தில் அமுங்கிப் போயுள்ள பேர்வழிகள் பலர் இருக்கக் கூடும். ஆனால், தசாப்தங்களாகவும் வருடங்களாகவும் நீடிக்கும் மனிதப் பேரவலங்களுக்குப் பின்னால் இவர்கள்தான் இருக்கின்றார்கள்.

இஸ்ரேலின் பெஞ்ஜமின் நெடன்யாஹு, அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப், மியன்மாரின் ஆங்சான் சூகி, ரஷ்யாவின் விளாடிமிர் புட்டின், இந்தியாவின் நரேந்திர மோடி, சிரியாவின் பஷ்ஷார் அல் அஸத், எகிப்தின் ஸீஸி என்று அந்தப் பட்டியல் நீள்கின்றது.



பெஞ்ஜமின் நெடன்யாஹு மரத்தளபாட வியாபாரி. லிகியுட் கட்சியின் மூலம் இஸ்ரேலின் பிரதமரானவர். இன்று மேற்குக்கரையும் காஸாவும் இவரது கர்ண கொடூரங்களால் நிலை குலைந்து போயுள்ளன. காஸா மீது இவரது இராணுவம் மூன்று முறை மேற்கொண்ட கொடூரத் தாக்குதல்களால் 2000 பலஸ்தீனர்கள் இறந்து போயினர். 12 ஆண்டுகளாக பொருளாதார ரீதியில் காஸா மீது விதிக்கப்பட்டுள்ள முற்றுகையினால் ஆயிரம் மக்கள் இறந்துள்ளனர். நோய், பட்டினி, வறுமை என்பனவே காரணங்களாகும்.



மத்திய தரைக்கடலில் இஸ்ரேலிய கடற்படை எகிப்திய காஸா எல்லை அடைப்பு, காஸா-இஸ்ரேல் எல்லைப்புறம் மதில்களால் முற்றுகை என 364 சதுர கி.மீ. நிலப் பரப்பில் ஒரு சிறையை பராமரித்து வருகிறார் இவர். நிலங்களை தினந் தோறும் கபளீகரம் செய்து, அதில் சட்ட விரோத யூதக் குடியேற்றங்களை உருவாக்கி வரும் நெடன்யாஹு, பலஸ்தீனக் குழந்தைகளின் எதிர்காலத்தை சூனியமாக்கி வருகின்றார். மனித இனத்துக்கு எதிரான போர்க் குற்றங்களுக்கு வாழ்நாள் சாதனை விருது பெறும் தகுதி நெடன்யாஹுக்கு உண்டு.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதிகளில் மிக வயதானவர். இந்த வயதுக் கோளாறுடன் வல்லரசை வழிநடாத்தும் புத்தி சுயாதீனத்தை இழந்துள்ளவர். உணர்ச்சிகரமான தீர்மானங்களால் உலகத்தை அழிவுப் பாதையில் நிறுத்தியுள்ளார். நெடன்யாஹுவின் அத்தனை அநியாயங்களுக்கும் ஆதரவளித்து வருபவர் இவர்.

ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக்கி, 200 கோடி முஸ்லிம்களின் கன்னத்தில் ஓங்கி அறைந்தவர். அரபு நாட்டு மன்னர்களின் அதீத விசுவாசி. மத்திய கிழக்கின் முகத்தையே மாற்றி வரும் ட்ரம்பின் அமெரிக்க ஆயுதங்கள் உலகிலுள்ள 70 நாடுகளின் சிவில் யுத்தங்களில் பயன்படுத்தப்படுகின்றன. போரை ஏற்றுமதி செய்வதே அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை. இந்த வல்லூறுதான் தலைசிறந்த சமாதானப் போராளி என்ற சங்கதியையும் உலகம் அறியுமா?

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆங்சான் சூகி ஒரு ஜனநாயகப் போராளி. அவரது இராணுவம் கடந்த ஆறு ஆண்டுகளாக மியன்மாரில் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்கொடுமைகள் பயங்கரமானவை. ரோஹிங்ய அப்பாவிக் குழந்தைகளை மியன்மார் இராணுவம் துப்பாக்கி முனையால் குத்தி விளையாடிய காட்சிகள் எமது நெஞ்சைப் பிழிந்தன. இதயத்தை உடைக்கும் ரோஹிங்யர்களின் கண்ணீர்க் கதைகள் இன்னும் பங்களாதேஷில் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

7 இலட்சம் முஸ்லிம்களை அரக்கானிலிருந்து உடுத்த உடையோடு விரட்டியடித்ததன் பின் அவர்களின் வாழ்விடங்களை தீக்குத் தீனியாக்கினார் சூகி. பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள் உடைத்துச் சரிக்கப்பட்டன. பெண்கள் கூட்டாகக் குதறப்பட்டனர். அநியாயத்தின் அத்தனை வடிவங்களும் அங்கு அரங்கேறி வருகின்றன.

இன்று சாம்பல் மேடாய் காட்சி தரும் அரக்கானில் இராணுவம் காப்பரண்களை அமைத்து சீனாவுக்கு எண்ணெய் தோண்டும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளது. எஞ்சியுள்ள முஸ்லிம்களை பட்டினியில் போட்டுக் கொல்கின்றது. 1000 ஆண்டுகளுக்கு மேல் முஸ்லிம்கள் வாழும் நிலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமில்லை என்று வாதிடுகின்றது. இத்தனை கர்ண கொடூரங்களுக்கும் பின்னால் இருப்பவர்தான் இந்நூற்றாண்டின் கொடிய குற்றவாளியான சூகி என்பதை நாம் மீள மீள நினைவுபடுத்துகின்றோம்.

வல்லரசுக் கனவில் மிதக்கும் நமது அயல்நாடான இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி துணைக் கண்டத்தில் நிகழும் பல்வேறு அநியாயங்களுக்கு பிதாமகன். பூலோக சொர்க்கம் என வர்ணிக்கப்படும் காஷ்மீரில் நாள் தோறும் இளைஞர்களைக் கைதுசெய்வதும் வீடுகளிலிருந்து ஆண்களை வெளியேற்றி விட்டு பெண்களை வேட்டையாடுவதும் அன்றாட நிகழ்வுகள்.

RSS பாசறையில் பயிற்றுவிக்கப்பட்ட மோடி ஒரு தீவிர இந்துத்துவவாதி. முஸ்லிம்களற்ற பாரத தேசத்தின் பக்தியாளன். மூன்று ஆண்டுகளில் 64 நாடுகளுக்கு சுற்றுப் பயணம். இதுவே அவரது அரசியல் சாதனை. மாடறுக்கத் தடை என்று முழங்கிய மோடியின் மோசடிகளை இந்தியர்கள் அறியர். மேற்கு நாடுகளின் திண்மக் கழிவை இந்தியாவில் கொட்டுவதற்கு அனுமதித்து அதற்கான லஞ்சத்தை சுருட்டிக் கொண்டே 'வந்தே மாதரம்' பாடும் மோடிக்கு முகங்கள் பல.

ரஷ்யாவின் செங்கரடி விளாடிமர் புட்டினையும் நாம் மறந்து விடக் கூடாது. இன்று கூதாவில் குழந்தைகள் எழுப்பும் அவலக் குரல்களும் பெண்களின் அபயக் குரல்களும் புட்டினை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றது. ஈரானின் சக பாடியான புட்டின், 10 வீதம் அலவி ஷீஆக்களை பிரதிபலிக்கும் அஸதின் அதிகார பீடத்தைத் தக்கவைப்பதற்கு முழுச் சிரியாவையும் அழித்து நாசமாக்கி வருகின்றார். அவரது போர் விமானங்களே சிரியாவின் மக்களையும் அவர்களின் வாழ்வாதாரங்களையும் சுக்கு நூறாக்கி வருகின்றன.

புட்டின் போர்வைக்குள் ஒழிந்திருக்கும் பஷ்ஷார் அல் அஸத், அறபுச் சர்வதிகாரிகளின் சங்கிலியில் ஒரு கன்னி. ரோபோ போன்று தோன்றும் அவரை இயக்குவது ஈரானிய முல்லாக்களும் லெபனானின் ஹிஸ்புல்ஷ் ஷைத்தான் கூட்டமும். அவர்கள் 55 ஆண்டுகளாக சிரியாவை ஆண்டு வருகின்றனர். 2012 இல் வெடித்த அறபு வசந்தத்தைத் தொடர்ந்து ஆறரை இலட்சம் சுன்னி முஸ்லிம்களைக் கொன்று குவித்துள்ளான் அஸத்.

நாட்டின் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் அகதிகளாய் வெளியேறிச் சென்றுள்ளனர். 55 இலட்சம் பேர் உலகிலுள்ள 34 நாடுகளில் அகதிகளாய் அலைக்கழிகின்றனர். அவர்களின் வாழிடங்களிலும் நிலங்களிலும் ஷீஆக்களைக் குடியேற்றி, சிரியாவை ஷீஆ நாடாக மாற்றுவதற்கு அஸதும் கொமைனிகளும் துடியாய் துடிக்கின்றனர்.

இறுதியாக நாம் எகிப்தின் பிர்அவ்ன்களில் ஒருவரான அப்துல் பத்தாஹ் ஸீஸியை சாதாரணமானவர் என்று தட்டிக் கழித்து விடக் கூடாது. முர்ஸியை சிறையில் அடைந்து விட்டு அரியணையில் ஏறிய அற்புதமான ஆட்சியாளர் இவர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி. இஸ்ரேலின் கோவேறு கழுதை.

எகிப்தின் சிறைகளே உலகில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படும் சிறைகள் என்கிறது மன்னிப்புச் சபை. ஓர் அரசுக்கு எதிராக சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது என்றால் அது ஸீஸியின் அரசுக்கெதிரானதுதான். அவரது சிறைகளில் சித்திரவதை, கொலை, துஷ்பிரயோகம் என அன்றாடம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. உண்பதற்கு மட்டுமே மக்கள் வாயைத் திறக்கலாம் என்றளவுக்கு கருத்துச் சுதந்திரமோ ஜனநாயகமோ மண்ணளவும் இல்லாத நாடாக எகிப்தை மாற்றி விட்டுள்ளார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிப்பவருக்கு உம்ரா செய்யும் பாக்கியத்தை பிரகடனம் செய்துள்ளார் ஸீஸி.

அதிகார பீடங்களில் உள்ள சுயநலமிகள் இந்த உலகத்தை எப்படியெல்லாம் அழித்து வருகிறார்கள் என்பதற்கு இந்த கொடிய சர்வதிகாரிகள்தான் தெளிந்த உதாரணங்கள். மில்லியன் கணக்கான மக்களின் சாபத்திற்கு உள்ளாகி வரும் இவர்கள்தான் இந்நூற்றாண்டின் மிகக் கொடிய குற்றவாளிகள். அவர்களைத் தண்டிப்பதற்கு இங்கு யார் இருக்கிறார் என்ற கேள்விக்கு முன்னால், அவர்கள் குறித்து எழுதுவதற்குத் துணிவுள்ள மனிதர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதுதான் முக்கியமான கேள்வி.

பெய்ஸ் அஹ்மத் பெய்ஸ் அவர்களின் கவிதையோடு இக்கட்டுரை தொடங்குவது போல், அவரது இன்னும் சில வரிகளோடு கட்டுரை நிறைவுபெறுகிறது.

அதனால் என்ன?
எழுதுகோலும் எழுதும் தாளும்
என்னிடமிருந்து பறிக்கப்படலாம்
ஆனால், அதனால் என்ன?
என் இதயத்தின் குருதியில்
எனது விரல்களைத் தோய்த்தெடுப்பேன்
அதனால் என்ன?
எனது உதடுகளை தைத்து மூடலாம்
ஆனால், அதனால் என்ன?
என்னைக் கட்டிய சங்கிலியின்
ஒவ்வொரு கன்னியும்
ஒவ்வொரு நாக்காக மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகன, தெல்தெனிய கலவரம்

## யார் அந்தக் கறுப்பாடு?

• ஹெட்டி ரம்ஸி

கதிர்காமத்தில் போக்குவரத்து பொலிஸாரின் கட்டளையை மீறி உந்துருளியில் பயணித்த நபருக்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கிச் சூட்டில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார். நீர்ப் பிரச்சினை தொடர்பில் தபுத்தேகம பகுதியில் விவசாயிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தினை பொலிஸார் தடியடி, கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்து தடுத்து நிறுத்தினார்கள். இதில் 50இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டார்கள். அம்பாறை, கண்டி முஸ்லிம்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனை முஸ்லிம்கள் கடந்த 06 ஆம் திகதி நடுவீதியில் டயர் கொளுத்தி, எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தாக்குதல் நடாத்தி விரட்டிய பொலிஸார் 30 பேரை கைதுசெய்தார்கள்.

ஆனால் அன்றைய தினம் இரவு கண்டி, மெனிக்ஹின்ன பிரதேசத்தில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவை மீறி சுமார் 400 பேர் முஸ்லிம்களது சொத்துக்களை தீயிட்டு அழித்தார்கள். இதன் போது பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடாத்தி கலகக்காரர்களை விரட்டியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. கருத்தடை மாத்திரை பிரச்சினையை மேலெழுப்பி சுமார் 40 பேர் அம்பாறை பள்ளிவாசலுக்கும், முஸ்லிம்களது கடைகளுக்கும் தாக்குதல் நடாத்தினார்கள். பல மணிநேரம் சென்றும் தாக்குதலை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தாக்குதலுடன் தொடர்புடைய பெரும்பாலான கலகக்காரர்கள் இன்னும் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்.

கதிர்காமத்திலும் தபுத்தேகமவிலும் பொலிஸார் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் அல்லாமல் அதிகாரத்தை அதியுச்சமாகப் பயன்படுத்தியுள்ளனர். சிறியதொரு தவறுக்காக வேண்டி கதிர்காமத்தில் ஓர் உயிர் பலியெடுக்கப்பட்டதுடன், தபுத்தேகமவில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொலிஸார் துரத்தித் துரத்தி அடித்தார்கள். அம்பாறையிலேயே பொலிஸார் அதியுச்ச அதிகாரத்தை பயன்படுத்தியிருக்க வேண்டும். அம்பாறையில் சிறு தவறொன்றோ, அமைதியான ஊர்வலமொன்றோ இடம்பெறவில்லை. அங்கு கலவரமொன்றே வெடித்தது.

இந்த இடத்திலேயே கண்ணீர்ப் புகையும், நீர்த்தாரைத் தாக்குதல்களும் அவசியப்படுகின்றன. எனினும் அமைதி ஊர்வலத்தை தடுக்க சிங்க வேடம் பூண்ட பொலிஸார் கலகக்காரர்களை தடுப்பதில் பின்நின்றார்கள். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட காலத்திற்கு சீனாவிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டில் இருந்த அரசாங்கம் அம்பாறையில் குற்றமிழைத்தவர்கள் தொடர்பில் பின்பற்றிய அணுகுமுறை கேள்விக்குறியாகவுள்ளது.

அம்பாறையில் இடம்பெற்ற சம்பவத்தை நோக்கும் போது அது திடீரென ஏற்பட்ட சம்பவமொன்றல்ல என்பது விளங்குகிறது. ஒரு தொலைபேசி அழைப்பில் சட்டத்தை கையில் எடுத்துச் செயற்படும் அளவுக்கு காடையர்களை வரவழைக்க பொதுமகனொருவனுக்கு முடிகிறதா? அப்படியொரு சம்பவம் இடம்பெற்றாலும் கூட சட்டம் அமுலானதில் ஏன் தாமதம் ஏற்பட்டது? இது போன்று திட்டமிடப்பட்ட மற்றுமொரு சம்பவம் தெல்தெனிய, திகன பிரதேசங்களில் அரங்கேற்றப்பட்டது. சிங்கள லொறிச் சாரதியொருவரை தாக்கியமையினால் அவர் உயிரிழந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இன வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது.

சாரதி உயிரிழந்த சம்பவம் கலவரத்திற்கு காரணம் என்றிருந்தால் ஒன்றில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பெப்ரவரி 22ஆம் திகதியே கலவரம் வெடித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சாரதி உயிரிழந்த மார்ச் 03 ஆம் திகதி கலவரம் ஏற்பட்டிருக்க வேண்டும். எனினும் மார்ச் 4 ஆம் திகதி இரவு 9 மணி வரையில் அப்பிரதேசம் முழுமையான அமைதி நிலையில் காணப்பட்டது.



மார்ச் 4 ஆம் திகதி இரவு பொதுபல சேனா அமைப்பின் தலைவர் ஞானசார மரண வீட்டிற்கு சென்றுள்ளார். அது வரையில் அமைதியாகக் காணப்பட்ட தெல்தெனிய பிரதேசம் ஒரு மணி நேரத்தில் பற்றியெரிய ஆரம்பித்தது. வன்முறையாளர்கள் முஸ்லிம்களின் உடைமைகளுக்கு தீவைத்தார்கள். தீக்கிரையான சொத்துக்களின் உரிமையாளர்களுக்கும் 22ஆம் திகதி தாக்குதலுக்கு பொறுப்புச் சொல்லக்கூடிய காடையர்களுக்குமிடையில் எவ்வித தொடர்புகளும் இல்லை.

ஆனால் வன்முறையாளர்களின் நோக்கம் சாரதியை தாக்கியவர்களுக்கு தண்டணை வழங்குவதல்ல, இந்தச் சம்பவத்தை மையமாக வைத்து மற்றொரு அளுத்கமயை உருவாக்குவது.



கடந்த 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி மாலை 6 மணி வரையிலான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற இனவாத வன்முறைகள் காரணமாக கண்டி பொலிஸ் பிராந்தியத்தில் மட்டும் (கண்டி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு) 423 கடைகள், வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் பள்ளிவாசல்கள் மீது நாடாளாவிய ரீதியில் இக்காலப் பகுதியில் 24 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 19 தாக்குதல்கள் கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்டது. இது தவிர, கண்டி பொலிஸ் பிராந்தியத்தில் 60 வாகனங்களும் ஏனைய பகுதியில் 5 வாகனங்களும் என 65 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களுள் 22 பேர் கண்டி பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்டவர்களாவர்.

இனவாத வன்முறைச் சம்பவங்கள் காரணமாக நாடளாவிய ரீதியில் 445 வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களும், 24 பள்ளிவாசல்களும், 65 வாகனங்களும் சேதமடைந்துள்ளதுடன், 28 பேர் காயமடைந்துள்ளதாகவும் இனவாத வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 280 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கடந்த 13 ஆம் திகதி தெரிவித்துள்ளார்.

வழக்கம் போல் சேத விபரங்களையும், கைதுசெய்யப்பட்டவர்களையும் தெரிவிப்பதற்கு முண்டியடித்துக் கொள்ளும் பொலிஸார் மக்கள் உடைமைகள் சேதப்படுத்தப்படுகின்ற போது ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்?

''உங்களுக்கு ஒரு மணிநேரம் தருகிறேன், அடித்து விட்டுச் செல்லுங்கள்'' என பொலிஸார் கண்டியில் வன்முறையாளர்களுக்கு இடமளித்திருப்பதாகவும், விஷேட அதிரடிப்படையினர் பிரதேசவாசிகளை துரத்திவிட்டு தாக்குதல் நடாத்த இடமளித்திருப்பதாகவும் மக்கள் தன்னிடம் தெரிவித்ததாக தபால் சேவை மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார். அமைச்சரின் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் முகமாக கடந்த 6ஆம் திகதி கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்த விடயங்களும் கவனிக்கத்தக்கது.

''கூட்டு எதிரணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபரிடம், 'வன்முறைகள் இடம்பெறக்கூடும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்' எனக் கூறியதற்கு பொலிஸ் மாஅதிபர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ''நாம் அந்த நிலைமைகளை கட்டுப்படுத்தியுள்ளோம், அது தொடர்பில் நாம் பார்த்துக் கொள்கிறோம்'' என்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

எனினும் தெல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த மௌலவியொருவர் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்து எம்மிடம் உள்ளது. இந்தக் கருத்தோடு தொடர்பான வீடியோ பதிவும் தற்பொழுது முகநூலில் உள்ளது. அவர், ''வீட்டிற்குள் இருங்கள், நாம் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறோம் என பொலிஸார் எமக்குக் கூறினார்கள். நாம் வீட்டிற்குள் இருக்கும் பொழுது மின்சாரத்தைத் துண்டித்தார்கள். மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த போது கூட்டமாக வந்தவர்கள் தீ வைத்துச் சென்றார்கள்'' என்று கூறியுள்ளார். இதன்படி இந்தச் சம்பவம் ஏலவே திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரிகிறது.''

அளுத்கமவில் பாதுகாப்புத் தரப்பினர் எப்படிச் செயற்பட்டார்களோ அதையும் விட படுகேவலமான முறையில் கண்டி வன்முறைகளின் போது பாதுகாப்புத் துறையினர் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் சொல்ல [illegible]

மட்ட அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுமே இதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

''திகன, தெல்தெனிய பிரதேசங்களில் கலகத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தங்களுக்கு கட்டளையிடும் அதிகாரியொருவர் இல்லை என்பதாக அவர்கள் கூறுகிறார்கள்'' என்று கடந்த தினம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரஊப் ஹக்கீம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

எனவே அம்பாறை, திகன, தெல்தெனிய பிரதேசங்களில் இடம்பெற்ற இன வன்முறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பாதுகாப்புத் துறைக்கு வழங்கப்படவில்லை என்பதும், இந்த இன வன்முறைகள் உயர்மட்டத்தின் உத்தரவுகளுக்கமையவே வழிநடத்தப்பட்டிருக்கிறது என்பதும் நிரூபணமாகிறது.

கடந்த வாரம் பாராளுமன்றில் உரையாற்றிய ஐ.தே.க. எம்.பி. முஜிபுர் ரஹ்மான் ''இந்த மோதலின் பின்னணியில் ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கிறது. இனவாதத்தை தோல்வியுறச் செய்வதற்கு எங்களது அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை. நான் இது தொடர்பாக பிரதமருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் பலமுறை முறைப்பாடு செய்தேன். எதுவும் நடக்கவில்லை. பிரபாகரனை கண்டுபிடிக்க முடிந்த எமது உளவுப் பிரிவினருக்கு இந்த இனவாதத்தை கிளப்பிய நபரை பல வருடங்களாக கைதுசெய்ய முடியவில்லை'' என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஐ.தே.க உபதலைவர்களுள் ஒருவரான ரவி கருணாநாயக்க, ''கண்டி கலவரத்துடன் தொடர்புடைய நபர்கள் அரசாங்கத்தில் உள்ளார்கள். எமது அரசாங்கத்திலும் ஆட்டுத் தோல் போர்த்திய ஓரிரு ஓநாய்கள் உள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு கறுப்பாடு இருக்கும். அது போன்றுதான் இந்த அரசாங்கத்திலும் உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க குறிப்பிடுகின்ற அரசாங்கத்திலுள்ள கறுப்பாடு யார்? பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேச நானாயக்கார தெரிவித்திருக்கும் கருத்தினையும் இதனோடு நோக்க வேண்டும். ''கண்டி, திகன, தெல்தெனிய பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னணியில் மகாசொன் பலகாயவுக்கு கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அமைச்சரொருவர் ஆலோசனை வழங்கியுள்ளார். இது தொடர்பாக அரச உளவுப் பிரிவு மூலம் தனக்குத் தகவல் கிடைத்துள்ளது. முழுமையான தகவல் கிடைத்ததும் குறிப்பிட்ட அமைச்சரின் பெயரை வெளியிடுவேன். தற்பொழுது கைதுசெய்யப்பட்டுள்ள மகாசொன் பலகாயவின் பிரதானி அமித் வீரசிங்கவுக்கு குறிப்பிட்ட அமைச்சர் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். மகாசொன் பலகாய என்ற பெயரை இந்த இயக்கத்துக்கு வழங்கியதும் இந்த அமைச்சராவார்.''

ஆளும் கட்சியை சேர்ந்த அமைச்சர்களும் கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களும் அம்பாறை, கண்டி வன்முறைகளின் சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இலங்கையின் பாதுகாப்பு தரப்பையே விரல் நுனியில் வைத்து ஆட்டும் அளவுக்கு சக்தி படைத்த இந்தச் சம்பவங்களின் பின்னாலுள்ள மர்ம நபர் யார்? வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச அண்மையில் தெரிவித்த கருத்துக்களை சற்று நோக்கி விட்டு விடயத்திற்கு வருவோம்.

''நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! இந்த ஒவ்வொரு சம்பவங்களின் பின்னாலும் சிறந்த மூளைசாலிகள் கூட்டமொன்று உள்ளது. இவர்களின் நோக்கம் நாட்டில் நெருப்பை மூட்டியாவது இவர்களது அரசியல் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதாகும். இவர்களது நாட்டுப் பற்று ஊடகங்களுக்கு முன்னால் மாத்திரமே உள்ளது. நான் அவர்களை காட்போட் பௌத்தர்களாகவே காண்கிறேன்.''

''அமெரிக்காவில் வழங்கப்படும் சர்வதேச ஒஸ்கார் திரைப்பட விருது இவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். ஊடகங்களுக்கு முன்னால் தோன்றி உரையாற்றும் போது ஒன்றும் அறியாத மிகவும் தூய்மையானவர்கள் போன்று நடித்து நாட்டை பாதுகாக்க வேண்டும், நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும், நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனக் கூறிவிட்டு திரும்பி வீட்டிற்குச் சென்று நாட்டில் தீயை மூட்டத் திட்டமிடுகிறார்கள்.''

மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா ''ஜனாதி பதிப் பதவி இல்லாமல் போனதால் பிரதமர் பதவியையாவது பெற்றுவிட வேண்டும் என்று துடிப்பவர் தான் கண்டி கலவரத்தின் பின்னணியில் உள்ளார். அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாவதற்கு எதிர்பார்த்திருப்பவர்களும், பிரதமராவதற்கு எதிர்பார்த்திருப்பவர்களும் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்திருப்பவர்களுமே இதற்கு முழுப் பொறுப்பு'' என்றும் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் என்ன நடக்கப் போகின்றது என்று ஒரு வாரத்துக்கு முன்பே புலனாய்வுப் பிரிவால் அறிந்துகொள்ள முடியும் என்றிருந்தால், ஆர்ப்பாட்டம் நடத்தப் போனால் நீதிமன்றம் சென்று அதை முன்கூட்டியே நிறுத்துவதற்கு அரசாங்கத்தால் முடிகிறது என்றால், ஏன் இவ்வாறான கலவரங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை? இதற்கான பதிலை நாங்கள் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை.

உயர் மட்டத்தின் கட்டளைப் பிரகாரமே சகல விடயங்களும் இடம்பெற்றிருக்கிறது. இனிமேல் பொலிஸார் கீழ் மட்டத்திலுள்ள நெத்தலிகளைக் கைது செய்து நாட்டிற்கு பூச்சாண்டி காட்டுவதில் அர்த்தமில்லை. சுறாக்களை பிடித்தே விசாரணை செய்ய வேண்டும். இலங்கை அரசு ஒருபோதும் இந்த நடவடிக்கையைச் செய்யாது என்பது உறுதி.

கடந்த 06ஆம் திகதி விமல் வீரவன்ச பாராளுமன்றில் ஆற்றிய உரையில்,

''தேர்லின் பின்னர் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நிலையில், பிரதமருக்கு எதிராக உள்ளக மட்டத்தில் புரட்சியொன்று உருப்பெற்றிருக்கும் நிலையில் இந்தச் சகல தலையங்கங்களையும் மூடி மறைக்கும் முகமாக நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் புதியதொரு தலையங்கத்தை இன்று உருவாக்கியுள்ளார்கள். இந்தப் பாதிப்பான நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டுமென்றே தவறியுள்ளது.

இந்நாட்டிகளில் ITN அலைவரிசையில் ஒளிபரப்பப்படுகின்ற 'கூம்பியோ' என்ற நாடகத்தில் 'ஜெஹான்' என்னும் சூத்திரதாரி உள்ளார். அதுபோன்றே அம்பாறை, கண்டி, அசம்பாவிதங்களின் பின்னாலும் ஜெஹான் போன்றொரு சூத்திரதாரி காணப்படுகின்றார். அவர் கொழும்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவான, தேசிய ஆடை அணிகின்ற, உயரமான மெலிந்த ஒருவர். அவரே இந்தத் திட்டமிடப்பட்ட இன வன்முறையின் பின்னணியில் உள்ளார். அம்பாறையில் உள்ள ஹோட்டலுக்குச் சென்று இந்தச் சம்பவத்துடன் தொடர்பான முதலாவது தீக்குச்சியை பற்ற வைத்தவர் யார் என்பது தொடர்பில் இந்த அரசாங்கம் தேடிப் பார்த்ததா? என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

விமல் வீரவன்சவின் கேள்விக்கான பதிலையே நாட்டின் பெரும்பான்மை மக்களும் சர்வதேச முஸ்லிம் சமூகமும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தளத்தில் செயற்படுவதற்கான 25 வருட இக்ரஃ முன்மாதிரி

• இஸ்பஹான் சாப்தீன்

இக்ரஃ இஸ்லாமிய சங்கம் (Iqra Islamic Committee) என்பது குவைத் நாட்டில் இலங்கை முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதானமான ஒரு அமைப்பாகும். தமிழ் பேசக் கூடிய முஸ்லிம்களுக்காக வேண்டி 1992 ஆம் ஆண்டு இந்த சங்கம் குவைத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

மார்க்க உணர்வுள்ள சில சகோதரர்கள் ஒன்று சேர்ந்து அப்போது இந்தச் சங்கத்தைத் தொடங்கினார்கள். குவைத் City யில் இருந்த சில சகோதரர்களை வைத்து ஆரம்பமாக ஒரு வகுப்பு (Class) வடிவத்தில் செயற்பாடுகள் துவங்கி வைக்கப்பட்டன. 1992 ஆம் ஆண்டு நடுப்பகுதியில், குவைத்தில் உள்ள IPC (Islam Presentation Committee) என்ற நிறுவனத்துடன் இணைந்து அவர்களின் ஆதரவுடன் இந்த IIC இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கான பணியை விஸ்தரித்தது.

IPC முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் புதிதாக இஸ்லாத்திற்கு மீள்திரும்பியோருக்கும் பணிபுரிந்து கொண்டிருக்கும் நிறுவனம். அந்தவகையில், இலங்கை முஸ்லிம்களுக்காக வேண்டி தொண்டர்களாகப் பணிபுரியும் பலரை IIC இணைத்துக் கொண்டது. அந்த சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கென்று எந்த வித தஃவா செயற்பாடுகளும் இருக்கவில்லை. அதனால் தமிழ்நாட்டு முஸ்லிம்களும் இதனுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இலங்கையிலிருந்து அஷ்ஷெய்க் M.R.M. முனாஸ் போன்றவர்கள் குவைத்துக்கு வந்து இந்தச் செயற்பாட்டை நிறுவனமயப்படுத்தினார்கள். இதன் பின்னர் தான் இக்ரஃ இஸ்லாமிய சங்கம் என்ற பெயரில் ஒரு நிறுவனமாக இது இயங்க ஆரம்பித்தது. பிறகு இந்தச் சங்கம் தமிழ்மொழியில் குத்பா ஓதுவதற்கான அனுமதியை குவைத் அரசிடமிருந்து பெற்றுக் கொண்டது. குவைத் அவ்காப் அமைச்சின் அனுசரணையின் கீழ் தமிழில் குத்பா ஓதுவதற்கான பள்ளிவாயலும் கிடைக்கப் பெற்றது. அந்தப் பள்ளிவாயலில் தொடர்ந்தும் வெள்ளிக் கிழமைகளில் குத்பா பிரசங்கமும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் பரவலாகச் செய்யப்பட்டன.

இந்தச் சங்கத்தின் பிரதானமான நோக்கங்கங்கள்

1. இஸ்லாமிய பிரச்சாரப் பணிக்கு உழைத்தல்.
2. சமூக சேவைகளை மேற்கொள்ளல்
3. குவைத்திலுள்ள சமூக சேவை நிறுவனங்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தல்

குவைத் போன்ற ஒரு வெளிநாட்டில் வேலை செய்வதனால் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை சாராமல், குறிப்பிட்ட ஒரு ஜமாத்தை சாராமல் பணி செய்ய வேண்டிய ஒரு தேவையுள்ளது. எனவே, நடுநிலைச் சிந்தனையை உள்வாங்கிய சகோதரர்கள் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட இயக்க, ஜமாஅத் வட்டத்துக்குள் அல்லாமல் பொதுவான ஒரு தளத்தில் செயற்படுகிறார்கள்.

அதேநேரம், இந்நிறுவனம் குவைத்தில் அவ்காப் அமைச்சின் கீழ் முராகபதுல் ஜாலியாத் பிரிவு (வெளிநாட்டுப் பணியாட்களை கண்காணிக்கும் பிரிவு) வெள்ளிக் கிழமைகளில் அந்தந்த மொழிகளைப் பயன்படுத்தி குத்பா ஓதுவதற்காக வேண்டி பள்ளிவாயல்களை வழங்கியுள்ளது. அதேநேரம் தகுதியான கதீப்மார்களுக்கு குவைத்தின் ஒழுங்கு வரையறைகளுக்கு ஏற்ப குத்பா ஓதுவதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளது.

அந்தவகையில் தற்போது இலங்கை முஸ்லிம்களுக்காக இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் கீழ் நான்கு பள்ளிவாயல்கள் உள்ளன. அந்த நான்கு பள்ளிவாயல்களுக்கும் என கதீப்மார்களும் உள்ளனர்.

இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் நிருவாக கட்டமைப்பைப் பொறுத்தவரையில் அதில் பல கல்லூரிகளில் இருந்து வெளியாகியவர்கள், துறைசார்ந்தவர்கள் எனப் பலரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இலங்கை இஸ்லாமிய கலாசாலைகளில் இருந்து வெளியாகியவர்கள், குவைத் பல்கலைக்கழகத்தில் கற்றவர்கள் எனப் பலரும் உள்ளனர். பொதுத்தளத்தில் பணிபுரிவதற்கு இந்த நிர்வாக முறை சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. இக்ரஃவின் தனித்துவமாக இது பேணப்படுகிறது.

இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் வருகை தரும் உலமாக்கள் அவர்கள் எந்த அமைப்பு சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உரையாற்ற இடம் வழங்கப்படுகிறது. தப்லீஃ ஜமாத், ஜமாஅத்தே இஸ்லாமி, ஜமாஅதுஸ் ஸலாமா என்று எந்த அமைப்பைச் சேர்ந்த ஆலிம்களைக் கொண்டும் சமூகம் பயன்பெறக் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறது.

இந்த வகையில் வளைகுடாவில் உள்ள எந்த ஒரு நாடும் வழங்காத சலுகையை குவைத் நாடு வழங்கியுள்ளது. தனித்துவமாக இயங்கக் கூடிய அனுமதியை அது வழங்கியுள்ளது. இதனால், 2012 ஆம் ஆண்டு இக்ரஃவின் 20 ஆவது நிறைவாண்டுக்கென ஏற்பாடு செயயப்பட்ட விழாவில் குவைத் மக்களுக்கும் அரசுக்கும் நன்றி செலுத்துவதே நோக்காக இருந்தது. அவ்விழாவுக்கு இலங்கையில் இருந்து அஷ்ஷெய்க் ரவுப் ஸெய்ன், அப்போதைய நீதி அமைச்சராக இருந்த ரவுப் ஹகீம் போன்றவர்களை குவைத் அவ்காப் அனுசரனையுடன் வரவழைத்து அவ் விழாவை இக்ரஃ கொண்டாடியது.

2017 ஆம் ஆண்டுடன் இக்ரஃ இஸ்லாமிய சங்கத்திற்கு 25 வருடங்கள் பூர்த்தியாகிறது. அந்தவகையில் அவ்காப் அமைச்சுடன் இணைந்து அவர்களது அனுசரனையுடன் 2018 மார்ச் மாதம் 23 ஆம் திகதி 25ஆம் ஆண்டு நிறைவு விழாவை 'சுக்ரன் அஹ்லல் குவைத்' (குவைத் மக்களுக்கு நன்றி செலுத்துதல்) என்ற தொனிப்பொருளில் இக்ரஃ ஏற்பாடு செய்துள்ளது.



எம்.ஐ.எம் மன்ஸூர், தலைவர், குவைத் - இக்ரஃ இஸ்லாமிய சங்கம்

இந் நிகழ்வு குவைத்தில் உள்ள மஸ்ஜிதுல் கபீரில் (Grand Mosque) நடைபெறவுள்ளது. அதற்கான சிறப்பு விருந்தினர்களாக ஷேக் யூசுப் முப்தி, இலங்கை முஸ்லிம் கலாச்சார விவகார அமைச்சர் அப்துல் ஹலீம், முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அப்துல் மலிக், அமைச்சரின் ஆலோசகர் அஷ்ஷெய்க் முயினுத்தீன் மற்றும் இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் முன்னாள் தலைவர் அஷ்ஷெய்க் முனாஸ் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்விழா மூன்று முக்கிய நிகழ்வுகளை உள்ளடக் கியதாக நடைபெறவுள்ளது.

1. இலங்கை முஸ்லிம்களின் கலாசாரத்தை வாழ்வொழுங்கை பிரதிபலிக்கக் கூடிய வகையில் ஒருகண்காட்சி.

2. இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் 25 வருட நிறைவு நினைவிதழ் வெளியீடு. இதற்கென இலங்கையில் உள்ள பல்வேறு அமைப்புகள், ஜமாஅத்துகள் தமது வாழ்த்துச் செய்திகளை வழங்கியிருக்கிறார்கள்.

3. குவைத் அவ்காப் அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும் விழா நிகழ்ச்சிகள்.

இக்ரஃ வின் முன்னாள் தலைவராக அஷ்ஷெய்க் முனாஸ் அவர்கள் இருந்துள்ளார்கள். தற்போது அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் மன்ஸுர் அவர்கள் தலைவராக உள்ளார். புதிய நிருவாகத்தில் 13 பேர் உள்ளனர்.

25 வருட நிறைவைக் கொண்டாடவுள்ள குவைத் - இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் தற்போதைய தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் மன்ஸுர் அவர்களை மீள்பார்வை சந்தித்த போது, வெளிநாடுகளில் இருக்கக் கூடிய இலங்கை வாழ் முஸ்லிம்கள் பொதுவாக தமக்கிடையிலான பேதங்களை மறந்து அதாவது மத்ஹப், இயக்கம், ஜமாஅத் என்ற பேதங்களை மறந்து அவர்கள் ஒரு குடைக்குக் கீழால் உழைக்க வேண்டிய பாரிய தேவையுள்ளது. அந்தத் தேவையை நிறைவேற்றுவதற்கு ஒரு முன்மாதிரி அமைப்பாக நாம் இக்ரஃவை அறிமுகப் படுத்துகிறோம்.

பொதுவாக இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் குவைத்துக்கு வருகின்ற எல்லா அறிஞர்களும் இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தை ஒரு முன்மாதிரியாகப் பார்க்கிறார்கள். அது சம்பந்தமாக அவர்கள் சொல்லியும் இருக்கிறார்கள். எனவே, இன்னும் இப்படியான இந்த வேலைத்திட்டத்தை வளர்க்க விரும்புகிறோம். நாம் எமது நிருவாக சபையைக் கூட நவீன இஸ்லாமிய சிந்தனையை நடுநிலை சிந்தனையைக் கொண்டவர்களைக் கொண்டே உருவாக்கியுள்ளோம்.

இப்படியான தேவை எல்லா மட்டங்களிலும் உள்ளது. பேதங்களை மறந்து ஒரு பொதுத்தளத்தை உருவாக்கி பணிபுரிவதில் நாம் ஒரு முன்மாதிரியாக செயற்படுகிறோம். இதற்கு உலமாக்கள் சாட்சியாக உள்ளனர்' என்று இக்ரஃ வின் 25 வருட நிறைவு தின விழாவுக்கான தனது செய்தியை அவர் முன்வைத்தார்.

# நிச்சயமான பேரழிவும், அநிச்சயமான தீர்வுகளும்

• ஸலாஹுதீன்

அனர்த்தங்கள் அனந்தமாய் நடக்கும் நிலைக்கு நாடு மாறியிருக்கிறது. இயற்கை அனர்த்தங்கள் முன்னொரு பொழுதுமில்லாத அளவுக்கு அதிகரித்திருக்கின்றன. இது போதாதென்று மனித நடத்தைகளினாலான அனர்த்தங்களும் மறுபுறத்தில் அதிகரித்திருக்கின்றன.

2014 ஆம் ஆண்டின் தரவுகளின் படி இலங்கையின் மரணத்துக்கான காரணங்களில் வீதி விபத்துக்களின் மரணம் 2773 மரணங்களுடன் 11 ஆவது இடத்தில் இருக்கிறது. இந்த நிலைக்கு அப்பால் தற்போது இனவாத வன்முறைகள் மனித நடத்தைகளாலான அனர்த்தங்களில் முன்னணி வகிக்கும் நிலை தோன்றியிருக்கிறது. இந்த இனவாத வன்முறைகள் முஸ்லிம் சமூகத்துக்கெதிராகவே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

அளுத்கம, கிந்தோட்ட, அம்பாறை என தனித்தனி ஊர்களாகத் தொடங்கி தற்போது கண்டி மாவட்டமாக இந்த இனவாத வன்முறைகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு தாக்குதல்களுக்கு இடையிலான இடைவெளி குறைந்து கொண்டு வருவது அவதானிக்கப்பட்டாலும் இவற்றுக்கான நிரந்தரத் தீர்வு சம்பந்தமாக முஸ்லிம் சமூகம் இதுவரை எந்த வரைபடத்தையும் வரையவில்லை. 2014 முதல் நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக அடி வாங்குகின்ற ஒரு சமூகம் இதிலிருந்து மீண்டு வர முயற்சிக்காமல் தொடர்ந்தும் அடி வாங்கிக் கொண்டேயிருப்பதைப் பற்றியே சிந்தித்து வருவது நாகரிகமானதொரு சமூகத்துக்குப் பொருத்தமானதல்ல.

பொதுவாக இன வன்முறைகளின் போதான முஸ்லிம் சமூகத்தின் எதிர்வினை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாகவும், எதிரிகளுக்கு எதிராக துஆ கேட்பதாகவுமே அமைகிறது. இம்முறை ஒருபடி மேலே சென்று ஊர்களிலே ஹிராஸா (கண்விழித்துக் காவல்) இருப்பதற்கு சமூகம் முன்வந்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு தாக்குதலின் போதும் தாக்குதலுக்கு ஏற்ற



வகையில் ஒவ்வொரு புதிய நடவடிக்கை சேர்க்கப்படுவதுதான் தாக்குதலை எதிர் கொள்வதற்கான வழியாக அமையுமென்றிருந்தால் நிரந்தரத் தீர்வை அடைவதற்குள் முஸ்லிம் சமூகம் எஞ்சியிருக்கும் இன்னும் பல ஊர்களையோ மாவட்டங்களையோ பலி கொடுக்க வேண்டியிருக்கும்.

அளுத்கம வன்முறைகளின் போதான இழப்பீடு 60 கோடியாக மதிப்பிடப்பட்டிருந்தது. இவ்வருட ஆரம்பத்தில் அரசாங்கம் இவர்களுக்கான ஒரு தொகை நஷ்டஈட்டை அறிவிக்கும் வரையான மூன்றரை வருட காலப்பகுதியில் முஸ்லிம் சமூகம் இந்த இழப்புகளில் பெரும்பாலானவற்றை தன்னாலேயே ஈடு செய்திருந்தது. வன்முறையாளர்களோ வன்முறையைப் பாதுகாத்தவர்களோ இதனால் எந்த வலியையும் உணரவில்லை. மீண்டும் இதே மாதிரியான சுழியிலேயே முஸ்லிம் சமூகம் சுற்றிச் சுழலுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கென நாடு முழுவதும் நிதி சேகரிக்கப்படுகின்றன அல்லது நிதி வழங்கத் தயாரான [illegible] வர்களது நிதியைப் பெறுவதற்கென குறித்த சந்தர்ப்பத்தில் ஒரு நிறுவனம் முன்னகர்த்தப்பட்டு வங்கிக் கணக்குகளும் திறக்கப்படுகின்றன. இதனூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டாலும் எந்த வித கணக்கு வழக்குகளும் இன்றி குறித்த செயற் திட்டம் காலப்போக்கில் மறைந்து போகிறது. மீண்டும் அடுத்த அனர்த்த மழையில் முளைக்கிறது.

இது தொடர்பில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் தம்பர அமில ஹிமி கூறுகையில், முஸ்லிம் சமூகம் வன்முறையால் இழந்தவைகளைத் தமக்குள்ளேயே நிவர்த்தி செய்து கொள்கின்றனர். இதனை விடுத்து, தாமதமாகியேனும் அரசிடமிருந்து நஷ்டஈட்டைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். வன்முறையால் பாதிக்கப்பட்ட சமூகமே மீண்டும் அதனது சுமையையும் சுமக்கின்ற பரிதாப நிலையையே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆனால் முஸ்லிம் சமூகத்திலிருந்து முன்வருகின்ற சமூக நிறுவனங்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்திலிருந்தே நிதியைத் திரட்டி விநியோகிக்கும் பணியையே செய்து வருகின்றன.

நாட்டில் முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற எந்தப் பிரச்சினைகளில் தலையிடாவிட்டாலும் அனர்த்த நிவாரணம் எனும் போது ஓடிவந்து முன்னே நிற்கின்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமூகத்தை இவ்வாறானதொரு நிலைக்கே தூண்டி வருகிறது. வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணிகள் அபகரிக்கப்படும் போது, மீள் குடியேறுகின்ற மக்களின் காணிப் பிரச்சினைகளின் போது, மாகாண, வட்டார எல்லைப் பிரிப்பின் போதெல்லாம் தனது கிளைகளில் அலுவலகம் அமைக்காத உலமா சபை, நிவாரணப் பணி என்று வருகின்ற போது மட்டும் வங்கிக் கணக்கொன்றைத் திறந்து நிதி சேகரிப்பில் ஈடுபடுகிறது.

கண்டி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட கும்புக்கந்துறையில் பள்ளிவாசலில் உரையாற்றிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் ரிஸ்வி முப்தி அவர்கள், அளுத்கம அனர்த்தத்தின் இழப்புகளுக்கான நஷ்டஈடு கிடைப்பதற்கே மூன்று வருடங்களுக்கு மேல் சென்றுள்ளது, அதனால் அரசாங்கத்தின் நஷ்டஈடுகளை நம்பிக் கொண்டிருக்க வேண்டாம் என்று வேறு தெரிவித்துள்ளார்.

இதைவிட, கடந்த அனர்த்தத்துக்குப் பிறகு இன்னொரு அனர்த்தம் இடம் பெறாமல் அரசாங்க மட்டத்தில் நடவடிக்கை எடுப்பது பற்றியோ அல்லது குறைந்த பட்சமாக கடந்த அனர்த்தத்தை விட இந்த அனர்த்தத்துக்கான நிவாரணத்தை விரைவாகப் பெற்றுத் தருவது பற்றியோ பேசுவதைத் தான் சமூகம் தனது தலைமைகளிடம் இருந்து எதிர்பார்க்கிறது. இதுவன்றி, சமூகத்திடமிருந்து நிதியைத் திரட்டி அரசாங்கத்தின் பாரத்தைக் குறைக்கும் வகையில் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதையோ, ஆசிரியர்களுக்கான குவாட்டர்ஸ் மற்றும் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதையோ, மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு நிதி திரட்டிக் கொடுப்பதையோ அல்ல.

கண்டி அனர்த்தத்தின் பின்னர் களத்தில் செயற்படுகின்ற ஜம்மியதுல் உலமாவின் உதவி மேசைகள் களத்துக்குத் தேவையான உடனடி முன்னெடுப்புக்களை பாராட்டத்தக்க வகையில் செய்து வருகின்றன. ஆனாலும் தேசிய ரீதியில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய வெறுப்புணர்வுச் செயற்பாடுகளின் போது வெளிப்பட்டது போல, ஜம்மியதுல் உலமாவின் இயலுமைக்கு அப்பாலுள்ள பகுதிகளையும் கவனிக்கக் கூடியதொரு பொறிமுறை இருப்பது அவசியம் என்பதை தற்போது உணர முடிகிறது.


இதேபோலதொரு சூழலில் தான் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் தேசிய ஷூறா சபை தோற்றம் பெற்றது. ஆரம்பத்திலிருந்து அது ஜம்மியதுல் உலமாவின் தலைமை வகிக்கும் பணியை பூரணப்படுத்தும் வகையில் சமூகத்துக்குள்ளால் இன்றுவரை செய்து வருகிறது. தேசிய ரீதியில எப்படியானதொரு சூழல் தேசிய ஷூறா சபையை உருவாக்கியதோ அதேபோன்ற அல்லது அதைவிடவும் தீவிரமானதொரு சூழல் பிராந்திய மட்டங்களில் தற்போது உருவாகியிருக்கின்றது. எனவே தேசிய ஷூறா சபையும் பிராந்திய மட்டங்களில் தனது பணியை விஸ்தரித்து, களத்திலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற உலமா சபையின் பணிகளை களத்திலும் பூரணப்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டிய தேவை வந்திருக்கிறது.

இது சமூகம் எதிர்நோக்கியிருக்கின்ற வாழ்வா சாவா போராட்டம். இந்த வகையில் யாராலுமே

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (05)



## கூட்டு இஜ்திஹாதின் வரலாறு

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

### இரண்டாவது கட்டம்: தனிநபர் இஜ்திஹாத் பரவிய காலம்

ஸஹாபாக்கள், அவர்களைத் தொடர்ந்து வந்த ஸலபுகளின் காலத்தின் பின்னர் கூட்டு இஜ்திஹாத் இடம்பெற்றதாக போதிய அறிவிப்புகள் கிடையாது. தனிநபர் இஜ்திஹாத் மிகைத்திருந்த காலமாக இக்காலப்பிரிவு அடையாளப் படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு முஜ்தஹிதும் தனித் தனியாக இஜ்திஹாத் பணியில் ஈடுபட்டு வந்தனர். சட்ட அறிஞர்கள் ஒரு இடத்தில் இல்லாமல் பல இடங்களில் சிதறி வாழ்ந்தமையினால் அவர்களை ஒன்று சேர்ப்பதில் காணப்பட்ட சிரமங்களும் இப்படியான ஒரு நிலை தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என கலாநிதி முஹம்மத் ஸலாம் மத்கூர் கருதுகின்றார்.

இவ்வாறான நிலைமை இருந்தமைக்கு இன்னும் சில காரணங்கள் இருந்ததாக சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

கூட்டு இஜ்திஹாத் சபைகளில் ஆட்சியாளர்களின் ஆதிக்கம் ஏற்படலாம் என்ற அச்சம் காணப்பட்டமை. கிலாபா ராஷிதாவின் பின்னர் மன்னராட்சி ஒழுங்கு ஏற்பட்டது. இதனால் மன்னர்களின் அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப உலமாக்களின் சபைகள் ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்படலாம் என்று அறிஞர்கள் அஞ்சினார்கள். இப்படியான ஆட்சியாளர்களின் செயல்களுக்கு உடந்தையாக சில உலமாக்களும் இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதனால் இத்தகைய சந்தர்ப்பம் தோன்றாமல் இருக்க அறிஞர்கள் தமது இஜ்திஹாத் செயற்பாடுகளை நிறுவன வடிவில் இல்லாது தனிநபர்களாக செய்தார்கள்.

அதேபோன்று அறிஞர்கள் கூட்டாக இணையும் போது அது ஒரு சக்தியாக மாறலாம். இது தமது ஆட்சியதிகாரத்திற்கு சவாலாக அமையலாம் என்று ஆட்சியாளர்கள் கருதியிருக்கலாம். இதனால் அறிஞர்கள் இப்படியாக ஒரு ஒழுங்குக்கு வருவதை ஆட்சியாளர்கள் தடுத்து இருக்கலாம் என்ற ஒரு நியாயமும் இருக்கின்றது.

கூட்டு இஜ்திஹாத் இக்காலத்தில் பலவீனமாகக் காணப்பட்டமைக்கு கலாநிதி அப்துல் மஜீத் அஷ்ஷரபி மற்றுமொரு நியாயத்தைக் குறிப்பிடுகின்றார். அதாவது இக்காலத்தில் அறிஞர்கள் கூட்டு இஜ்திஹாதின் தேவையை குறைவாக உணர்ந்திருக்கலாம். ஏனெனில் கூட்டு இஜ்திஹாத் என்பது சிலபோது தனிநபர் இஜ்திஹாதின் இயங்கு தன்மையில் பலவீனத்தை ஏற்படுத்த முடியும். இதன் காரணமாக அறிஞர்கள் கூட்டு இஜ்திஹாதை விட தனிநபர் இஜ்திஹாதுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பார்கள்.

### மூன்றாவது கட்டம்: இஜ்திஹாத் பலவீனமடைந்த காலம்

அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் இஸ்லாமிய அரசு பலவீனமடைந்த இக்காலப்பிரிவில் இஜ்திஹாத் பணியும் பலவீனமடையத் தொடங்கியது. அறிவுசார் பகுதியிலும், நடத்தை சார் பகுதியிலும் பலவீனமாகக் காணப்பட்ட சிலர் இஜ்திஹாத் செய்ய முற்பட்டனர். இதனால் மனோஇச்சை அடிப்படையிலான பத்வாக்கள் சொல்லப்பட்டன. இதனை அவதானித்த சில அறிஞர்கள் ''இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டு விட்டது'' என்ற கருத்தை வெளியிட்டனர்.

மூன்றாம் நூற்றாண்டும், நான்காம் நூற்றாண்டின் ஆரம்பக் காலப்பிரிவும் மத்ஹபுகள் வளர்ச்சியடைந்த காலமாகக் காணப்பட்டது. இக்காலப்பிரிவில் மத்ஹபுகளின் பத்வாக்கள், பத்வாவுக்கான அடிப்படைகள் நூல்களில் தொகுக்கப்பட்டன. இலகுவான முறையில் மத்ஹபுகளின் கருத்துக்களைப் பெறக் கூடிய வகையில் புத்தகங்கள் எழுதப்பட்டன.

இதனைத் தொடர்ந்து வந்த காலப்பிரிவில் தோன்றிய பல அறிஞர்கள் இனி இஜ்திஹாதின் தேவை கிடையாது என்றும் ஏலவே தொகுக்கப்பட்ட கருத்துக்களைப் பின்பற்றினால் போதுமானது எனும் கருத்தை முன்வைத்தனர். இதன் காரணமாக புதிய இஜ்திஹாத்கள் நடைபெறாது ஏலவே தொகுக்கப்பட்ட கருத்துக்களை பின்பற்றும் தக்லீத் என்ற நிலை உருவானது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது என்ற கருத்து உண்மையில் தகுதியற்றவர்கள் இஜ்திஹாத் என்ற பணியில் ஈடுபடக்கூடாது என்ற நோக்கத்தில் தான் முன்வைக்கப்பட்டது. என்றாலும் இக்கருத்து பிழையாகப் புரியப்பட்டது. இஜ்திஹாத் என்ற பணியே முழுமையான நின்று விட்டது என்று அதனை பிழையாக விளங்க ஆரம்பித்தனர்.

இப்படியான பிழையான புரிதல் சட்டவாக்கத்தில் தேக்கநிலையை ஏற்படுத்தும். அதன் உயிரோட்டத்தை நிறுத்திவிடும். கால மாற்றங்களுக்கு ஏற்ப சட்டங்களை முன்வைக்கும் இஜ்திஹாத் என்ற பணியில் களங்கத்தை ஏற்படுத்தும்.


அறிஞர் முஸ்தபா அஹ்மத் ஸர்கா (ரஹ்) (1904-1999) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும்போது ''உண்மையில் இஜ்திஹாத் பணியில் ஏற்பட்ட குழப்ப நிலையை தீர்ப்பதற்கு அதன் வாயிலை மூடுவது பொருத்தமான தீர்வல்ல. மாற்றமாக அதனை தனிநபர்களின் கைகளில் கொடுக்காது ஒரு குழுவின் பொறுப்பில் வழங்கப்பட்டு ஒழுங்கு படுத்தியிருக்க வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார்.

இதுதான் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழிமுறையாகும். ஏதாவதொரு பிரச்சினை ஏற்படும் போது ஸாலிஹான முஃமின்களை ஒன்றுகூட்டி அவர்களுடன் கலந்தாலோசனை செய்து தீர்வைப் பெறுமாறு நபிகள் (ஸல்) அவர்கள் எம்மை பணித்துள்ளார்கள்.

# நிர்ப்பந்த நிலையில் அத்தியாவசிய தேவைகளிற்காக வங்கிகளூடாக அரசு வழங்கும் சேவைகளை இஸ்லாமியர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

• ஷெய்க் இனாமுல்லாஹ் மஸிஹுத்தீன்

''அல்லாஹ்வின் பெயர் கூறி (உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவற்றில்) அறுக் கப்பட்டதை நீங்கள் சாப்பிடாமலிருக்க என்ன (தடை) இருக்கிறது? நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டாலன்றி சாப்பிட உங்களுக்கு விலக்கப்பட்டவை எவை என்பதை அல்லாஹ் விவரித்துக் கூறியுள்ளான் - ஆனால் பெரும்பாலோர், அறியாமையின் காரணமாகத் தங்களுடைய மன இச்சைகளின் பிரகாரம் (மனிதர்களை) வழி கெடுக்கிறார்கள்; வரம்பு மீறிச்செல்பவர்களை நிச்சயமாக உம் இறைவன் நன்கு அறிகிறான்.''
(ஸூரத்துல் அன்ஆம் :119)



அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளுக்காக வேறு மார்க்கங்கள் இல்லாத பொழுது முஸ்லிம்கள் வங்கிகளூடாக வழங்கப்படும் சலுகைகளுடன் கூடிய அரச நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

உதாரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு சுயதொழில்களை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படுகின்ற சமுர்த்தி, ஜனசவிய, திவிநெகும போன்ற உதவித் தொகைகள் அரச வங்கிகளூடாக வழங்கப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும் அரச சலுகைகள் அரச மற்றும் தனியார் வங்கிகளூடாக வழங்கப்படுகின்றன.

நுகர்வோர் சமுதாயமாக இருக்கும் நாம் உற்பத்தித் துறைகளை நோக்கி நகர்வதற்குரிய வழிவகைகளை முன்னுரிமைகள் அடிப்படையில் கண்டறிதல் கடமையாகும். இந்த நாட்டின் வரியிறுப்பாளர்கள் என்ற வகையில் உணவு உற்பத்தி விவசாயம், கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன்வளர்ப்பு, கடற்தொழில், சிறு கைத்தொழில்கள், கிராமிய கைத்தொழில்கள், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைகள், வர்த்தக பயிர்ச் செய்கைகள், ஏற்றுமதி இறக்குமதி தொழில் முயற்சிகள் என அரசினால் வழங்கப்படும் சலுகைகளை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர்களாவோம்.

மேற்கண்ட அரச சலுகைகள் பெறப்பட்டு செய்யப்படும் உணவு உற்பத்தி பொருளுற்பத்தி, மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் நுகர்வோர் சமூகமாக மாத்திரம் நாம் இருக்கின்றோம், அது குறித்த சன்மார்க்க வரையறைகளையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும், எங்களுக்கு அடுத்தவர் உற்பத்தி செய்யும் பண்டங்கள் பொருட்களில் ஹராமான கலப்படங்கள் இருக்கக் கூடாது; ஆனால் நாம் அவற்றை உற்பத்தி செய்வதில் பின்னிற்கின்றோம்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அது சார்ந்த சலுகைகளை பெற்றுக் கொள்வதற்கும், அவர்களது வீடமைப்பு, காப்புறுதி மற்றும் தொழில் சார் நடவடிக்கைகளுக்கும் அரசினால் வங்கிகளினூடாக வழங்கப்படுகின்ற சலுகைகளையும் மாற்றீடுகள் இல்லாத நிலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேபோன்றே அரச சேவையில் உள்ளோருக்கான ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், காப்புறுதிகள், மற்றும் பாடசாலை மாணவர்களிற்கு வழங்கப்படுகின்ற காப்புறுதிகள் என்பவற்றை வேறு மாற்றீடுகள் இல்லாத நிலையில் முஸ்லிம்கள் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறான நிறுவனங்களில் தொழில் புரிவதற்கான அனுமதியும் இத்தகைய அடிப்படையில் தான் எமது முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்தன.

என்றாலும், வேறு மார்க்கமே இல்லாத நிலையில் நிர்ப்பந்தம் இருப்பதால் மாத்திரமே இவ்வாறான அனுமதி வழங்கப்படுகின்றது, அதேவேளை ஹலாலான மாற்றீடுகளை கண்டறிவதும், ஏற்படுத்துவதும், அறிமுகம் செய்வதும், அமுல்படுத்துவதும் சமூகத்தின் மீது விதிக்கப்படுகின்ற கூட்டுப் பொறுப்பும் கடமையுமாகும்.

உதாரணமாக, நாம் சிறுபான்மையினராக இருக்கின்ற நிலையில் யதார்த்தமான வட்டியில்லாத இலாப நஷ்டப் பங்கீடுகளை அடிப்படையாகக் கொண்ட நுண் நிதி கடனுதவிகளைப் பெற்றுத் தரக் கூடிய கிராமிய கூட்டுறவு வங்கிகளை அரச அனுமதியுடன் தோற்றுவித்துக் கொள்ளவும், ஹலாலான மாற்றீடுகளை ஏனைய சேவைகளுக்காக அறிமுகம் செய்து அனுமதி பெற்றுக்கொள்ளவும் நிறுவன ரீதியிலான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது சமூகத்தின் மீதுள்ள கூட்டுக் கடமையாகும்.

அவ்வாறான மாற்றீடுகள் குறித்து கடந்த காலங்களில் எமது இஸ்லாமிய நிறுவனங்களும் அமைப்புக்களும் தலைமைகளும் ஆய்வுகளை செய்து தீர்மானங்களை அமுலுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தவறியுள்ளமையால் பல ஆயிரக்கணக்கான எமது சகோதர சகோதரிகள் கடல் கடந்து நிபுணத்துவங்கள் அற்ற பணிகளை செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றமை பல ஹராமான சமூக பொருளாதார கலாசார சவால்களை தோற்றுவித்துள்ளமை பகிரங்க இரகசியமாகும்.

இன்று மஸ்ஜிதுகளில் கடமை புரியும் கதீப்மார்கள், முஅத்தின்கள், மதரசாக்களில் கடமைபுரியும் உலமாக்கள், முஅல்லிம்கள், உஸ்தாதுமார்கள் என எவருக்குமே ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேம இலாப நிதியம், ஓய்வூதியம், காப்புறுதிகள், தொழில்சார் சலுகைகள் உரிமைகள் இல்லாமைக்கு இந்த விவகாரமும் காரணமாகும்.

குறிப்பாக அரசினால் வழங்கப்படுகின்ற மேற்படி சேவைகளை அரச மற்றும் தனியார் வங்கிகளின் இஸ்லாமிய கொடுக்கல் வாங்கல் பிரிவுகளூடாக பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கின்ற ஏற்பாடுகளை செய்து தருமாறு முஸ்லிம் அரசியல் தலைமைகள் கோரிக்கைகளை விடுப்பதோடு நல்லிணக்க அடிப்படையில் அவ்வாறான உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

மாற்றீடுகள் இல்லாத நிலையில் கருப்புப் பணங்களை கையாளுவது, கடத்தல் முயற்சிகளில் ஈடுபடுவது, உண்டியல் வியாபாரம் செய்வது, பிரமிட் வியாபாரம் செய்வது, நம்பகமற்ற நிதி வர்த்தகத்தில் ஈடுபடுவது, அரச அனுமதியற்ற நிதி நிறுவனங்களை நிறுவன ரீதியில் நடத்துவது என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் தற்பொழுது அமுலில் உள்ள பாரம்பரிய வங்கித் தொழிற்பாடுகளை ஒத்த இஸ்லாமிய நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகளும் இன்னும் ஆழமாக விரிவாக இஸ்லாமிய நிதியியல் நிபுணர்களால் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

இலாப நஷ்டப் பங்கீட்டின் அடிப்படையில் நிதி சேவைகளை வழங்குவதாக கூறுகின்ற இஸ்லாமிய நிதி நிறுவனங்கள் இலங்கையில் இவ்வாறான தொழில் முயற்சியாளர்களிற்கு கை கொடுக்கின்ற பொறிமுறைகளை இது வரை அறிமுகப் படுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

அல்லாஹ்வின் மிகப் பெரும் கிருபையால் இலங்கையில் பல பாகங்களில் நிறுவன ரீதியிலான சகாத் பங்கீடு வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருவதாலும், சில இடங்களில் மஸ்ஜித்களூடாக கர்ளுள் ஹஸன் நிதியுதவித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாலும் சமுதாயம் சில மாற்றீடுகளை நோக்கி நகர்வது திருப்தி தரும் விடயமாகும்.

அத்தியாவசிய தேவைகளிற்கான அவசரக் கடனுதவிகளை செய்வதற்கும் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான கடனுதவிகளை வழங்குவதற்குமிடையில் வேறுபாடுகள் இருக்கின்றன.

இஸ்லாம் வழங்குகின்ற இவ்வாறான நிர்பந்த நிலை அனுமதிகளை துஷ்பிரயோகம் செய்வதும், வரம்பு மீறுவதும் பெரும் பாவங்களாகும், அவற்றையும் இயன்றவரை தவிர்ந்து பொறுமை காப்பது ஒவ்வொரு விசுவாசியினதும் ஆன்மீகப் படித் தரங்களை பொறுத்து இறை நேசத்தை வென்று தருகின்ற தனிப்பட்ட விவகாரமாகும், தத்தமது மனச் சாட்சியுடனும் இரட்சகனுடனும் தொடர்பு பட்ட விடயமாகும்.

அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் இல்லாத பட்சத்தில் அவற்றை நாடுவதில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும், அத்தகைய மாற்றீடுகள் உள்ள நிலையில் முஸ்லிம்கள் ஆகுமாக்கப்படாத வழிமுறைகளை நாடுவதனை சமூகம் அழகிய வழிமுறைகளால் தடுத்து நிறுத்துவதும் விதியாக்கப்பட்டுள்ள கடமையாகும்.

விதிவிலக்குகளை நாம் விதிகளாக தாராளமாக கையாள முனைதல் வரம்பு மீறலாகும், அது ஹலாலை ஹராமக்குவதும், ஹராத்தை ஹலாலாக்குவதுமான பாரிய பெரும்பாவமாகும் என்பதனை நாம் ஒவ்வொருவரும் ஆழமாக மனதில் இறுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பு:

இவ்வாறான விதிவிலக்குகள் சார்ந்த மார்க்கத் தீர்ப்புகளை இதுவரை காலமும் உலமாக்கள் தனிநபர்களது சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டே வழங்கியுள்ளனர். நிறுவன ரீதியாக தீர்ப்புக்களை பொதுவாக கூறுவதில் மிகவும் பேணுதலாக அவதானமாக முன்னெச்சரிக்கையாக அவர்கள் நடந்து கொள்கின்றனர்.

நிர்பந்த நிலைகள் ஆளுக்கு ஆள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன, விதிவிலக்கான அனுமதிகள் ஒரு பொழுதும் ஹராத்தை ஹலால் ஆக்குவதாகக் கொள்ளப்பட முடியாது.

என்னிடம் பலர் தனிப்பட்ட ரீதியில் கேட்கின்ற கேள்விகளிற்கு நான் கூறுகின்ற சில தீர்வுகளை மாத்திரமே இங்கு குறிப்பிட்டுள்ளேன், மேற்படி விடயங்களில் நிச்சயமாக முரண்பாடுகள் இருக்கவே செய்கின்றன, அவற்றை நான் மதிக்கின்றேன், இன்னும் இந்த விவகாரம் தொடர்பாக கற்கவும் தயாராக இருக்கின்றேன், இயன்றவரை நம்பகமான உலமாக்களை அணுகி தனிப்பட்ட விவகாரங்கள் குறித்த வழிகாட்டலை பெற்றுக் கொள்வதோடு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பத்வா பிரிவை நாடுவதன் மூலம் உங்களிற்கு தேவையான தெளிவுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை இடைவிலகல்

கல்வியே ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அபிவிருத்தியின் அச்சாணியாகும். கல்வி ஒரு தேசத்தின் ஆற்றல் வளம் ஆகும். எனவே ஒவ்வொரு நாடும் இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளது. அனேக நாடுகள் கல்வி உரிமையை தமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கியிருக்கின்றன. மட்டுமன்றி தமது கலாசார பொருளாதார, சமூகக் கொள்கை அமுலாக்கத்தின் சமூம் இவ்வுரிமையை அரசுகளும் தேசங்களும் நிலைநாட்டுகின்றன.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசு பல்வேறு கொள்கை அமுலாக்கத் திட்டத்தின் மூலம் கல்வித் துறையை மேம்படுத்த பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. அதன் விளைவாக இலங்கை கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகளை எட்டியுள்ளது. 97% ஆன இலங்கையர்கள் எழுத்தறிவுள்ளவர்கள்.

இலங்கையின் எழுத்தறிவு வீதம் 97% என்பது அதன் முக்கிய சாதனைக் குறிகாட்டிகளில் ஒன்று எனலாம். எவ்வாறாயினும் இலங்கை கல்வித்துறையில் முழு நிறைவான இலக்கை எட்டியுள்ளது எனக் கூறுவதற்கில்லை. ஏனெனில் இலங்கை கல்வித் துறையில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது. பாடசாலை இடைவிலகல் அல்லது பாடசாலைக்குப் பிள்ளைகள் சமூகம் அளிக்காமை இலங்கை கல்வி முறை எதிர்கொண்டுள்ள பாரிய சாவல்களில் ஒன்றாகும்.

எனவே, இந்த ஆய்வின் முழு முதல் நோக்கம் பாடசாலை இடைவிலகல் பிரச்சினைகளை ஆராய்வதுதான். குறிப்பாக இந்த ஆய்வு மேல் மாகாணத்தின் கம்ஹா மாவட்டத்தைத் தனது ஆய்வுப் பிரதேசமாக எடுத்துக் கொள்கின்றது. இதில் மாணவர்கள் இடைவிலகல் குறித்து கோட்பாடுகள் (Theories) எண்ணக்கருக்கள் (Concepts) பிரயோகிக்கப்பட்டுள்ளன. பாடசாலை வரவு இடாப்பு, விடுகைச் சான்றிதழ் போன்ற ஆவணங்களிலிருந்தும் தீர்வு மூலங்களிலிருந்தும் பெறப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகளும் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

2009 இல் மட்டும் இலங்கையில் 45,000 மாணவர்கள் இடைவிலகியுள்ளனர். அவர்களுள் 20% மாணவர்கள் தோட்டப் புரங்களைச் சேர்ந்தவர்கள். இடைவிகிலகுவோரில் பெண் மாணவிகளை விட ஆண் மாணவர்களே அதிகம் என்பதைத் தரவுகள் காட்டுகின்றன. வசதிக் குறைபாடுகள், சமூக பொருளாதார பின்னடைவுகள், கீழ்வர்க்க குடும்பங்களின் மாணவர்கள் இடைவிலகலுக்குப் பங்களிப்பதை சில ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

அதேவேளை இன்றைய சமூக கட்டமைப்பில் ஏற்பட்டுவரும் சமூக கலாசார மாற்றங்களும் கல்வியை நிறைவு செய்ய உந்து கோலாக உள்ளதையும் புதிய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. சிறந்த சமூக சூழல், சிறந்த குடும்ப சூழல், கல்விப்ப பின்புலம் கொண்ட பெற்றோர், சமூக அந்தஸ்துள்ள குடும்பங்கள் கல்வியைப் பூரணப்படுத்த வாய்ப்பளிக்கின்றன.

கல்வி ஒவ்வொரு குழந்தையினதும் பிள்ளையினதும் அடிப்படைத் தேவை என்பதோடு மிக முக்கிய மனித உரிமைகளுள் ஒன்றாகும். எனவேதான் உலக நாடுகள் இந்த உரிமையை பாதுகாக்க பல முன்னேற்றகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

இலங்கையில் ஆரம்பக் கல்வி அனைத்துப் பிள்ளைகளுக்கும் கட்டாயமானது. 5-14 வயது வரையான மாணவர்கள் கட்டாயமாகக் கல்வி பெற வேண்டும். இலங்கை சுதந்திரமடையும் காலத்தில் இலவச கல்வியின் பயன்கள் மக்களை சென்றடையத் தொடங்கியதைத் தொடர்ந்து பல அபிவிருத்தி நடவடிக்கைகள் நிகழ்ந்தன. கடந்த 40 ஆண்டு கால இலங்கையில் அரசு தனது அபிவிருத்தித் திட்டங்களில் கல்விக்கும் முன்னுரிமை வழங்கி வந்துள்ளது.


இலங்கை ஒரு வளர்முக நாடாக உள்ள போதும் கல்வியில் பெருமளவு வளங்களை முதலீட செய்கின்றது. தரம் 1லிருந்து பல்கலைக்கழக பட்டம் வரையில் இலவசக் கல்வி நடைமுறையில் உள்ளது. தற்போதைய அரசாங்கம் 13 வருட கட்டாயக் கல்வியை அறிமுகம் செய்துள்ளது. ஆரம்ப இடைநிலைக் கல்வியை விஸ்தரித்தல், தாய்மொழிக் கல்வியை வழங்கல், புலமைப் பரிசில் திட்டம், இலவச பாடநூல், இலவச சீருடை, இலவச போக்குவரத்து என மாணவர்கள் மீதான கல்வியின் சுமையைக் குறைத்து அரசாங்கம் பல்வகை செலவீனங்களை ஏற்றுள்ளது.

இத்தகைய இலவச வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்ற போதும் மாணவர்கள் இடைவிலகல் ஒரு தொடரான பிரச்சினையாகவே விளங்குகின்றது. இவ்வுண்மையை கல்வியியலாளர்களும் கல்வித் துறை ஆய்வாளர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். (www.tradingeconomics.com, accessed on 30-07-2017)

வரையறுக்கப்பட்ட இலக்குகளையும் நோக்கங்களையும் கல்வித் திட்ட அமுலாக்கத்தின் ஊடாக மாணவர்களிடம் அடையும் நோக்கில் பாடசாலை கல்விச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இன்று கல்வி மாணவர் மையம் என்பர். எனவே கற்றலை திருப்திகரமாக முன்னெடுப்பதற்கு மாணவர்களின் தொடர்ச்சியான வரவு இன்றியமையாதது.

இலங்கை உயர்ந்த எழுத்தறிவு வீதத்தினைக் கொண்டிருப்பினும் கல்வித் துறையில் எல்லா இலக்குகளையும் பூரணமாக அடைந்துவிட்டது என்று கூற முடியாது. ஏனெனில் ஆரம்ப இடைநிலைக் கல்வி இரண்டாம் இடைநிலை, மூன்றாம் நிலை என நாடு பல்வேறு கல்விப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. அந்த வகையில் பாடசாலை மாணவர் இடைவிலகல் ஒரு பாரிய பிரச்சினையாகும். வறுமை, வேலையின்மை, பாகுபாடு, குடும்பங்களின் வகிபாகம், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை என்பவற்றுடன் இப்பிரச்சினை இறுக்கமாகப் பிணைந்துள்ளது. (Peak and Mills 1987)

(தொடரும்)



# கலாநிதி தமாதிர் பின் யூஸுப்

## சவூதி அறேபியாவின் பிரதித் தொழில் அமைச்சர்


கடந்த மாதம் சவூதி அறேபியாவின் பாதுகாப்புத் துறை மற்றும் அமைச்சரவையில் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மேற்கொண்ட அதிரடி மாற்றங்களின்போது பிரதித் தொழிலமைச்சராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பழமைவாதப் போக்கை இறுக்கமாகப் பின்பற்றி வந்த அந்நாட்டில் இது போன்ற உயர் பதவியொன்றில் பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

அரசியலில் ஈடுபடல், வாகனம் ஓட்டுதல், விளையாட்டு மைதானங்களுக்குச் செல்லல், மஹ்ரமியின்றிப் பயணித்தல் போன்றவற்றுக்கு கடந்த காலங்களில் கடும் தடை விதித்திருந்த இந்நாட்டில், 2013 இற்குப் பின்னர் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டன. கடந்த ஆண்டின் இறுதியில் முஹம்மத் பின் சல்மான் பிரகடனம் செய்த நவீன இஸ்லாத்தின் Foderate Islam) படி, பெண்களுக்கு சகலவிதமான உரிமைகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. இராணுவத் துறையிலும் பெண்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர்.

திரைப்படத் துறையில் பெண்களை அனுமதிப்பதோடு, நாட்டில் 2000 இற்கும் அதிகமான சினிமா கொட்டகைகளைத் திறப்பதற்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. 'மொட்ரேட் இஸ்லாம்' பிரகடனத்தின் படி தற்போது பிரதித் தொழில் அமைச்சராக கலாநிதி தமாதிர் பின்த் யூஸுப் அல் ரம்மா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தொழில் அமைச்சராக மட்டுமன்றி, சமூக அபிவிருத்தி துணை அமைச்சராகவும் செயல்படவுள்ளார். சவூதி அறேபியாவின் உத்தியோகபூர்வ செய்திச் சேவையான இஸ்பா (SPA) இத்தகவலை வெளியிட்டுள்ளது.

கலாநிதி தமாதிர் பின்த் யூஸுப் கதிரியக்கம் மற்றும் மருத்துவ இயந்திரவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். ஐக்கிய இராச்சியத்திலுள்ள உலகப் புகழ்பெற்ற மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இவர் கலாநிதிப் பட்டம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. 2016 இல் சவூதி அறேபியாவின் மனித உரிமை ஆணைக்குழுவில் பிரதிநிதியாக இருந்த இவர், கிங் சஊத் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

சவூதி அறேபியாவில் நடந்து வரும் பரந்துபட்ட அரசில் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியே இந்நடவடிக்கை எனக் கூறப்படுகின்றது. இதேபோன்று பாகிஸ்தானை முன்னுதாரணமாகக் கொண்டு இராணுவத் துறையிலும் பெண்களை உள்ளீர்க்கும் திட்டமொன்றை சவூதி அரசாங்கம் அறிவித்துள்ளது. அதன்படி, இராணுவத்துறை பதவிகளுக்கான விண்ணப்பங்கள்



# உளக் கோளாறுகளும் உள ஆரோக்கியமும்




Disorder என்ற சொல்லை வரைவிலக்கணப் படுத்துவதிலும் வகைப்படுத்துவதிலும் உளவியல் ஆய்வாளர்களுக்கிடையில் கருத்து வேற்றுமைகள் நீடிக்கின்றன. Mental (உள) என்ற சொல் வெறுமனே மனித உள்ளத்தை மாத்திரம் குறிக்கவில்லை. மூளை, நரம்பு என்பவற்றுடன் தொடர்புற்ற வகையிலேயே உள்ளம் இயங்குவதனால் மூளையுடன் தொடர்புபடாத உளக் கோளாறுகள் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று இன்றைய உள மருத்துவர்கள் கருதுகின்றனர்.

மிக எளிமையாகச் சொல்வதானால் உடலுக்கு நோய் ஏற்படுவதுபோல் உள்ளத்திற்கும் நோய் ஏற்படலாம். அது உளக் கோளாறு அல்லது மனக் கோளாறு எனப்படுகின்றது. உள்ளத்தில் ஏற்படும் மாற்றம் மனித நடத்தைகளிலும் அசாதாரண மாற்றங்களை உருவாக்குகின்றது. உளக் கோளாறுகளுக்கு அலோசனை வழிகாட்டல் உளப் பரிகாரம், மருத்துவம், மின்னதிர்ச்சி, அறுவை சிகிச்சை என பல்வேறு வகையான சிகிச்சை முறைகள் நடை முறையில் கையாளப்படுகின்றன.

அமெரிக்க உள மருத்துவக் கழகம் மற்றும் உலக சுகாதார அமையம் என்பன உளக் கோளாறை உளவியல் ரீதியான ஒரு நோய்க்குறி என அடையாளப்படுத்துகின்றன. நோய்க்குறி என்பது பல்வேறு குணாதிசயங்கள் மற்றும் அடையாளங்களின் தொகுப்பாகும். சுயமாகக் காயப்படுத்தல், சுயாதீனத்தை இழத்தல், மரணம் என பல்வேறு விளைவுகள் அதனால் ஏற்படலாம். மனப் பிறழ்வே மனக் கோளாறு அல்லது விலகல் நடத்தை எனப்படுகின்றது.

அன்புக்குரியவரை இழத்தல் மூலம் ஏற்படும் கழிவிரக்கம் (Grief), மன அழுத்தல் (Stress), நீடித்த கவலை (Prolonged Sadness) என்பவை மனக் கோளாறின் ஆரம்ப நிலைகளாகவும் சிலபோது மனக் கோளாறைத் தோற்றுவிப்பவையாகவும் உள்ளன.

விலகல் நடத்தையை ஏற்படுத்தும் அல்லது மனப் பிறழ்வை ஏற்படுத்தும் காரணிகள் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார, உயிரியல் காரணிகள் என பல்வேறுபட்டவை. (அவற்றைப் பின்னர் நோக்குவோம்.)

2013 இல் அமெரிக்க உள மருத்துவக் கழகம் தனது ஐந்தாவது வகையறாவில் பின்வருமாறு மனப்பிறழ்வை வரைவிலக்கணப்படுத்துகின்றது.

A syndrom chareterised by clinically significant distrubence in an individual's congnition, emotion, regulation or behaviour that reflect a dysfunction in the psychological, biologoical or develiopmental proccess. under liying mental function.

மனப் பிறழ்வு என்பது சமூக ரீதியான விலகல் நடத்தையைக் குறிக்கவில்லை என சிலரும் சமூக ரீதியான விலகலை குறித்து நிற்கின்றது எனச் சிலரும் வாதிக்கின்றனர். சமூக ரீதியான விலகல் என்பதை மறுக்கும் உளவியலாளர்கள் தனிமனிதனுக்கு சமூகத்திற்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளும் மோதல்களும் மனப் பிறழ்வில் உள்ளடக்காது என்பர். மாறாக, அவர்களின் கருத்தில் தனிமனிதனின் நடத்தை உளவியல் ரீதியிலும் உயிரியல் ரீதியிலும் செயலிழப்பதையே பிறழ்நிலை குறித்து நிற்கின்றது.

உண்மையில் அனைத்து நிலைமைகளையும் முழுமையாக உள்ளடக்கக் கூடிய ஒரு செயற்பாட்டு வரையறையைக் (Operational Definition) காண்பது கடினம் என்பதையே அமெரிக்க உள மருத்துவக் கழகத்தின் வரைவிலக்கணமும் பிறழ்நிலை குறித்த உளவியலாளர்களின் கருத்து வேற்றுமைகளும் காட்டுகின்றன.

இந்த வகையில் உள மருத்துவர்களின் கருத்தில் நியம நடத்தை அல்லது சாதாரண நடத்தை பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

- தன்னைப் பற்றிய சுயஅறிவு, உணர்வு, சுயமதிப்பு,
- உண்மைகளையும் யதார்த்தங்களையும் புரியும் திறன்.
- தனது நடத்தைகளை சுயமாகக் கட்டுப்படுத்தும் இயலுமை
- சக மனிதர்களுடன் உணர்வு பூர்வமாக தொடர்புறும் இயலுமை

இவை எதையும் சாராத நடத்தைகள் அசாதாரண நடத்தைகள் அல்லது விலகல் நடத்தைகள் எனப்படும். உளக் கோளாறு உள ஆரோக்கியத்திற்கு எதிரானது. மகிழ்ச்சி உள அரோக்கியத்தின் பிரதான குறிகாட்டி என்பதுபோல், உள அரோக்கியமின்மையின் பிரதான குறிகாட்டியாக உளக் கோளாறுகள் உள்ளன.

இந்த வகையில் உளக் கோளாறுகளைப் புரிந்துகொள்வது ஒருவரது சுயாதீனத்தையும் உள ஆரோக்கியத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கான முன்னெச்சரிக்கையையும் போதுமான அறிவையும் வழங்கும் என எதிர்பார்க்கலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னே வரும்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த வகையில் சிங்கள வாக்குகளை ஒருமுகப்படுத்துவதற்கான காரணியாக, ஏற்கனவே விதைக்கப்பட்டுள்ள இனவாதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கண்டிய தாக்குதல்கள் இதனை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளன. கண்டிய தாக்குதல்கள் லொறிச் சாரதியின் மரணத்தினால் விளைந்தவை அல்ல. ஏற்கனவே திட்டமிட்டு வைத்த இனச் சம்ஹாரத்தின் அரங்கேற்றம். கண்டி லைன் பள்ளிவாசலின் மினாரா தலதா மாளிகையை விட உயர்ந்திருக்கிறது என்ற கோஷத்துடன் உருவான இந்த இன ஒழிப்புப் படலத்தின் ஆரம்பமே கண்டியில் சிங்களத்தை விட முஸ்லிம் உயர்ந்திருக்கக் கூடாது என்ற கோட்பாட்டின் வெளிப்பாடுதான். இந்த அடிப்படையிலேயே தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.

சிங்களக் கிராமங்களுக்கிடையில் எழுந்து நிற்கும் முஸ்லிம் கிராமங்களே தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. நகர்ப்புறங்களில் சிங்களக் கடைகளுக்கிடையில் இருக்கும் முஸ்லிம் கடைகளே தாக்கப்பட்டுள்ளன. குண்டசாலை கம்உதாவ கிராமத்தில் இருக்கும் மொத்தமான 06 முஸ்லிம் வீடுகளும் தீக்கிரையாகியுள்ளன. சிங்கள ஊர்களிலே இடையிடையே இருக்கும் முஸ்லிம் வீடுகளும் வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற பெரும்பாலான பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனூடாக இந்தத் தாக்குதல்களை அவதானிக்கின்ற பொழுது சிங்கள வாக்குகளைத் தனித்துப் பெறுவதற்காக தனிச் சிங்களக் கிராமங்களை உருவாக்கும் நடவடிக்கையொன்றாக இது விளங்குகிறது.

இனவாதத்தை முன்னிறுத்தித் தான் அடுத்த கட்ட வாக்கு வேட்டை ஆரம்பமாகப் போகிறது என்றிருந்தால் 2020 தேர்தல் வரை இதற்கான ஒபரேஷன் நடக்கவிருக்கிறது என்பது அர்த்தமாகிறது. ஏக காலத்தில் தென்னிந்திய அரசியலும் ரஜனியின் ஆன்மீக அரசியல் பிரவேசத்துடன் மதவாத அரசியலாக உருவெடுக்கவிருக்கிறது. ஏற்கனவே குஜராத்தில் இனவாத வன்முறைகளுக்குத் தூபமிட்ட மோடியின் அரசு மத்தியில் இருப்பதும் இதற்குத் துணைபோவதற்கு வாய்ப்பும் இருக்கிறது. பிராந்திய அரசியலில் மூக்கை நுழைக்கக் காத்திருப்பவர்களுக்கு இலங்கையில் தொடரப் போகும் இந்த இனவாத அரசியல் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

இதனை எதிர்பார்த்திருந்தது போலவே இந்திய அரசியல் களமும் நகர்த்தப்படுகிறது. இந்தியாவின் பாரிய இஸ்லாமிய இயக்கமான பொப்புலர் ப்ரண்ட் ஒப் இந்தியா, ஜார்கண்ட் மாநிலத்தில் ஐஎஸ் இயக்கமாக முத்திரையிடப்பட்டு தடை செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையிலும் ஐஎஸ் தீவிரவாதிகள் இருப்பதாக இந்திய புலனாய்வுத் துறையினர் கண்டு பிடித்திருப்பதாக 2016 இல் இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுமிருந்தது. இந்தச் செய்தியை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையிலும் ஐஎஸ் தீவிர வாதிகள் இருப்பதாகக் காட்டுவதற்கு இங்குள்ள சக்திகள் முயற்சி செய்தன.

கண்டி திரித்துவக் கல்லூரியில் படித்த, மத்திய மாகாணத்தின் கலேவெலயைச் சேர்ந்த அபூ சுரையா சைலானி என்றொருவரை இதற்கென ஜோடித்துக் காட்டியது. இவருடன் இவரது குடும்பத்தைச் சேர்ந்த 32 பேர் இருப்பதாக பதவி விலக்கப்பட்ட முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார். இதுவரையில் அந்த அபூ சுரையாவோ, அந்த 32 பேரோ இருப்பதை உறுதி செய்வதற்கு இவர்களால் முடியவில்லை.

சிலவேளை தாக்குதலுக்காக மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டம் தெரிவு செய்யப்படுவதற்கான காரணம், இங்கிருந்து எப்படியாவது சொல்லப்பட்ட அந்த ஐஎஸ்ஐ வெளியில் கொண்டு வரும் நோக்கத்திலாக இருக்கலாம். தற்போது நடத்தப்பட்டு வரும் இனவாதத் தாக்குதல்களினால் கிளம்பி வரும் இளைஞர் கூட்டங்களில் ஏதேனும் ஒன்று இந்த ஐஎஸ் அடையாளத்துக்காகத் தெரிவு செய்யப்படலாம் என்ற நிலையைத் தான் களச் சூழல் தெளிவாக்குகிறது.

எப்படியும் அடுத்த கட்ட நகர்வுகள் அனைத்தும் இனவாத வாக்குகளை ஒன்று திரட்டும் அடிப்படையிலேயே நகரப் போகின்றன. ஆயுத விற்பனையாளர்களின் நோக்கத்தினை நிறைவு செய்து கொள்வதற்காக இலங்கையின் முன்னேற்றம் மீண்டும் பல வருடங்களுக்கு பின்நோக்கித் தள்ளப்படவிருக்கிறது. ஒரு நாட்டின் முன்னேற்றம் கல்வி, பொருளாதார அடைவுகள் மூலமே நோக்கப்படுகின்றன. இலங்கையில் தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள் என்ற பொறாமை தான் அப்போது இனவாதத்துக்குப் பயன்படுத்தப்பட்டு, நாடு முப்பது வருடங்கள் யுத்தத்தில் ஈடுபட்டு அழியக் காரணமாகியது. இப்போது முஸ்லிம்கள் பொருளாதாரத்தில் முன்னேறியிருக்கிறார்கள் என்று நிலவும் பொறாமை உணர்வு, அடுத்த அழிவுக்காக பயன்படுத்தப்படப் போகிறது.

அடுத்த தேர்தல் வரப் போகும் இரண்டு வருட காலப்பிரிவுக்குள், இனவாதத்தை வெற்றி பெறுவதற்கான காரணியாக அல்லாமல் மாற்றுவதற்கு முயற்சிப்பதில் தான் நாட்டின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் தங்கியிருக்கிறது.

## ஆவணப்படுத்தும்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் போரமும் ஜஸ்ட் மீடியா பௌண் டேஷனும் இணைந்து தகவல்களைத் திரட்டி நூலுருப்படுத்தும் பணியை ஆரம்பித்திருக்கின்றன.

அதேபோல ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான கவுன்சில் (ARC) யும் ஆவணப்படுத்தல் வேலைகளை ஆரம்பிக்கவிருக்கிறது. ஆவணப்படுத்தலுடன் தேவையான விதந்துரைகளை வழங்கும் வகையில் கண்டி போரமும் தகவல்களைத் திரட்டி வருகின்றன.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்வைப்பதற்கான ஆவணங்களைத் தயாரிப்பதிலும் முஸ்லிம் அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன.

## சேதமாக்கப்பட்ட... (01 ஆம் பக்கத் தொடர்)

இருப்பதாகவும் அவர் மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

இனவாதக் குண்டர்களின் வெறித் தாக்குதல் காரணமாக திகனயில் 14 பள்ளிவாசல்களும், என்டரதென்னையில் 02 பள்ளிவாசல்களும், மடவளையில் 01 பள்ளிவாசலும், குறுந்து கொல்லையில் 02 பள்ளிவாசல்களும், கட்டுகஸ்தொட்டையில் 02 பள்ளிவாசல்களும், கடுகண்ணாவையில் 01 பள்ளிவாசலும் சேதமாக்கப்பட்டுள்ளன.

## ரணில்-மைத்திரி... (03 ஆம் பக்கத் தொடர்)

கடையின் காசாளர், தாம் மலட்டு மாத்திரைகளை உணவில் சேர்த்ததாக ஏற்றுக் கொண்டார் என்றவர்கள் இப்போது என்ன கூறப் போகிறார்கள்?

குடிபோதையில் இருந்த நான்கு 'முஸ்லிம்கள்' ஒரு சிங்களவரைத் தாக்கி, அவர் மரணமடைந்ததை அடுத்தே, கண்டி மாவட்டத்தில் கலவரநிலை ஏற்பட்டது. ஆனால், அந்தச் சிங்களவர் தாக்கப்பட்ட சம்பவம், கலவரத்தை ஆரம்பிக்கக் காத்திருந்தவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பமாக அமைந்ததாகவும் தெரிகிறது.

2012 முதல் 2014 வரை, இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கும் இம்முறை இடம்பெற்ற தாக்குதல்களுக்கும் இடையில் உள்ள முக்கியமானதொரு வேறுபாடு என்னவென்றால், இம்முறை ஆரம்பத்திலிருந்தே சிங்களப் புத்திஜீவிகள், இனவாதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தமையாகும்.

மலட்டு மாத்திரை குற்றச்சாட்டை, அவர்கள் எடுத்த எடுப்பிலேயே பகிரங்கமாகவே நிராகரித்தனர். அரசாங்கமும் ஹலால் பிரச்சினையின் போது, மஹிந்தவின் அரசாங்கம் நடந்து கொண்டதைப் போல், வருடக் கணக்கில் இழுத்தடிக்காது ஒரு வார காலத்துக்குள்ளேயே உத்தியோகபூர்வ தெளிவுபடுத்தல்களை வெளியிட்டது.

அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்குப் புறம்பாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், நிரந்தரமாகக் கருத்தரிப்பைத் தடுக்கும் இரசாயனப் பொருட்கள், உலகில் எங்கும் கண்டு பிடிக்கப்படவில்லை என உத்தி யோக பூர்வமாக அறிவித்தார்.

முஸ்லிம்கள் சிலரது குற்றச் செயலொன்றைப் பாவித்து, கண்டியில் கலவரம் ஆரம் பிக்கப்பட்ட போதிலும், சிங்களப் புத்திஜீவிகள் அதையும் பகிரங்கமாக எதிர்த்தனர். ஆனால், அன்றும் இன்றும் ஒரு விடயம் பொதுவாக இருக்கிறது. அதுதான் பயங்கரமானது. இனவாதிகள் விடயத்தில் பொலிஸார் காட்டும் மிருதுவான போக்கும் அவர்களுக்குச் சார்பாகச் செயற்பட்டு, அவர்களைக் காப்பாற்ற முயற்சிப்பதுமாகும்.

தமது சிங்கள வாக்கு வங்கி பாதிக்கப்பட்டு விடுமோ எனப் பயந்து, ஆட்சியாளர்களும் பொலிஸாரின் அந்தச் செயற்பாடுகளைக் கண்டும் காணாததைப் போல் இருப்பதும், அன்றுபோல் இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. இனவாதம், பொலிஸ் திணைக்களத்தில், நிறுவனமயப்படுத்தப்பட்டு விட்டது போலும்.

கண்டியிலும் அம்பாறையிலும் நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் ஏற்கெனவே கைது செய்யப்பட்டவர்கள், தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லை.

தாம் தண்டிக்கப்படுவோம் என்ற உணர்வு இனவாதிகளின் மனதில் ஏற்படாத வரை, அவர்கள் தமது நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை. அவ்வாறானதொரு நிலைமை நாட்டில் இல்லை.

## நிச்சயமான... (11 ஆம் பக்கத் தொடர்)

தனித்து நின்று சமூகத்தைப் பாதுகாக்க முடியாது என் பதுவே கள யதார்த்தம். இதை உணர்ந்து தான் சமூகத்தின் பல்வேறு நிறுவனங் களும் அமைப்புக்களும் தனிநபர்களும் என்றுமில்லாத அளவுக்கு சமூகத்தைத் தாங்குவதற்காக முன்வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் யார் வந்தாலும் எங்களிடம்தான் தீர்வு இருக்கிறது, அதனைத் தான் நாங்கள் அமுல்படுத்துவோம், அதற்குரிய நிதியை எங்களிடம் தாருங்கள், எங்களுக்குக் கீழால் இருந்து நீங்களும் வேலை செய்யுங்கள் என்று ஆணவத் தோரணையில் இந்த ஆர்வலர்களை அணுகினால் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. மாற்றமாக அனைவரையும் இணைத்ததான, அனைவரது பங்களிப்புக்களையும் பெறத்தக்கதான ஒரு தலைமை தான் சமூகத்துக்கு இப்போது தேவைப்படுகிறது.

பாரியதொரு பேரழிவை எதிர்நோக்கியிருக்கும் ஒரு சமூகம், எரிந்து கொண்டிருக்கும் இந்நிலையிலாவது ஒன்றுபட்டு தாக்குப் பிடிப்பதற்கு முன்வரவில்லையென்றால், அந்த சமூகத்தின் அழிவுக்கு அதன் நிகழ்காலத் தலைமை தான் பொறுப்புச் செல்ல வேண்டும்.

கண்டிய அனர்த்தத்தின் பின்னர் சமூகம் தற்காப்பு தொடர்பில் சிந்திக்கத் தலைப்பட்டு செயற்பட்டுமிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தின் மீதான அடாவடித்தனங்கள் அதிகரிக்காமல் காப்பதற்கு இந்த தற்காப்பு நடவடிக்கைகள் காரணமாக இருந்திருக்கின்றன. பல பகுதிகளிலும் தொடங்கப்பட்டிருக்கின்ற ஹிராஸா நடவடிக்கைகள் இளைஞர்களை ஊரின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியிருக்கின்றன. இவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கவனமாகக் கையாளும் சாணக்கியம் தலைமைகளுக்கு இருக்க வேண்டும்.

தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கெதிரான யுத்தத்தின் போது முஸ்லிம் இளைஞர்களை ஊர்காவற் படைகளாக அமர்த்தி அவர்களது கைகளில் தற்பாதுகாப்புக்காக ஆயுதம் வழங்கியதால் வந்த விளைவுகளை வரலாறு பதிந்து வைத்துள்ளது. எனவே தற்போது தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்ற இளைஞர்கள் கவனமாக வழி நடத்தப்பட வேண்டும்.

இனவாதிகளை கட்டுப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக அருகிலுள்ள பௌத்த விகாரைகளையும் பிக்குகளையும் அணுகுவது தற்போது ஒரு வழக்கமாக மாறியுள்ளது. இது கட்டாயம் செய்யப்பட வேண்டிய வரவேற்கத்தக்க விடயமே. இருந்தாலும் முற்று முழுதாக இந்தச் செயற்பாட்டில் மட்டும் தங்கி இருப்பது ஆபத்தானது.

பிரச்சினைகள் நடைபெற்ற பகுதியொன்றின் விகாராதிபதியை சந்தித்து அவர்களுடைய மக்களுக்கு இது தொடர்பில் போதிக்குமாறு முஸ்லிம் தரப்பினர் வேண்டிக் கொண்டபோது அவர், உங்களுடைய மதத்தைப் போல மதஸ்தலங்களுக்கு வர வேண்டிய கட்டாயம் எங்களது மக்களுக்கு இல்லை. போயதினங்களில் மட்டுமே மக்கள் பன்சலைக்கு வருகிறார்கள். அதிலும் பெரும்பாலானவர்கள் வயதான பெண்கள். இவர்களுக்கு இந்த விடயங்களைப் போதிப்பதால் ஆகப் போவது ஒன்றுமில்லை என்று கூறியிருக்கிறார்.

பெரும்பாலும் தமக்குச் சார்பான விடயங்களில் மட்டுமே இவர்கள் பிக்குமாருக்குக் கட்டுப்படுவதாகவே இவரது பேச்சுக்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே பிக்குமார் இவர்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள் என்று முழுமையாக நம்புவதற்கில்லை என்பதையும் சமூகம் புரிந்து, அதற்கேற்ற வகையில் தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

## கண்டி... (07 ஆம் பக்கத் தொடர்)



நான் அறிந்த வகையில் இஸ்லாமிய மதத்தில் ஒரு மையப்படுத்தப்பட்ட ஆளுகையின் கீழ் இஸ்லாமிய சட்டங்கள் அழகிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றன. கிறிஸ்தவ மதத்திலும் வத்திக்கானை மையப்படுத்திய ஆளுகை உள்ளது. ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு மதகுருக்கள் நியமிக்கப்படுகிறார்கள். தேவையானால் நீக்குவார்கள். ஆனால் பௌத்த சமயத்தில் பெயருக்கு மாத்திரமே எல்லாம் உள்ளது. அந்தப் பீடத்தின் தலைவர், இந்தப் பீடத்தின் தலைவர் என்று கூறுவார்கள்தான். ஆனால் எல்லாம் பெயரளவில் மாத்திரமே.

நானும் நீதித்துறைக்கு பொறுப்பானதொரு பீடாதிபதியாக உள்ளேன். ஆனால் அதிகாரங்கள் இல்லை. நிகாயாக்களுக்கு பொறுப்பான தலைமை பௌத்த பீடாதி பதிகள் உள்ளார் கள். ஆனால் அவர்கள் சொல்வதை பைசாவுக்கும் கணக்கில் எடுத்து யாரும் கட்டுப்பட்டது கிடையாது. நிகாயாக்களுக்கு பொறுப்பான பீடாதிபதிகள் கீழ் நிலையிலுள்ள தேரர்கள் குறித்து கண் திறந்தாவது பார்ப்பதில்லை. இதனால் இரு தரப்பும் இரு முனையிலுள்ளது. யாரும் யாரையும் கட்டுப்படுத்துவதில்லை. இதுவே யதார்த்தம். இதனாலேயே நான் அன்று பிக்குகள் ஒழுக்கக் கோவையொன்றை கொண்டு வருவதற்காக வேண்டி பாடுபட்டேன்.

பிக்குகள் ஒரு கொள்கைத் திட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து தண்டணை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. சில தேரர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தச் சட்டக் கோவையை கொண்டு வர இடமளிக்கவில்லை. பௌத்த மதத்தில் உள்ள தேரர்களைக் கட்டுப்படுத்த மதத்திற்குள்ளால் தேரர்கள் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

- **இது போன்ற சம்பவங்கள் இதன் பின்னர் ஏற்படாமல் இருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்?**

நான் ஏற்கனவே கூறியது போன்று சட்ட ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். திகன, தெல்தெனிய பகுதிகளில் கலவரத்தை மூட்டியவர்களுக்கு தராதரம் பாராது கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை வழங்கினாலும் பரவாயில்லை. இது போன்ற சம்பவங்களை செய்யாதிருக்க மறக்க முடியாத தண்டனைகளைக் கொடுக்க வேண்டும்.

## போலிக் கருத்து... (04 ஆம் பக்கத் தொடர்)

இதன் மூலம் தெளிவாவது என்னவெனில், சிங்கள, பௌத்தர்கள் இந்நாட்டில் அழிவுக்கு உட்பட்டு வருவதாக சில கடும் போக்கு சக்திகள் கூச்சலிடுவது, மூட நம்பிக்கையும் போலிச் செய்தியுமேயன்றி அது உண்மையான தகவலல்ல என்பதாகும்.

மேற்படி தரவுகளினூடாக தெளிவாகும் மற்றொரு விடயம் என்னவெனில் சில தசாப்தங்களுக்கு முன்னர் இந்நாட்டில் 72 வீதமாக காணப்பட்ட சிங்கள பௌத்த சனத்தொகை தற்பொழுது 67 வீதமாக குறைந்திருப்பதாக Lanka C News இணையதளத்தில் தென் மாகாண ஆளுநர் கூறியிருப்பதாக குறிப் பிடப்பட்டிருக்கும் செய்தி முழுமையானதொரு போலிச் செய்தி என்பது நிரூபணமாகிறது.

இந்நாட்டின் சனத்தொகை வரலாற்றில் பௌத்தர்களின் சனத்தொகை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 72 வீதமாகக் காணப்படவில்லை. 1981 வரையில் இந்நாட்டின் பௌத்தர்களின் சனத்தொகை 70 வீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டுள்ளது. 2012 இல் மாத்திரமே இந்நாட்டின் பௌத்த சனத்தொகை 70 வீதத்தைத் தாண்டியது.

இந்த அடிப்படையிலேயே மக்கள் உள்ளங்களை நாசப்படுத்துகின்ற நாட்டை வன்முறையின் பக்கம் தள்ளுகின்ற போலிச் செய்திகள் உருப்பெறுகின்றன. முன்னேற்றமடைந்த நாடுகளில் இவ்வாறான போலிச் செய்திகளின் நம்பகத்தன்மையை பரீட்சிப்பதற்கு பல்வேறு தகவல் பரீட்சிப்பு (Fact Checking) முறைகள் அமுலில் உள்ளன. எமது நாட்டில் அவ்வாறான முறைமைகள் இல்லாமையினால் யார் எதைச் சொன்னாலும் அது தொடர்பில் நாம் ஆழமாகச் சிந்தித்து, அங்கீகரிக்கப்பட்ட ஆதாரங்களுக்கூடாக அவற்றின் உண்மை நிலையை கண்டறிய வேண்டும்.

''கியன்னா கெஸே கீவத், அஸன்னா சிஹிபுத்தியென் எஸிய யுதுய'' (சொல்பவர் எதைச் சொன்னாலும், செவிமடுப்பவர் அறிவுபூர்வமாக செவிமடுக்க வேண்டும்.)


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - | 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - | ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - | 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - | 4700.00 |
| | | | | | | | சீனா | - | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது [illegible]

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline [illegible] People's Bank A/c [illegible]8164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணங்களைப் பூட்ட வேண்டாம்

முல்லா ஒரு புதிய சுவர் கடிகாரம் வாங்கி வந்தார். அதை சுவரில் மாட்ட ஆணி அடிக்க அவரிடம் சுத்தியல் இல்லை! பக்கத்து வீட்டுக்காரரிடம் கேட்க வேண்டும். நேரம் இரவாகிவிட்டது. இந்நேரம் போய் கேட்பது சரி இல்லை. மறுநாள் காலையில் கேட்கலாம் என நினைத்து தூங்கச் சென்றார்.

மறுநாள் காலை எழுந்ததும் கடிகாரம் நினைவுக்கு வந்தது. பக்கத்து வீட்டுக்காரரிடம் சுத்தியல் கேட்க எண்ணியபோது அன்று வெள்ளிக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது! இன்று போய் கேட்டால் ஏதாவது நினைத்துக் கொள்வாரோ என எண்ணி அன்றும் சுத்தியல் வாங்கவில்லை!.

மறுநாள் போய் கேட்க முடிவு செய்து பக்கத்து வீட்டை நெருங்கினார். பக்கத்து வீட்டில் நிறைய விருந்தினர்கள் வந்திருப்பதை பார்த்து கேட்காமலே திரும்பினார்.

இப்படி பல காரணங்களினால் ஒரு வாரமாகியும் முல்லாவால் கடிகாரத்தை மாட்ட முடியவில்லை! அன்று வாங்கி வந்த கடிகாரம் அவரை பார்த்து சிரிப்பது போல இருந்தது. உடனே விடுவிடு என பக்கத்து வீட்டுக்குச் சென்றார். பக்கத்து வீட்டுக்காரரைப் பார்த்து'' உன் சுத்தியலை நீயே வைத்துக் கொள்! எனக்குத் தேவையில்லை'' பொல்லாத சுத்தியல்! நீ மட்டும் தான் சுத்தியல் வைத்திருக்கின்றாயா?'' என கோபமாகப் பேசினார்.

பக்கத்து வீட்டுக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை! பரிதாபமாக முல்லாவை பார்த்தார். நம்மில் பலரும் இப்படித் தான் மனதில் உள்ளதை தெளிவாகப் பேசாமல் மனதில் ஒன்றை வைத்து பேசி பிரச்சினைகளுக்கு காரணமாகின்றோம் என்பதே இக்கதையின் நீதி!!



# பேராசை பெருநஷ்டம்

ஒரு பிச்சைக்காரர் விலையுயர்ந்த வைரத்தை வழியில் கண்டெடுத்தார்.

அதன் மதிப்பு என்னவென்று தெரியாமலே அதை தன்னுடனிருந்த கழுதையின் காதில் மாட்டிவிட்டார்.

இதை கண்காணித்துக்கொண்டிருந்த ஒரு வைரவியாபாரி அவரிடம் சென்று ''இந்த கல்லை எனக்குக் கொடுத்தால் நான் உனக்கு பணந்தருகிறேன், எவ்வளவு வேண்டும் கேள்'' என்றார்.

உடனே பிச்சைக்காரர், ''அப்படியானால் ஒரு ரூபாய் தந்து விட்டு இந்தக் கல்லை வைத்துக்கொள்'' என்றார்.

அதற்கு, வைர வியாபாரி இன்னும் குறைவாக வாங்கும் எண்ணத்துடன் ''ஒரு ரூபாய் அதிகம்! நான் உனக்கு 50 பைசா தருகிறேன். இல்லையென்றால் வேண்டாம்'' என்றார்.

பிச்சைக்காரர், ''அப்படியானால் பரவாயில்லை. அது இந்தக் கழுதையின் காதிலேயே இருக்கட்டும்'' என்றவாறே நடக்கலானார். வைர வியாபாரி, எப்படியும் அந்த பிச்சைக்காரர் தன்னிடம் அதை 50 பைசாவுக்குத் தந்து விடுவார் என்ற எண்ணத்துடன் காத்திருந்தார்.

அதற்குள் அங்குவந்த இன்னொரு வியாபாரி அந்த பிச்சைக்காரரிடம் 1000 ரூபாய் தந்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டார்.

இதை சற்றுமெதிர்பாராத முதல் வைர வியாபாரி அதிர்ச்சியுடன், ''அட அடிமுட்டாளே! கோடி ரூபாய் மதிப்புள்ள வைரத்தை வெறும் ஆயிரத்துக்குக் கொடுத்து விட்டு இவ்வளவு சந்தோசமாகச் செல்கிறாயே! நன்றாக ஏமாந்து விட்டாய்'' என்றார்.

அதைக் கேட்ட பிச்சைக்காரர், பலத்த சிரிப்புடன் ''யார் முட்டாள்? எனக்கு அதன் மதிப்புத் தெரியாது. அதனால் அதை இந்த விலைக்கு விற்றுவிட்டேன். மேலும் எனக்கு இதுவே மிகப் பெரிய தொகை. எனவே நான் மிகுந்த மகிழ்வுடனிருக்கிறேன். அதன் மதிப்பு தெரிந்தும் வெறும் 50 பைசாவிற்காக அதை இழந்துவிட்டாய். இது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்'' என்றவாறே நடக்கலானார்.

நீதி: பேராசை பெருநஷ்டம் !!!

# ஆளுமைத் திறன்

ஆளுமைத் திறன் என்பது ஒருவனுடைய சிந்தனையால் அல்லது செயலால் பிறரிடம் ஏற்படும் பாதிப்பை குறிக்கிறது. ஆழ்ந்த, தெளிவான மற்றும் கூர்மையான மனநிலை உள்ளவனின் ஆளுமை பிறரிடம் அதிகமான பாதிப்பை ஏற்படுத்துகிறது (உதாரனம்: மகாத்மா கந்தி)

தனிமனிதனின் ஆளுமைத் திறன் அவன் வாழ்க்கையையே மாற்றி அமைக்கிறது. ஒட்டுமொத்த மக்களின் ஆளுமைத் திறன் சமுதாயத்தையே மாற்றியமைக்கிறது.

ஒருவனுடைய ஈர்ப்பு, ஏற்பும் அவனுடைய ஆளுமைத் திறனைப் பொறுத்தே அமைகிறது. பொதுவாக பலமான மனநிலை உள்ளவனின் ஆளுமைத் திறன் சற்று பலம் பொருந்தியதாகவும், பலவீன மனநிலை உள்ளவனின் ஆளுமைத் திறன் சற்று குறைந்தும் காணப்படுகிறது.

தொடர்ச்சியான பழக்கம், சீரான சிந்தனை, ஆழ்ந்த மனநிலை, ஒருவனுடைய ஆளுமைத் திறனை அதிகரிக்கிறது. இவை மற்றவரிடமிருந்து அவனை சற்று உயர்வான இடத்தில் வைக்கிறது.

''அனைத்து சக்திகளும் உன்னில் உள்ளன; உன்னால் எதையும், எல்லாவற்றையும் சாதிக்க முடியும்; இதில் நம்பிக்கை கொள்ளுங்கள், பலவீனன் என்று ஒருபோதும் நம்பாதீர்கள். எழுந்திருங்கள்,

# எண்ணங்கள்

*எண்ணங்களே வாழ்க்கையை அமைக்கின்றன. ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களே அவனது வாழ்க்கைக்கு காரணமாய் அமைகிறது. நல்ல எண்ணங்கள், நல்ல சிந்தனைகள், நல்ல சூழ்நிலையை உருவாக்குகின்றன. தீய எண்ணங்கள், தீய சிந்தனைகள், தீய சூழ்நிலையை உருவாக்குகின்றன.*

*இந்த பிரபஞ்சம் முழுவதுமே எண்ண அலைகளால் சூழப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும், சுற்றுப் புறமும், செயல்பாடுகளும் இந்த எண்ண அலைகளாலேயே வழிநடத்தப்படுகின்றன.*

*நல்ல சிந்தனையை விதைக்கும் மனிதன் நல்ல எண்ண அலைகளால் ஈர்க்கப்படுகிறான். அதே எண்ண அலைகள் கொண்ட மற்றவர்களும் அவன்பால் ஈர்க்கப்படுகிறார்கள். அதேபோல் தீய சிந்தனையை விதைக்கும் மனிதன் தீய எண்ண அலைகளால் ஈர்க்கப்படுகிறான்.*

*நல்ல எண்ணங்களை விதைப்போம், நல்ல சமுதாயத்தை உருவாக்குவோம்.*

*''மனமிருந்தால் மார்க்கமுண்டு.''*

# எங்கிருந்து நான் வருகிறேன்



*நான் பூமியில் இருந்து வருகிறேன்*
*பூமிக்கு வருகிறேன்*
*ஆபிரிக்காவின் இதயத்திலிருந்து*
*ஆசியாவின் சிறுநீரகங்களிலிருந்து*
*இந்தியாவிலிருந்து வாசனைத்*
*திரவியங்களுடன் வருகிறேன்*

*ஆழமான ஒரு அமேஸன் காட்டிலிருந்து*
*ஐவரி நிலத்திலிருந்து*
*திபேத்திய புல்வெளியிலிருந்து வருகிறேன்*
*இன்னும் அதி தொலைவிலிருந்து*
*என்னைச் சூழ உள்ள எல்லா இடங்களிலுமிருந்து*
*எங்கு மலைகள் மரங்கள் அருவிகள் கடல்கள்*
*இருக்கின்றனவோ அங்கிருந்து*
*இங்கிருந்து அங்கிருந்து எங்குமிருந்து*
*மத்தியதரைக் கடலின் கர்ப்பத்திலிருந்து வருகிறேன்*

*ஒரு மனக் காயத்தின் வடுவிலிருந்து*
*மூடப்பட்ட எல்லைகளிலிருந்து*
*ஆயிரம் கூடாரங்களால் நிரம்பியிருக்கும் ஒரு முகாமிலிருந்து*
*அய்லான் குர்தி இறந்து கிடந்த கடற்கரையிலிருந்து வருகிறேன்*

*ஒரு துப்பாக்கி ரவையின் காயத்திலிருந்து*
*தனிமையிலிருக்கும் ஒரு குழந்தையின் முகத்திலிருந்து*
*ஒற்றைத் தாயின் பெருமூச்சிலிருந்து*
*மூழ்கவிருக்கும் காற்றூதிய படகின் ஒரு வெட்டிலிருந்து*

*ஐம்பது பேருக்குப் பகிர்ந்தளிக்கும் ஒரு தண்ணீர் போத்தலிலிருந்து*
*குறுநடை போடும் ஒரு குழந்தையின் மூக்கில் உறைந்திருக்கும் சளியிலிருந்து*
*ஒரு தந்தையின் கன்னத்தில் வழியும் ஒரு துளிக் கண்ணீரிலிருந்து*
*ஒரு பசித்த வயிற்றிலிருந்து*

*நான் ஒருமுறை இங்கிருந்திருக்கிறேன் எனும் சுவர்க் கிறுக்கலிலிருந்து*
*நான் வாழ்க்கையை நேசிக்கிறேன் எனும் இன்னொரு மரக் கிறுக்கலிலிருந்து*
*ஒரு காணாமற்போன அங்கத்திலிருந்து*
*ஒரு மனிதனைப் போல எல்லாவற்றுடனும்*
*எனக்கான இடத்தைப் பகிர்ந்து கொள்ள நான் வருகிறேன்*

**ஆமிர் தர்வீஷ்**
**தமிழில்: இன்ஸாப் ஸலாஹுதீன்**



புலம்பெயர்ந்த ஒருவரிடம் நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் அனுபவத்தைத் தருகிறது இக்கவிதை. இக்கவிதையை எழுதியவர் குர்தி இனத்தைச் சேர்ந்த சிரியக் கவிஞர் ஆமிர் தர்வீஷ். இவர் குர்திஸ்தான் குறித்து எழுதிய கவிதையின் பின்னரே சிரிய அதிகாரிகள் அவரது எழுத்துக்கள் குறித்து அறிந்து கொண்டு அவரைத் தேட ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து அங்கிருந்து புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து இப்போது ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வருகிறார்.

## பாஸிரா மைந்தன் எழுதிய

# இந்த சில நாட்களாய்




*விலை: 200/-*
*வெளியீடு :* **சலனம்**

அருளாளனின் பெயரால்...

அல்ஹம்துலில்லாஹ். மனதெங்கும் மகிழ்ச்சி பிரவகித்து ஓடும் அழகிய தருணமிது. நீண்ட நாள் எதிர்பார்ப்பொன்று நிறைவேறுகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்வுகள் எம்மைக் கடந்து செல்கின்றன. அவை சந்தோஷத்தை, சோகத்தை, ஆத்திரத்தை, அழுகையை, புன்னகையை ஏற்படுத்திச் செல்கின்றன. சில போது அழகிய நினைவாக அவை மனதில் சேகரமாகின்றன. மற்றும் சிலபோது ஆறாத காயமாக மனதில் பதிந்துவிடுகின்றன. அத்தகைய நிகழ்வுகளும் சம்பவங்களுமே இங்கு கதைகளாக மொட்டவிழ்கின்றன.

இத்தொகுதியிலுள்ள கதைகள் 2005 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவை. ''இந்த சில நாட்களாய்'' கதை நானும் நண்பர்களும் இணைந்து வெளியிட்ட சலனம் சஞ்சிகையில் 2005 ஆம் ஆண்டுகளில் வெளியானது. இறுதியாக எழுதப்பட்ட கதை உப்புல தேசிக்காய். இக்கதை மாத்திரமே எந்தவொரு ஊடகத்திலும் பிரசுரமாகாத கதையாகும். ஏனைய கதைகள் சலனம், வைகறை, மீள் பார்வை, நிவ்ஸ்வீவ் ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்தவை.

இத்தொகுதியிலுள்ள பெரும்பாலான கதைகள் உண்மைச் சம்பவங்கள், நிகழ்வுகளை தழுவியவை. இந்த சில நாட்களாய், நிலவோடு கதைபேசி..., பால்மா வாங்கிட்டு வாங்க போன்ற கதைகள் எனது திருமணத்திற்கு முன்னர் எழுதப்பட்டவை. எனினும், அவை எனது வாழ்வின் நிகழ்வுகளாக பிற்காலத்தில் மாறியமை ஆச்சரியம்தான். வண்டிக்காரன் முழுமையான கற்பனை கதை. இலக்கு, நீதம் என்பன அறபுலகின் பிரபல சிறுகதையாளர் நஜீப் அல் கைலானியின் கதைகள். அவை என்னால் மொழிபெயர்க்கப் பட்டவை.

எனது கதைகளின் முதல் வாசகன் நான்தான். சில கதைகளை வாசித்து சிரித்திருக்கிறேன். இன்னும் சிலபோது நடுங்கியிருக்கிறேன். சிலபோது அழுதிருக்கிறேன். மொத்தத்தில் நான் அவற்றை உணர்வுபூர்வமாக ரசித்திருக்கிறேன்.

என்னை எழுதுவதற்கு தூண்டிய அடிப்படைக் காரணம் எனது தந்தை வாங்கி வந்த செய்திப் பத்திரிகைகளாகத் தான் இருக்க வேண்டும். பாடசாலை நூலகம், பிரதேச சபை நூலகம் என்பனவும் பல ஜனரஞ்சக எழுத்தாளர்களின் புத்தகங்களை வாசிப்பதற்கு துணைநின்றன. பின்னர் ஜாமிஆ நளீமிய்யாவும் அதன் விரிவுரையாளர்கள், நண்பர்களும் அதன் நூலகமும் என்னை புடம்போட்டன. மீள்பார்வை ஊடக மையத்தில் பணியாற்றக் கிடைத்தமை எனது எழுத்துப் பணி தொடர களமாய் அமைந்தது. இவ்வனைத்து சந்தர்ப்பங்களும் அல்லாஹ்வின் மிகப் பெரும் அருள்கள், அல்ஹம்துலில்லாஹ்.

இனியென்ன, வாசியுங்கள். உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுங்கள். இந்நூல் வெளியீட்டில் பங்களித்த அனைவருக்கும் நன்றிகள்.

**பாஸிரா மைந்தன் (ஏ.ஸீ.எம். நதீர்)**
0774464123 - mnadeer@gmail.com
fasiramainthan81.blogspot.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதிப் போட்டியில் ஸாஹிரா - ஹமீட் அல் ஹுஸைனி பலப்பரீட்சை

## ஜனாதிபதிக் கிண்ண கால்பந்து தொடர்

கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியின் 80ஆம் ஆண்டு மாணவர்கள் ஏற்பாடு செய்து நடாத்தும் ஜனாதிபதிக் கிண்ண பாடசாலைகள் கால்பந்து தொடரின் இறுதிப்போட்டிக்கு மருதானை ஸாஹிரா கல்லூரியும் ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியும் தெரிவாகியுள்ளன. இறுதிப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியை ஏற்பாடு செய்து நடாத்தும் ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி மற்றும் அழைப்பு அணிகள் உள்ளடங்களாக மொத்தம் 20 அணிகள் பங்கு கொண்ட இந்த தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி மற்றும் லும்பினி கல்லூரி அணிகளுக்கு இடையில் கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் மைதானத்தில் இடம்பெற்ற மோதலுடன் ஆரம்பமாகியது.

கடந்த மார்ச் மாதம் 04ஆம் திகதி நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியும் மருதானை ஸாஹிரா கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. இந்தப் போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் மருதானை ஸாஹிரா கல்லூரி இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொடஹேன புனித பெனடிக்ட் கல்லூரிக்கு எதிராக 4-0 என்ற கோல்களை பெற்று கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. இரு அணிகளுக்கிடையிலான தீர்மானம்மிக்க இறுதிப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழாவிற்கான இலங்கை குழாம் அறிவிப்பு




அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள 21 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் 13 வகையான போட்டிகளுக்காக இலங்கை சார்பில் 79 வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட 40 அதிகாரிகள் அடங்கலாக மொத்தம் 139 பேர் கலந்து கொள்ளவுள்ளதாக தேசிய ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

1930ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழா முதற் தடவையாக நடைபெற்ற போதிலும், 1958ஆம் ஆண்டுதான் இலங்கையிலிருந்து வீரர்கள் இப்போட்டித் தொடரில் முதற்தடவையாக கலந்து கொண்டனர்.

அன்றிலிருந்து இன்று வரை 4 தங்கம், 7 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்தமாக 14 பதக்கங்களை இலங்கை வென்றுள்ளது. எனினும், 1994ஆம் ஆண்டு கனடாவின் விக்டோரியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழாவில் இலங்கை அணி ஒரு தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 16ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டமையே இலங்கை அணியின் சிறந்த பெறுபேறாக அமைந்திருந்தது.

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் கீழ் இருந்து சுதந்திரமடைந்த சுமார் 53 நாடுகள் பங்கேற்கும் இவ்விளையாட்டு விழாவானது உலகின் 2ஆவது ஒலிம்பிக் போட்டிகள் என வர்ணிக்கப்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற இவ்விளையாட்டு விழாவின் 21 ஆவது அத்தியாயம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவின் கோல்ட்கோஸ்ட் நகரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் முதலாவது செயற்கை புற்தரை கால்பந்து மைதானம் திறந்துவைப்பு




கோட்டே - பெத்தகானவில் உள்ள இலங்கை கால்பந்து பயிற்சி மையத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது செயற்கை புற்தரை கால்பந்து மைதானத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடந்த சனிக்கிழமை (10) உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

சர்வதேச கால்பந்து போட்டிகளை நடத்து வதற்கு உகந்த வகையில் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நிதி உதவியினால் (சுமார் ஏழரைக் கோடி ரூபா செலவில்) இந்த செயற்கை புற்தரை கால்பந்து மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 40 கால்பந்து வீரர்களுக்கும், 15 அதிகாரிகளுக்கும் தங்கியிருந்து பயிற்சிகளைப் பெறுவதற்கான அனைத்து வசதிகளையும் கொண்ட விடுதி, உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கேட்போர்கூடமொன்றும் இந்த வளாகத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த மைதானத்தில் டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் ஒருசில போட்டிகள் நடத்தப்பட்ட போதிலும், நிர்மானப் பணிகள் முழுமையாக நிறைவு பெறாத காரணத் தால் வீரர்களின் பாவனைக்காக இந்த மைதானம் கையளிக்கப்படவில்லை.


## ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்

முஸ்லிம் பெண்களுக்கான உயர் இஸ்லாமிய கலாபீடம் குறீகொடுவ பஹமுன.

ISO 9001:2008

After GCE O/L 2017

### புதிய மாணவியர் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை – 2018

**ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்**

- ISO தரச் சான்றிதழ் பெற்ற மகளிருக்கான நாட்டின் முன்னணி கல்வி நிறுவனம்.
- ஆழமான இஸ்லாமியக் கலைகள் போதிக்கப்படுகின்ற உயர் இஸ்லாமிய கலா நிலையம்.
- GCE (A/L) கலைத்துறையில் 100% சித்தியை உருவாக்குகின்ற உயர் தரக் கல்வி நிறுவனம்.
- தகவல் தொழிநுட்பத்தில் NVQ III தரச் சான்றிதழ் பெற்ற தகவல் தொழிநுட்ப பயிற்சி நிலையம்.
- அறபு,ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழிகளில் தேர்ச்சிகளை ஏற்படுத்துகின்ற மொழிகள் கற்கையகம்.
- குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு மனை முகாமைத்துவம் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கும் பயிற்சி நிறுவனம்.
- சுய ஆள் உருவாக்கம், முரண்பாட்டு முகாமைத்துவம் போன்ற மென் கலைகளில் (Soft Skills) திறன்களை உருவாக்குகின்ற கலைக் கூடம்.
- GCE (A/L) உயர் முறைமைகள் தொழிநுட்பவியல் (Bio Technology) பிரிவுப் பாடப் போதனைகள்.

**இவையனைத்தையும் உள்ளடக்கியதொரு முழுமையான பாடத்திட்டம்.**

- பாதுகாப்பான மனோரம்யமான கிராமிய சூழலில் கல்வி,மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் முற்றிலும் இலவசம்.
- உணவுச் செலவுகளுக்காக மாத்திரம் ஒரு தொகை மாதாந்தம்.



**தகைமைகள்**

- 17 வயதிற்கு மேற்படாதிருத்தல்.
- 2017ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.
- அல் குர்ஆனை சரளமாக ஓதும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
- தேகாரோக்கியமுடையவராக இருத்தல்.

**நேர்முகப் பரீட்சை**

காலம் : வடக்கு கிழக்கு, மத்திய, வட மத்திய மாகணங்கள் 06.04.2018 (சனிக்கிழமை)
: வடமேல், மேல், தென், ஊவா, சப்ரகமுவ மாகணங்கள் 07.04.2018 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மு.ப.9.00 மணி முதல்
இடம் : ஹாதியா வளாகம்

**பரீட்சிக்கப்படும் ஆவணங்கள்**


- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி)
- பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த) பெறுபேற்றுச் சான்றிதழ்
- தேசிய அடையாள அட்டை

**Route map**

1. கொழும்பு (05) ▸ நாரம்மல ▸ கிளிம்பொள ▸ குரீகொட்டுவ
2. குருநாகல் ▸ நாரம்மல ▸ கிளிம்பொள ▸ குரீகொட்டுவ
3. வாரியபொல ▸ கிளிம்பொள ▸ குரீகொட்டுவ

Creations 0771383771

அதிபர்,
ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்.
மேலதிக தகவல்களுக்கு: 0724189712, 0767328233, 0715561317

கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய, அகுரணை பிரதேசங்களில் இனவாதிகளின் கோரத் தாக்குதலில் சேதமடைந்த முஸ்லிம்களுக்கு சொந்தமான உடைமைகளை படத்தில் காணலாம். (படங்கள்: அனஸ் அப்பாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.